மன்னா

# இலங்கை மக்களுடன் ஒருமைப்பாடு கொண்ட திருத்தந்தை

இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா ஏப்ரல் 21ஆம் திகதி அன்று காலை இலங்கையில் சில ஆலயங்கள் மற்றும் ஏனைய இடங்களில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகள் பற்றி 'ஊர்பி எத் ஓர்பி' ஆசீருக்குப்பின்னர் மிகுந்த கவலை மற்றும் வேதனையோடு பேசினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மிகவும் கொடூரமான இந்த வன்முறைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ சமுதாயம் மற்றும் ஏனையோருக்கு எனது ஆழ்ந்த ஒருமைப்பாட்டுணர்வைத் தெரிவிக்கின்றேன். இத்தாக்குதல் சமயத்தில் கிறிஸ்தவர்கள் செபத்தில் ஈடுபட்டிருந்துள்ளனர். இதில் இறந்தவர்கள், காயமுற்றவர்கள் மற்றும் இதனால் துன்புறும் அனைவருக்காகவும் செபிக்கின்றேன் என்றுரைத்தார் திருத்தந்தை.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் கத்தோலிக்க ஆலயம், நீர்கொழும்பு, ஷாங்ரி லா நட்சத்திர விடுதி, கிங்ஸ்பரி நட்சத்திர விடுதி, சின்னமான் கிராண்ட் நட்சத்திர விடுதி, மட்டக்களப்பு ஆகிய ஆறு இடங்களில் ஞாயிறு காலையில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளில் குறைந்தது 137 பேர் இறந்துள்ளனர் மற்றும், நானூறுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன. இலங்கையில் குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது செபங்களையும் ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தாலி மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து வளாகத்தில் கூடியிருந்த அனைவருக்கும், வானொலி மற்றும் தொலைக்காட்சி வழியாக இச்செய்தியைக் கேட்டுக்கொண்டிருக்கும் எல்லோருக்கும் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்களைச் சொன்னார்.



## உயிரிழந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக







இலங்கை வரலாற்றின் வார்த்தைகளால் வர்ணிக்கப்படமுடியாத பெரும் துன்பம் நிறைந்த, மனித நேயத்திற்கும், சமய நம்பிக்கைக்கும் எதிராக நடாத்தப்பட்ட கொடூரமான வெடிகுண்டுத் தாக்குதல் பல அப்பாவிகளின் உயிர்களை வாரிச் சென்றுவிட்டது. உலகின் மீட்பராம் இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா திருவழிபாட்டில் கலந்து கொண்ட இறைமக்கள் மீது நடாத்தப்பட்ட இத் தாக்குதல் இன்று பலருடைய இதயத்திலே ஆறாத துன்பக் காயமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது:

இந்த நிலையிலே இந்தக் கொடுமையினால் உயிரிழந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும், காயப்பட்டவர்கள் விரைவில் நலம் பெறவும், பாதிக்கப்பட்ட அனைவரின் குடும்பங்களுக்காகவும் இறையருள் வேண்டி 24.04.2019 புதன் கிழமை அன்று காலை 9.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.



மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்களும், துறவிகளும், பெருந்தொகையாக இத் திருப்பலியில் பங்கேற்று இச் சிறப்புக் கருத்திற்காகச் செபித்தனர். சமகால நிலைமையைக் கருத்திற்கொண்டு பொது இறைமக்களை இத் திருப்பலியில் கலந்து கொள்ள அழைக்கவில்லை.

## உரிய நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு ஆலோசனை

### - கர்தினால் மெல்கம் ரஞ்சித் -




நாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக திருப்தி கொள்ள முடியவில்லை எனப் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். மேலும், இலங்கையில் இடம்பெற்றுள்ள இந்த அசாதாரண நிலைமைக்கு அரசாங்கம் உரிய நடவடிக் கைகளை எடுக்காவிடின், வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் அரசியல் தலைவர்களிடத்தில் நாம் விசேடமாக ஒரு வேண்டுகோளை முன்வைக்கின்றோம். நாட்டில் தற்போது அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையால் அனைத்துத் தலைவர்களும் கட்சிபேதம் பாராது ஒன்றாக செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

14

## பிறந்த தின வாழ்த்துக்கள்



வைகாசி மாதம் 20ஆம் திகதி தன்னுடைய பிறந்த தினத்தை நினைவு கூறும் எம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களை மன்னார் மறைமாவட்ட குருக்கள், துறவறத்தார் பொதுநிலையினர் அனைவர் சார்பாகவும் அன்பு நிறைந்த வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா குடும்பம் மகிழ்கின்றது.

## இறையழைத்தல் தினம்

### – 12.05.2019 –

உலக இறை அழைத்தல் தினமானது ஒவ்வொரு ஆண்டும் பாஸ்காக் காலத்தில் நல்லாயன் ஞாயிறு அன்று நினைவு கூரப்படுகின்றது. இறைவனால் படைக்கப்பட்ட குடும்பமும், குடும்பத்தைச் சாந்த அனைத்து விடயங்களும் நவீன மயமாகிவரும் உலகத்தில் அகப்பட்டு இறை அழைத்தல்கள் குறைந்து கொண்டு வருகின்ற வேளையில் கிறிஸ்தவ குடும்பங்கள் இறை அழைத்தலுக்கு செவிமடுத்து இறை திருவுளத்திற்கு ஏற்ப வாழுகின்றபொழுது இறைவன் தன் விருப்பத்திற்கேற்ப தனக்கு வேண்டியவர்களை தேர்ந்து rfhsSfpyhu "இயேசு மலைமேல் ஏறி தாம் விரும்பியவர்களை தம்மிடம் வரவழைத்தார்." (மாற்கு. 3:13) ஆகவே உலக இறை அழைத்தல் தினத்தை நினைவுகூரும் நாம் இறையழைத்தல் எம் மறைமாவட்டத்திலும், பங்கிலும், குடும்பத்திலும் நிறைவாகக் கிடைக்க அறுவடையில் ஆண்டவரை மன்றாடுவோம்.

## இறந்த எம் உறவுகளை நினைவு கூறுவோம்

**இறுதிக்கட்டப்போரில் இறந்த எம் உறவுகள்: 18.05.2009**

எம் இலங்கைத் தேசத்தில் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற யுத்தத்தில் கொத்துக் கொத்தாக இறந்துபோன எம் குழந்தைகள், மாணவர்கள், இளையோர்கள், எம் பாசமுள்ள பெற்றோர், முதியோர் ஆகியோரை நினைவுகூறுகின்ற மாதமிது.

**உயிர்ப்புப் பெருவிழாவன்று இறந்த எம்உறவுகள்: 21.04.2019**

கடந்த உயிர்ப்புப் பெருவிழாவன்று பல ஆலயங்களிலும், பொது இடங்களிலும் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான குண்டுவெடிப்பில் இறந்துபோன எம் உறவுகளை நினைவுகூறுகின்றோம். இதன்பொழுது பாதிக்கப்பட்ட அனைவரையும் இறைவனுடைய அன்புக்கரங்களிற்கு ஒப்புக்கொடுக்கின்றோம்.

இறந்த உறவுகள் இறையமைதிபெறவும், பாதிக்கப்பட்டவர்கள் இறைவனுடைய இரக்கம் பெறவும், இனியும் இப்படியான தீமைகள் எம் தேசத்தில் நிகழாதிருக்கவும், தீவிரவாதம் மனிதக்குலத்தை விட்டு அகன்று போகவும் இறையாசீர் வேண்டி மன்னா ஆழ்ந்த அனுதாபங்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## உயிர்களை இணைப்பதும், மனிதத்தை வளர்ப்பதும் சமயமே.

இலங்கை நாடு பல பாரம்பரிய இனங்களையும், அவைகளைச் சார்ந்த கலை, இலக்கியம், மொழி, பண்பாடு, சமயம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட அழகிய நாடாகும். உலகத்தில் அதிகமான உல்லாசப் பயணிகளை வருடத்தின் முழு நாட்களிலும், தன்பால் ஈர்த்துக்கொள்ளும் இயற்கை வளம் நிறைந்த நாடாகும். ஆனால் இன்று பாதுகாப்பு இல்லாத நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பெறக்கூடிய சூழலிற்குத் தள்ளப்பட்டுள்ளது. ஏனெனில் காலத்திற்குக் காலம் பிரச்சினைகளும், குழப்பங்களும் பல வடிவங்களில் வந்து செல்கின்றன. இவற்றுள் இனப்பிரச்சினை, சமயப்பிரச்சினை ஆகிய இரண்டையும் தெளிவாக முன்வைக்கலாம்.

### இனப்போர்

நாட்டில் முப்பது வருடத்திற்கு மேலாக இனங்களுக்கிடையில் நடைபெற்ற யுத்தம் பல இலட்சம் உயிர்களைக் காவு கொண்டது. இதில் கோடிக்கணக்கான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன. ஆயிரக்கணக்கானோர் மன ரீதியாகப் பாதிக்கப்பட்டனர். பல்லாயிரக் கணக்கானோர் உடல் அவையவங்களை இழந்தனர். ஆயிரக்கணக்கானோர் அனாதைகளாக்கப்பட்டனர். இப்படிப்பல பாதிப்புக்களைச் சந்தித்த தமிழ் மக்கள் பத்து வருடங்கள் கடந்தும் இன்றும் அதிலிருந்து மீள முடியாமல் 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து கொண்டு இழப்புக்களோடும், சோகங்களோடும், வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். இவர்களின் இழப்புக்கள் ஈடுசெய்யப்படாமலிருக்க மீண்டும் மீண்டும் மக்கள் துன்பங்களை அனுபவிக்க யார் இந்தத் தீமைகளை (சமூக, சமய, அரசியல் தீமைகள்) அனுமதிப்பது? என்ற கேள்வி பலருடைய எண்ணங்களில் இன்று எழுகின்றது.

### மதம் சார்ந்த போர்

மனித வாழ்வோடு மிக நெருக்கமான ஒன்றாக சமயம் அமைகின்றது. சமயம் என்பது ஒரு மனிதனுடைய வாழ்வியல் ஆன்மீகமாகும். ஏனெனில் ஒரு மனிதனை ஒழுங்குபடுத்துவதும், வழிநடத்துவதும் அவன் பின்பற்றுகின்ற சமய ஆன்மீகமாகும். இன்று சமயம் என்ற பதத்தை மதம், திருமறை, மறை என்ற வார்த்தைகளால் அழைக்கின்றனர். ஆனால் இந்தச் சொற்களில் மதம் என்ற சொல்லை எதிர்மறையாகவும் நோக்கலாம்.

"மதம் என்றால் என்ன?" எனும் தமிழ் நூல் "ரொபேட் கிறின்" அவர்கள் பொஸ்ரன் நகரில் 1880ஆம் ஆண்டில் மதம் என்றால் என்ன? எனும் மையப் பொருள் பற்றி அவர் ஆற்றிய பேருரைகளின் தொகுப்பாகும். கடவுளின் பெயரால் நடைபெறும் தீய செயல்களையும், கடவுளின் தன்மையையும் இந் நூலில் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகின்றன. ஆகவே மதம் என்பது கடவுளைப் பயன்படுத்தி வன்முறை கலாச்சாரத்தை வளர்ப்பதாக அமைகின்றது.

கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் சமயம் என்ற சொல் புதிய மொழி பெயர்ப்பில் திருமறை என்று அழகாக அழைக்கப்படுகின்றது. இறைமகன் இயேசு ஒரு இனத்திற்காகவோ அல்லது குறிப்பிட்ட ஒரு சாராருக்காகவோ தம்மைக் கொடுக்கவில்லை. மாறாக உலகினர் அனைவரின் மீட்புக்காகவும் தன்னுயிரைக் கொடுத்தார். ஆகவே திருமுழுக்கின் மூலமாக கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழ அழைப்புப் பெற்றவர்கள் உலக மீட்புக்காக உழைக்கவேண்டும்.

### இறை உறவா? மதப்பற்றா?

"உன் கடவுளாகிய ஆண்டவரை உன் முழு இதயத்தோடும், முழு வலிமையோடும், முழு ஆற்றலோடும் அன்பு செய்வாயாக" "உன்னை அன்பு செய்வது போல் உனக்கு அடுத்திருப்பவனையும் அன்பு செய்வாயாக"

இவ்விரண்டு கட்டளைகளுமே கிறிஸ்தவத்தை முழுமைப் படுத்துகின்ற திருவிவிலியத்தின் முதன்மையான கட்டளைகளாகும். இதற்காகவே இறைவன் உலகத்தைப் படைத்தார். இவ்விரண்டு கட்டளைகளையும் மனிதன் மறந்து வாழ்ந்தபொழுது மனிதனைக் கண்டித்துத் திருத்துவதற்காகக் கடவுள் பல வடிவங்களில் அவனோடு பேசுகின்றார்.

(எபிரேயர் 1:1,2) "பலமுறை பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்."

கிறிஸ்தவத்தின் ஆழமான அர்த்தத்தை உணராமல் சமயத்தில் அதீத பற்றுக் கொண்டு சமயத்தின் மையமாக இருக்கின்ற இறைவனையும், இறைவனைச் சார்ந்த விழுமியங்களையும் வாழுகின்ற பொழுது சமயத்தால் மனிதவாழ்வு அர்த்தம் காண்கின்றது. மனிதன் இறைவன் காட்டுகின்ற விழுமியங்களை வாழாது தன்னைச்சார்ந்த கொள்கைகளை மையப்படுத்தி வாழும் பொழுது மதத் தீவிரவாதமாக மாறுகின்றது.

இறைவனை மையப்படுத்தி வாழுவோம். எமக்கு அடுத்திருப்பவரை அன்பு செய்வோம். அவர்கள் பின்பற்றுகின்ற சமயங்களை மதிப்போம். இறைவனுக்குள் அன்பு உலகத்தைக் கட்டியெழுப்புவோம். ●

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா பதிப்பாசிரியர்.*

## மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய குரு



கற்கடந்தகுளப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரன் ஜெஸ்மன்ராஜ் வைகாசி 23ஆம் திகதி புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களால் புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார். திரு.திருமதி. சீமான்பிள்ளை லூர்துநாயகம் கத்தரினாள் ஆகியோருக்கு இரண்டாவது பிள்ளையாக இசைமாலைத் தாழ்வில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மன். இசைமாலைத்தாழ்வு RCTMS, மன். சூரியகட்டைக்காடு RCTMS பாடசாலைகளிலும், இடைநிலைக்கல்வியை மன். முருங்கன் மத்திய மகாவித்தியாலயத்திலும், மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியிலும், குருத்துவ ஆரம்ப மெய்யியலை களுத்துறை தஹாம் செவனயிலும், மெய்யியலை கண்டி தேசிய குருமடத்திலும், இறையியலை யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்தார். இவரை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி மகிழ்கின்றது. ●

## வங்காலைப் பங்கின் 36ஆவது புதிய குரு



கடந்த 04.05.2019 அன்று வங்காலைப் பங்கைச் சேர்ந்த அருட்பணி. யூலியஸ் மெல்ராஜ் றெவ்வல் அடிகளார் கண்டி அம்பிட்டிய பங்கின் புனித மரியாள் பேராலயத்தில் நற்கருணைநாதர் சபைக்கு கண்டி மறைமாவட்ட ஆயரால் அருட்பொழிவு செய்யப்பட்டார். இவர் வங்காலைப் பங்கின் 36வது குருமணி ஆவார். பணிக்குருவாக அருட்பொழிவு செய்யப்பட்ட அருட்பணி. யூலியஸ் மெல்ராஜ் றெவ்வல் அடிகளாரின் பணி சிறக்க மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது. ●

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி - 2019

### மே

01. தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித சூசையப்பர் விழா - கன்னாட்டி, புதுக்கமம், வேப்பங்குளம், கற்கிடந்தகுளம், அச்சங்குளம், பூம்புகார், மானங்கவெளி.
 - குழந்தையேசு திருவிழா - பாவிலுப்பட்டான் கட்டிகுடியிருப்பு.
03. புனித யுதாததேயு - காயக்குளி
 - திருச்சிலுவை விழா - கள்ளிகட்டைக்காடு.
 - புனித பிலிப்பு அப்போஸ்தலர் - தேனுடையான் முள்ளிக்கண்டல்.
04. தூய வேளாங்கண்ணி ஆலயம் - பத்தினியார் மகிழன்குளம்.
05. இறைபிரக்க ஆண்டவர் ஆலயம் - இருதயபுரம். (ஆள்காட்டிவெளி)
 - மரியமாதா ஆலயம் - பெரியநாவற்குளம்.
 - புனித யோசப்வாஸ் - சௌத்பார்.
11. புதுமை மாதா - குகன்நகர்.
13. தூய பற்றிமாமாதா திருவிழா - பற்றிமா நகர் (ஓமந்தை), அண்ணாநகர்.
 - வேளாங்கண்ணி மாதா - தேத்தாவாடி மருதங்குளம்.
15. ஆரோக்கிய அன்னை திருவிழா - களிமோட்டை,
 - புனித வேளாங்கண்ணி - இரணை இலுப்பக்குளம்
 - புனித யூதாததேயு - ஒலிமடு.
18. கடந்தகால போரினால் எம் நாட்டில் இறந்த அனைவரையும் நினைவு கூரும் நாள்.
19. புனித பத்திமா அன்னை ஆலயத் திருவிழா - ஜீவபுரம், மணிபுரம்
 - புனித சூசையப்பர் திருவிழா - சேமமடு
20. குழந்தை இயேசு திருவிழா - சமணங்குளம்.
 - அடைக்கல அன்னை - தட்டாங்குளம்.
 - புனித சவேரியார் திருவிழா - சின்னப்பண்டிவிரிச்சான், செட்டியார் மகன் கட்டையடம்பன், தேவன்பிட்டி.
 - மேதகு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை. மன்னார் ஆயர் - பிறந்த தினம்.
26. புனித பிலிப்பு நேரியார் விழா - ஆத்திக்குழி, கொன்னயன் குடியிருப்பு, இசைமாலைத்தாழ்வு.
 - புனித இராக்கினி மாதா ஆலயம் - இராசேந்திரங்குளம்.
30. நீற்றம்மா திருவிழா - உமநகரி
 - செபமாலை அன்னை திருவிழா - மழுவராயன் கட்டையடம்பன்
 - கர்த்தர் ஆலயத் திருவிழா - கீரி, சுண்டிக்குளி.
31. புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயம் - மாதிரி கிராமம்
 - சகாயமாதா - பாரதிபுரம்.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்

## புனித யோசேவ்வாஸ் கன்னியர் சபையின் நித்திய அர்ப்பண விழா



இந்தியா, இலங்கை நாட்டைச் சேர்ந்த புனித யோசேவ்வாஸ் கன்னியர் சபையைச் சேர்ந்த பன்னிரெண்டு அருட்சகோரிகள் தங்கள் துறவற வாழ்வின் நித்திய அர்ப்பணத்தை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் இச் சபையின் தலைவி அருட்சகோதரி. மேரி டாலர் ஆகியோர் முன்னிலையில் வழங்கும் புனித வைபவம் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் முப்படைகளின் பலத்த பாதுகாப்புடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதாவது 12.05.2019 அன்று காலை 6.30 மணிக்கு நடைபெற்றது.

பேசாலைப் பங்குத்தந்தை அருட்பணி. தேவராஜா கொடுத்தோர் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்பணி. ரவிச்சந்திரன், இந்தியா திருச்சி மறைமாவட்டம் பரிசுத்த ஆவி சபையைச் சேர்ந்த அருட்பணி. டேவிற், இலங்கை திருவுளப்பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்பணி. டேவீன் கூஞ்சு, மன்னார் கலையருவி இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்பணி. அ.லக்ஸ்ரன் டி சில்வா ஆகியோர் இணைந்து இவ்விழா நிகழ்வு திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். ●

## வேப்பங்குளம் பங்கில் முதல்நன்மை கொண்டாட்டம்



புனித சூசையப்பர் ஆலயத்தில் 18 சிறுவர்களுக்கு பங்குத்தந்தை அருட்பணி. செபஸ்தியாம்பிள்ளை இராஜநாயகத்தினால் முதல்நன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டது. ●

### உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

-மன்னா நிர்வாகம்-

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# புனித யோசேவ்வாசின் அருட்சகோதரிகள்

## பன்னிரெண்டு பேர் இறுதி வார்த்தைப்பாடு பெற்றுக்கொண்டார்கள்


அருட்சகோதரி
சி. சுனித்தாசிங்


அருட்சகோதரி
சலேத் சசிகலா


அருட்சகோதரி
ஆ. சகாயமேரி


அருட்சகோதரி
அ. சூசான்


அருட்சகோதரி
மா. ஜெபமலர்


அருட்சகோதரி
ஆ. அமலி


அருட்சகோதரி
ப. பெல்லா


அருட்சகோதரி
ஜெ. கிறிஸ்டல் ஜெகா


அருட்சகோதரி
பி. விமலா தூயமேரி


அருட்சகோதரி
கே. லீனா


அருட்சகோதரி
இரா. அன்னமேரி


அருட்சகோதரி
இ. லூசியா

புனித யோசேவ்வாசின் அருட்சகோதரிகள் சபையின் ஊடாக நிரந்தரமாக பன்னிரெண்டு இளம் அருட்சகோதரிகள் இறைவனுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கின்றார்கள். இவர்களில் இரண்டு பேர் இலங்கை, கண்டியைச் சேர்ந்தவர்களும், பத்துப்பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்களுமாவார். இவ் இறுதி அர்ப்பண நிகழ்வானது இம்மாதம் (வைகாசி) 12ஆம் திகதி அன்று பேசாலை, புனித வெற்றி நாயகி ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம் பெற்றது. இச்சபையை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களே அண்மைக்காலங்களில் அங்கீகரித்து மறைமாவட்டத்திற்கான சபையாக ஏற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இச்சபையின் தலைவியாக தற்பொழுது அருட்சகோதரி லு. மேரி டாலர் அவர்கள் பணியாற்றுகின்றார். இவர்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி மகிழ்கின்றது.●

## இலங்கை ஆயர் பேரவையின் விசேட அறிக்கை

உயிர்ப்பு ஞாயிறு அன்று காலையில் நடந்த துன்பகரமான சம்பவத்தை முன்னிட்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினால் மிகுந்த வேதனையையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அப்பாவி மக்களைக் குறிவைத்து மிருகத்தனமாக நடத்தப்பட்ட தாக்குதலினால் மூன்று தேவாலயங்களிலும், வேறு சில இடங்களிலும் 360க்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கு உள்ளாகியும் இருப்பது பேரழிவாகும் என உயிர்ப்பு ஞாயிறு தினம் நடந்த கொடூரமான சோக சம்பவத்தைக் குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

உயிர்ப்பு ஞாயிறு தினம் நடந்த கொடூரமான சோக சம்பவங்களால் இலங்கையின் கத்தோலிக்க ஆயர் பேரவை மிகவும் வருத்தம் அடைந்துள்ளது.

➡ 13

## கன்னாட்டி புனித அந்தோனியார்

### ஆலயத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது



வவுனியா, கன்னாட்டி புனித சூசையப்பர் ஆலயத்திருவிழா மிகவும் அமைதியாக நடைபெற்றது. வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன் அடிகளார் இத் திருவிழாத் திருப்பலியை தலைமை தாங்கி நிறைவேற்றியிருந்தார். அவரோடு இனைந்து செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணி. இ. செபமாலை அடிகளார், உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. சதாஸ்கர் அடிகளார், அருட்பணி. ஜெயசீலன் அடிகளார், அருட்பணி. ஜோச் அடிகளார் ஆகியோரும் இனைந்து சிறப்பித்தார்கள்.●

### வில்பத்திற்கு அருகிலிருந்த யாத்திரை ஸ்தலத்தின்

## அந்தோனியார் சுரூபம் உடைப்பு



பள்ளக்கண்டல் புனித அந்தோனியார் தேவாலயத்தில் உள்ள அந்தோனியார் திருச் சுரூபம் விசமிகளினால் உடைக்கப்பட்டுள்ளது. வில்பத்து சரணாலயத்தின் மத்தியில் அமையப்பெற்றுள்ள அழகான யாத்திரை ஸ்தலமான 'பள்ளக்கண்டல் புனித அந்தோனியார் தேவாலயத்தில் உள்ள அந்தோனியார் திருச் சுரூபம் 30.04.2019 அன்று இரவு இனம் தெரியாத விசமிகளினால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

சிலாபம் மறைமாவட்டத்தின் கீழ் அமைந்துள்ள சிறப்பு மிக்க இத் தேவாலயத்தில் ஒவ்வொரு வருடமும் புனித அந்தோனியாரின் திருவிழாவை சிங்கள, தமிழ் மக்கள் ஒன்றினைந்து சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். மக்கள் நடமாட்டமில்லாத நேரத்தில் விசமிகள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். தேவாலயத்தில் உள்ள புனித அந்தோனியார் திருச்சுரூபம் உடைக்கப்பட்டுள்ளமையை அறிந்து மேலதிக விசாரனைகளை அப்பகுதிக்கு பொறுப்பான பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

### உயிர்ப்பு ஞாயிறு தாக்குதல் தொடர்பாக

## மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையின் ஊடக சந்திப்பு





உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகவும், நாட்டின் இன்றைய நிலைமைகள் தொடர்பாகவும் மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையின் ஊடக சந்திப்பு கடந்த 30.04.2019அன்று மாலை 4.00மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

அதே வேளை கடந்த 02.05.2019 அன்று உயிர்ப்பு ஞாயிறு குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காகவும், நாட்டில் சுமுகமான அமைதி நிலை ஏற்பட வேண்டியும் மன்னார் நகரசபை மண்டபத்தில் சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வும் இடம்பெற்றது.●

## மன்னார் மாவட்ட ஜமியத்துல் உலமா சபையினருக்கும், மன்னார் மறைமாவட்ட ஆயருக்கும் இடையில் விசேட சந்திப்பு





மன்னார் மாவட்ட ஜமியத்துல் உலமா சபையினருக்கும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று 28.04.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் இடம் பெற்றுள்ளது. மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க மற்றும் முஸ்லீம் மக்களின் நல்லுறவு தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்ற நோக்குடன் குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. மன்னார் மாவட்ட ஜமியத் உலமா அமைப்பினருடன் நிர்வாக உறுப்பினர்கள் அங்கத்தவர்கள் இணைந்து மன்னார் மறைமாவட்ட ஆயருடன் குறித்த சந்திப்பில் ஈடுபட்டிருந்தனர். குறித்த சந்திப்பின்போது 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை ஈஸ்ரர் தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற துக்ககரமான சம்பவத்திற்கு அனுதாபத்தையும், கண்டனத்தையும் மன்னார் ஜமியத்துல் உலமா அமைப்பினர் மன்னார் மறைமாவட்ட ஆயரிடத்தில் தெரிவித்துக் கொண்டனர். மன்னார் மாவட்டத்தில் முஸ்லீம்கள் மற்றும் கத்தோலிக்க மக்களுக்கு இடையிலான உறவு இத்தகைய துன்பகரமான செயலினால் சீர் கெட்டு விடக்கூடாதென்பதுடன், நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக பள்ளிவாயில்கள், ஆலயங்களில் சமய சொற்பொழிவுகள் இடம்பெற வேண்டுமென ஆயரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்துடன் இவ்வாறான அடாவடித்தனங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர். மேலும் கடந்த காலங்களைப் போன்று இரு சமயத்தவர்களின் உறவு முறை எவ்வாறு இருந்ததோ அவ்வாறே தொடர்ந்தும் பேணப்பட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.●

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# தூய ஆவியார் நம் வாழ்வுப்பயண தோழர்

தூய ஆவியாரோடு நாம் பயணிக்காமலும் வாழ்வில் தூய ஆவியாருக்கு மைய இடத்தை வழங்காமலும் இருக்கும்வரை நாம் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. பலவீனங்கள் மற்றும் மரணத்தினின்று நம்மை உயிர்பெற்றெழச் செய்யும் தூய ஆவியாருக்கு வாழ்வில் இடம் ஒதுக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பலியில் மறையுரையாற்றினார்.

வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் ஏப்ரல் 30ஆம் திகதி காலையில் நிறைவேற்றிய திருப்பலியில் 'ஒருவர் எப்படி மறுபடியும் பிறக்க முடியும்?' என நிக்கதேம் அவர்கள் இயேசுவிடம் கேட்ட கேள்வியை (யோவா.3:7) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நம் வாழ்வில் தூய ஆவியாரின் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். திருப்பலியின் நற்செய்திப் பகுதியிலிருந்து (யோவா.3:7-15) தன் மறையுரைச் சிந்தனைகளை வழங்கிய திருத்தந்தை, கடவுளின் வல்லமையால் மட்டுமே நம் பாவநிலையிலிருந்து மறுபிறப்பு அடைய இயலும் இதற்காகவே நம் ஆண்டவர் தூய ஆவியாரை நம் மத்தியில் அனுப்பினார் என்று உரைத்தார்.

நிக்கதேம் அவர்கள் இயேசுவிடம் கேட்ட கேள்வி போன்று நாமும் கேட்கின்றோம். இக்கேள்விக்கு இயேசு மேலிருந்து மறுபடியும் பிறக்க முடியும் என்பது பற்றிப் பேசுகின்றார் என்றுரைத்த திருத்தந்தை ஆண்டவரின் உயிர்ப்புக்கும் மறுபடியும் பிறப்பதற்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றிக் கூறினார். ஆண்டவரின் உயிர்ப்பு பற்றிய செய்தி தூய ஆவியாரின் கொடை என்றும் உண்மையில் உயிர்த்த இயேசு தம் திருத்தூதர்களுக்கு முதன்முறையாகத் தோன்றியவேளையில் தூய ஆவியாரைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றுதான் கூறினார். தூய ஆவியார் இன்றி நம்மால் எதையும் செய்ய இயலாது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

நம் கிறிஸ்தவ வாழ்வுக்கு முக்கிய உந்து சக்தியாக இருப்பவர் தூய ஆவியார் என்றும் அவர் நம்மோடு இருந்து நம்மை



மாற்றுகின்றார். அவர் இறைத்தந்தையிடமிருந்தும் இயேசுவிடமிருந்தும் நாம் பெற்ற கொடை என்றும் திருத்தந்தை கூறினார். எனவே நம் வாழ்வில் தூய ஆவியாருக்கு எத்தகைய விதத்தில் இடத்தை அளித்திருக்கின்றோம் என சிந்திப்போம் என்று தனது மறையுரையில் அழைப்பு விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நம் வாழ்வுப் பயணத்தில் துணை வருபவர் தூய ஆவியார் என்பதைப் புரிந்துகொள்வதற்கு ஆண்டவரிடம் அருள் வேண்டுவோம் என்று கூறினார்.

மேலும், "தூய ஆவியாரோடு நாம் பயணிக்காமலும் வாழ்வில் தூய ஆவியாருக்கு முக்கிய இடத்தை வழங்காமலும் இருக்கும்வரை நாம் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது என்ற விழிப்புணர்வை அருளுமாறு ஆண்டவரிடம் மன்றாடுவோம்" என்ற சொற்கள் ஏப்ரல் 30ஆம் திகதி திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியிலும் வெளியாயிருந்தது குறிப்பிடத்தக்கது. ●

# அனைவரையும் உள்ளடக்கிய ஒரு கலாச்சாரத்தை வளர்ப்போம்

இறைவனின் பிரசன்னத்தை செவிகளால் கேட்டு உணர்வதைவிட உள்ளத்தின் நம்பிக்கை வழியே உணர்வது மிகச் சிறந்தது. செவித்திறனில் குறையுடையோர் தங்கள் உள்ளத்தில் உணரும் இறைவனை பிறருக்கும் உணர்த்தமுடியும். இங்கு வந்திருக்கும் ஒவ்வொருவரையும் நான் அன்புடன் வாழ்த்துகின்றேன். குறிப்பாக கேட்கும் திறனற்றவர்களையும், அவர்களின் நண்பர்கள், குடும்பத்தினரையும் சிறப்பான முறையில் வாழ்த்துகின்றேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏப்ரல் 25ஆம் திகதி தன்னைச் சந்திக்க வந்திருந்த ஒரு குழுவினரிடம் கூறினார்.

செவித்திறன் குறைபாடுள்ளோர் கழகங்களின் இத்தாலிய ஒன்றியத்தைச் சேர்ந்த உறுப்பினர்களையும், இக்கழகங்களினால் பயன்பெறுவோரையும் திருப்பீடத்தின் கிளமெந்தீனா அரங்கத்தில் சந்தித்த திருத்தந்தை அவ் ஒன்றியம் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டினார். தூக்கியெறியும் மற்றும் புறக்கணிக்கும் கலாச்சாரம் பெருகியுள்ள இன்றைய காலத்தில் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு கலாச்சாரத்தை வளர்க்க செவித்திறன் குறைபாடுள்ளோர் கழகங்களின் இத்தாலிய ஒன்றியம் பல ஆண்டுகளாக முயன்றுவருகின்றது என்று திருத்தந்தை எடுத்துரைத்தார்.

இறைவனின் பிரசன்னத்தை செவிகளால் கேட்டு உணர்வதைவிட உள்ளத்தின் நம்பிக்கை வழியே உணர்வது மிகச் சிறந்தது என்பதை சிறப்பாகக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செவித்திறனில் குறையுடையோர் தங்கள் உள்ளத்தில் உணரும் இறைவனை பிறருக்கும் உணர்த்த முடியும் என்று கூறினார். இவ்வுலகின் பல்வேறு அவலங்களுக்கு நடுவே இறைவனின் குரலைக் கேட்காமல் போகும் மக்களுக்கு இறைவனின் சொற்களை மனதில் உணரும் பக்குவத்தை செவித்திறனில் குறையுடையோர் சொல்லித்தர வேண்டும் என்று திருத்தந்தை அழைப்பு விடுத்தார். இத்தாலியிலும், உலகெங்கிலும் செவித்திறனில் குறையோடு வாழ்வோரை இன்னும் குறிப்பாக சமுதாயத்தின் ஓரங்களில் தள்ளப்பட்டோர் நடுவே இக்குறையுடன் வாழ்வோரை இந்நேரத்தில் சிறப்பாக நினைவுகூர்கின்றேன் என்று திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார்.

➜ 15

# மனித மாண்பை மதிப்பது ஒருங்கிணைந்த மனித வளர்ச்சிக்கு அவசியம்




வளர்ச்சிக்குரிய திட்டங்களில் மனிதர் மையப்படுத்தப்பட வேண்டும். ஒருங்கிணைந்த மனித முன்னேற்றம் ஒரு சிலருக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் கிடைப்பதற்கு வழியமைக்கப்பட வேண்டும். மனிதரின் வளர்ச்சி, பொருளாதாரம் அல்லது வல்லுனர்கள் சார்ந்த விவகாரம் மட்டுமல்ல அது ஒவ்வொரு மனிதரும் சுதந்திரமாகவும், கடமையுணர்வுடனும் ஆற்றப்படுவதற்கு விடுக்கப்படும் அழைப்பாகும் என்று திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் ஜெனீவாவில் ஏப்ரல் 29ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கூறினார்.

➜ 15

# விவிலியம், கடவுளின் உயிர்மூச்சை உலகுக்குள் கொணர்கின்றது



இறைவார்த்தையும், கிறிஸ்தவ வாழ்வும் ஒன்றையொன்று தழுவிக்கொள்கின்றன. ஒன்றிலிருந்து இன்னொன்றை ஒருபோதும் பிரிக்க முடியாது. விவிலியம் படிப்பதற்காக அழகாகச் சேகரிக்கப்பட்ட புனித நூல்களில் ஒன்று அல்ல. மாறாக இது உலகின் தெருக்களில் அறிவிக்கப்பட வேண்டிய வாழ்வின் இறைவார்த்தை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். கத்தோலிக்க விவிலிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் ஐம்பதாம் ஆண்டை முன்னிட்டு இவ்வாரத்தில் உரோமை நகரில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொண்ட ஏறத்தாழ 300 பிரதிநிதிகளை ஏப்ரல் 26ஆம் திகதி வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விவிலியமும் வாழ்வும் ஒருபோதும் பிரிக்க முடியாதவை என்று கூறினார்.

➜ 14

# சாம்பலில் பூத்த சரித்திரம்

# கிறிஸ்தவமும் சீர்திருத்தமும்

Barrett கலைக்களஞ்சியத்தின்படி உலகில் ஏறத்தாழ 238 நாடுகளில் முப்பத்திமூவாயிரத்திற்கு அதிகமான பிரிந்த கிறிஸ்தவ சபைகள் உள்ளன. இவ்வெண்ணிக்கை நாற்பதாயிரத்திற்கும் அதிகம் என்றும்கூட சொல்லப்படுகின்றது. இன்று அங்லிக்கன், லூத்தரன், பாப்டிஸ்ட், மெத்தோடிஸ்ட், பெந்தகோஸ்து போன்ற உலகளாவிய சபைகள் தவிர தென்னிந்திய சபை, வட இந்திய சபை போன்று ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு பிரிந்த கிறிஸ்தவ சபைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக அமெரிக்க ஐக்கிய நாட்டில் பாப்டிஸ்ட் கிறிஸ்தவ சபை மிகவும் பெரியது. ஆயினும் அந்நாட்டில் பல பிரிந்த கிறிஸ்தவ சபைகளும் இருக்கின்றன. அண்மைக் காலமாக ஏறத்தாழ பத்து பதினைந்து வீடுகள் சேர்ந்து ஒரு சபை எனக் கிறிஸ்தவ சபைகளிலே புற்றீசல் போல் பல சிறு சிறு சபைகளும் உதித்து வருகின்றன. Barrett கலைக்களஞ்சியத்தின்படி உலகில் ஏறத்தாழ 238 நாடுகளில் முப்பத்துமூவாயிரத்திற்கு அதிகமான பிரிந்த கிறிஸ்தவ சபைகள் உள்ளன. இவ்வெண்ணிக்கை நாற்பதாயிரத்திற்கு அதிகம் என்றும்கூட சொல்லப்படுகின்றது. இந்தச் சபைகள் எப்படித் தோன்றின? இவைகளின் பிறப்பிடம் எது? போன்றவற்றைப் புரிந்துகொள்வதற்கு முதலில் வரலாற்றில் 16ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இடம்பெற்ற பிரிந்த சபை சீர்திருத்தம் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட இறையியல் மற்றும் அரசியல் கருத்து வேறுபாடுகளால் 1054ஆம் ஆண்டில் பெரும் பிரிவினை ஒன்று இடம்பெற்றது. அதுவே கிழக்கு, மேற்கு பிரிவினை என அழைக்கப்படுகின்றது. அதன் விளைவாக மேற்குலகில் கத்தோலிக்கமும், கிழக்குலகில் ஆர்த்தடாக்ஸ் சபைகளும் பிரிந்து செயற்பட ஆரம்பித்தன. 11ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற அந்தப் பெரும் பிரிவினைக்குப் பின்னர் மேற்கு ஐரோப்பாவில் உரோம் நகரில் திருத்தந்தையின் தலைமையின் கீழ் கத்தோலிக்கம் மட்டுமே ஒரே கிறிஸ்தவ திருஅவையாக நிலவி வந்தது. ஆனால் அது இக்காலத்தில் உரோமன் கத்தோலிக்கத் திருஅவை என அழைக்கப்படுகின்றது. ஏனெனில் இன்று அங்லிக்கன், லூத்தரன், பாப்டிஸ்ட், மெத்தோடிஸ்ட், பெந்தகோஸ்து, இவாஞ்சலிக்கல் போன்ற பல பிரிந்த கிறிஸ்தவ சபைகள் உள்ளன.

### திருஅவையும் நாடும்

உரோம் நகரில் திருத்தந்தையின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய கத்தோலிக்கத் திருஅவை 1500ஆம் ஆண்டில் மேற்கு ஐரோப்பாவில் அரசியல் முறைப்படியும், ஆன்மீக முறைப்படியும் மிகவும் வல்லமை மிக்கதாய் விளங்கியது. இத்தாலியில் குறிப்பிட்ட பகுதி திருத்தந்தையால் ஆளப்பட்டு வந்தது. அப்பகுதி திருத்தந்தையின் அரசு என அழைக்கப்பட்டது. இது 8ஆம் நூற்றாண்டு முதல் 1870ஆம் ஆண்டு வரை திருத்தந்தையின் இறைமையாண்மையுடைய அரசாக விளங்கியது. அந்த அரசு மேற்குலகில் கிறிஸ்தவம் ஒன்றிணைந்து செயற்படவும் அது பரவவும் முக்கிய காரணியாக அமைந்திருந்தது. உரோம் ஆயரான திருத்தந்தையின் செல்வாக்கிலும், அதிகாரத்திலும் ஏற்பட்ட வளர்ச்சியே இதற்குக் காரணம். திருத்தந்தை புனித முதலாம் சிங்கராயர் (லியோ) அவருக்குப்பின் திருத்தந்தை முதலாம் பெரிய



கிரகரி ஆகியோர் உரோம் ஆயரின் தலைமைத்துவத்தை அதிகம் வலியுறுத்தினார்கள். திருத்தந்தை கிரகரி அவர்களுக்குப்பின் தலைமைப்பணியில் இருந்தவர்கள் இதனை வலியுறுத்தினாலும் 11ஆம் நூற்றாண்டின் இவ்விரு திருத்தந்தையர்களே திருஅவை மற்றும் அனைத்து கிறிஸ்தவர்கள் மீது முழு அதிகாரத்தை வலியுறுத்தியவர்கள்.

இந்நிலையில் ஒரு நிறுவனமாக பார்க்கப்பட்ட திருஅவைக்குள்ளே அதிகாரப் போட்டிகளும் இடம்பெற்றன. எடுத்துக்காட்டாக 1300களின் இறுதிக்காலம் மற்றும் 1400களில், ஒரு கட்டத்தில் ஒரே நேரத்தில் மூன்று திருத்தந்தையர் ஆட்சி செய்தனர். திருத்தந்தையரும், கர்தினால்களும், ஆன்மீகத் தலைவர்கள் என்பதைவிட அரசர்கள் போன்று வாழ்ந்தனர். ஆயுதப் படைகளையும், அரசியல் முறைப்படி பகைவர்களையும் நட்புகளையும் கொண்டிருந்தனர். சில சமயங்களில் திருத்தந்தையர் போர்களும் தொடுத்தனர். திருஅவையின் பணிகள், கடமைகள் வர்த்தகமாக்கப்பட்டன (Simony). குடும்ப உறவுகளின் அடிப்படையில் சலுகைகள் காட்டப்பட்டன. (nepotism) இவையெல்லாம் அளவுகடந்து சென்றன. திருத்தந்தையர் உலகம் சார்ந்த விவகாரங்களில் கவனஞ் செலுத்தியதால் விசுவாசிகளின் ஆன்மீகக் காரியங்களில் அக்கறை எடுக்க அவர்களுக்கு அதிக நேரம் இல்லாமல் இருந்தது. திருஅவையில் இடம்பெற்ற ஊழல் அம்பலமானது.

### திருஅவையின் அதிகாரமும், செல்வமும்

திருஅவையின் அதிகாரமும் செல்வமும் அதிகரிக்க அதிகரிக்க அது ஓர் ஆன்மீக சக்தி என்ற நிலையை முற்றிலும் இழந்தது. அருட்பணியாளர்கள் பாவமன்னிப்புக்களை விற்பனை செய்தனர். மேலும் திருஅவையில் இடம்பெற்ற ஊழல்கள் திருஅவையின் ஆன்மீக அதிகாரத்தை மதிப்பிழக்கச் செய்தன. ஆயினும் இந்தச் செயல்கள் ஒரு விதிவிலக்காகவே நோக்கப்பட்டன. அதேநேரம் பலர் திருஅவையை ஆன்மீக ஆறுதல் தரும் சக்தியாகவே நோக்கினர். இருந்தபோதிலும் அருட்பணியாளர்க்கு எதிரான போக்கும் கத்தோலிக்கர் மத்தியில் நிலவியது. அரசியலில் அதிகாரம் கொண்டோர் இந்த ஒரு சூழலைப் பயன்படுத்தி திருஅவையின் அதிகாரத்தைக் குறைத்து ஒரு பதட்டநிலையை உருவாக்க முயற்சித்தனர்.

➜ 14

பாஸ்காக்கால சிறப்புக் கட்டுரைகள்

# உயிர்ப்பு என்றால் நம்பிக்கை, புதுப்பித்தல், புதுவாழ்வு

பிரான்ஸ் நாட்டில் பிரஞ்சுப் புரட்சி ஏற்பட்டபின் மக்கள் மத்தியில் கிறிஸ்தவ நம்பிக்கை மெல்லக் குறையத் தொடங்கியது. இதைச் சாதகமாக வைத்துக் கொண்டு, ரெவில்லரே என்பவர் புதிய மதத்தைத் தொடங்கினார். அம்மதத்திற்கான கோட்பாடுகளை திருவிவிலியத்திலிருந்தும் பிற மதங்களின் திருமறை நூல்களிலிருந்தும் பெற்று அதை மக்களிடம் பரப்பி வந்தார். அவர் ஏற்படுத்திய மதத்தின் கோட்பாடுகள் நல்லவையாக இருந்தபோதும் ஒருசிலரைத் தவிர வேறு யாருமே அவருடைய மதத்தில் சேர முன்வரவில்லை.

இதற்கிடையில் ஒருநாள் ரெவில்லரே தன் நண்பன் பாரசைச் சந்தித்தார். அவர் அவனிடம், "நண்பா! நான் ஏற்படுத்தியிருக்கும் மதத்தின் கொள்கைகளும், கோட்பாடுகளும் மிக உயரியவை. என்னுடைய மதத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களும் பெரிய பெரியப் பணக்காரர்கள். என்னிடமும் ஏராளமான செல்வம் இருக்கின்றது. அப்படியிருந்தும் மக்கள் ஏன் என்னுடைய மதத்தில் சேர முன்வருவதில்லை. அதேநேரத்தில் சாதாரண படிப்பறிவில்லாத பன்னிரண்டு சீடர்களை வைத்துக்கொண்டு இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்தவ மதம் மட்டும் எப்படி உலகமெங்கும் பரவ முடிந்தது?" என்று கேட்டார்.

உடனே அவருடைய நண்பர் அவரிடம், "நீ கேட்ட கேள்விக்கான பதில் மிகவும் எளிது. இயேசு மக்களுடைய பாவங்களுக்குக் கழுவாயாக ஒரு வெள்ளிக்கிழமை சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டார். அத்தோடு நின்றுவிடாமல், மூன்றாம் நாளில் வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்தார். நீயும் அவ்வாறு சிலுவையில் அறையப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்றாம் நாளில் உன் சொந்த வல்லமையால் உயிர்த்தெழுவாய் எனில் உன்னுடைய மதத்தையும் உலகெங்கிலும் உள்ள மக்கள் பின்பற்றுவார்கள்" என்றார்.

இவ்வுலகில் இயேசு ஒருவரைத்தவிர வேறு யாரும் இறந்து உயிர்த்தெழுந்ததில்லை. அப்படி இறந்து, மூன்றாம் நாளில் வெற்றிவீரராய் உயிர்த்தெழுந்த இயேசுவின் உயிர்ப்பினைத்தான் நாம் அனைவரும் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றோம். எனவே இயேசுவின் உயிர்ப்பு நமக்குச் சொல்லும் செய்தி என்ன என்று சிந்திப்போம்.

### சொன்னபடி உயிர்த்தெழுந்த இயேசு

வாரத்தின் முதல்நாளில் விடியற்காலை வேளையில் மகதலா மரியாவும் யோவானும் யாக்கோபின் தாய் மரியாவும் தாங்கள் ஆயத்தம் செய்து வைத்திருந்த நறுமணப் பொருட்களை எடுத்துக்கொண்டு இயேசு அடக்கம் செய்துவைக்கப்பட்டிருந்த கல்லறைக்கு வந்தார்கள். அவர்கள் சென்றபோது கல் அகற்றப்பட்டிருப்பதையும், இயேசுவின் உடல் அங்கு இல்லாததையும் கண்டு குழப்பமுற்றார்கள். அப்பொழுது அவர்களுக்கு முன்பாகத் தோன்றிய இரு வானதூதர்கள் சொன்னதைக் கேட்டபின்பு இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை அவர்கள் நம்பத் தொடங்குகின்றார்கள்.

இயேசு இம்மண்ணுலகத்தில் வாழ்ந்தபோதே பாடுபட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று தன்னுடைய சீடர்களிடம் பலமுறை சொன்னார். ஆனால் அவர்கள் அதை மறந்துபோனார்கள். இயேசுவின் உடலுக்கு நறுமணத் தைலம் பூச வந்த மகதலா



மரியா உட்பட மூன்று பெண்களும் இயேசு உயிர்த்தெழுவார் என்று நம்பாமல்தான் இருந்தார்கள். ஆனால் இயேசு தான் சொன்னது போன்றே (மத் 16:21, 17:22-23, 20:17-19, லூக் 9:22, 44 18:31-34) உயிர்த்தெழுந்தார். இந்த உலகத்தில் இருக்கும் பெரிய பெரிய மதங்களைத் தோற்றுவித்த புத்தர், முகமது போன்றோரைப் பற்றி அவர்களுடைய இறப்புக்குப் பின் எந்தவொரு குறிப்பும் இல்லை. ஆனால், இயேசு அப்படியில்லை. அவர் இறந்தார், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார், மீண்டும் வருவார். அதுதான் இயேசுவை மற்ற எல்லோரிடமிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்றது.

### வந்து பார், சென்று அறிவி

இயேசு உண்மையாகவே தான் சொன்னதுபோன்று உயிர்த்தெழுந்தார் என்பதை அறிந்த நாம் இவ் உயிர்ப்புப் பெருவிழா நம் ஒவ்வொருவருக்கும் தரும் செய்தியென்ன என்று சிந்தித்துப் பார்ப்போம்.

இயேசுவின் உடலை அடக்கம் செய்துவைத்திருந்த கல்லறையை மூடியிருந்த கல் அகற்றப்பட்டிருப்பதையும், அவருடைய உடல் அங்கு இல்லாததையும் வானதூதர்கள் இருவர் சொன்ன வார்த்தைகளையும் நம்பி இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை அறிந்த அந்த மூன்று பெண்களும் அச்செய்தியை பதினொரு சீடர்களிடம் எடுத்துரைக்க விரைகின்றார்கள். இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் நாம் ஒவ்வொருவரும் அந்த மூன்று பெண்களைப் போன்று இயேசுவின் உயிர்ப்புச் செய்தியை அல்லது அவரது நற்செய்தியை மக்களுக்கு அறிவிக்கவேண்டும். இதுதான் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா ஒவ்வொருவருக்கும் தரும் முதன்மையான அழைப்பாக இருக்கின்றது.

இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாச் செய்தியை ஆங்கிலத்தில் இரத்தினச் சுருக்கமாக 'Come and see, go and tell' என்பார்கள். அதாவது இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை அனுபவித்து அவருடைய நற்செய்தியை எல்லா மக்களிடமும் சென்று அறிவிக்கவேண்டும். அதுதான் இயேசுவின் சீடர்களாக இருக்கும் ஒவ்வொருவருடைய கடமையாகும். இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை இறைவார்த்தையின் வழியாக நம்பி ஏற்றுக் கொள்கின்ற நாம் அதை மற்ற மக்களுக்கு அறிவிக்கவேண்டும். அது வார்த்தையின் வழியாகவும், வாழ்வின் வழியாகவும் இருக்கலாம். ஆனால் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை வார்த்தை வழியாக அறிவிப்பதைவிடவும் வாழ்வின் வழியாக அறிவிப்பது அதைவிடச் சிறந்தது. அப்படி நாம் ஒவ்வொருவரும் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை நம் வாழ்வின் வழியாக அறிவித்தோமெனில் அதைவிடச் சிறந்தது வேறொன்றும் இல்லை.

ஒருசமயம் அன்னை தெரேசா வெளிநாடு செல்வதற்காக வானூர்தியில் பயணம் செய்தார். அவரோடு அவருடைய சபையைச் சார்ந்த இன்னொரு சகோதரியும் பயணம் செய்தார். அப்பொழுது அன்னை தெரேசாவின் இருக்கைக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்து பயணம் செய்த ஒருவர் கடவுள் நம்பிக்கையில்லாதவர்.

அவர் அன்னை தெரேசாவைக் குறித்து 'சேவை என்ற பெயரில் மக்களை மதம் மாற்றுகின்றவர், பிச்சைக்காரர்களை உருவாக்கும் வஞ்சகி' என்றெல்லாம் கூறினார். அம்மனிதர் அவ்வாறு எண்ணுவதை அவருடைய முகபாவனையால் அறிந்த அன்னை தெரேசா செபமாலையைக் கையில் எடுத்து மன்றாடத் தொடங்கினார். அவர் செபமாலை சொல்லி மன்றாடும் பொழுது அவருடைய முகம் ஒளிமயமாவதைப் பார்த்த அம்மனிதர் அன்னையிடம் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார். அன்னையும் அவரை மனதார மன்னித்து தான் வைத்திருந்த செபமாலையையும் அவருக்குக் கொடுத்து ஆசி வழங்கினார். பின்னர் அவர் இறை நம்பிக்கையுள்ள மனிதராக மாறினார் என்பது வரலாறு.

அன்னை தெரேசா ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை வார்த்தையால் போதித்ததைவிட வாழ்வால் போதித்தார். அதனால்தான் பலரும் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டார்கள். இயேசுவின் சீடர்களாக இருக்கும் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வார்த்தையால் மட்டுமல்ல வாழ்வாலும் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து விண்ணகத் தந்தைக்குப் பெருமை சேர்ப்பது நமது கடமையாகும். (மத் 5:16) பாவத்திற்கு இறந்து, கடவுளுக்காக வாழவேண்டும்.

இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா நமக்கு விடுக்கும் இரண்டாவது அழைப்பு நாம் ஒவ்வொருவரும் பாவ வாழ்விற்கு இறந்து கடவுளுக்காக வாழ்கின்றவர்கள் ஆகவேண்டும். இயேசு தன்னுடைய சிலுவைச் சாவின் வழியாகப் பாவத்தை அழித்துவிட்டார். இப்பொழுது நாம் புதிய மனிதர்களாக, புதுப்படைப்பாக மாறியிருக்கின்றோம். எனவே புதுப்படைப்பாக மாறியுள்ள நாம் நம்முடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்ப வாழாமல் கடவுளின் விருப்பம் எது என அறிந்து அவருக்காக நாம் வாழவேண்டும். அப்பொழுதுதான் நாம் கொண்டாடுகின்ற இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா முழுமையான அர்த்தம் பெறும்.

### சிந்தனை

'உயிர்ப்பு என்றால் நம்பிக்கை, புதுப்பித்தல் மற்றும் புதுவாழ்க்கை என்று பொருள்' என்பார் ஜனனி டி கியோவன்னி என்ற எழுத்தாளர். இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடி பாஸ்காக் காலத்தில் பயணிக்கின்ற நாம் அவரது நற்செய்தியை மக்களுக்கு எடுத்துரைக்கவும், புதிய வாழ்க்கை வாழவும் உறுதி எடுப்போம்.●

# சிவந்த ஈஸ்ரரும் புதிய மறைசாட்சிகளும்

*– அருட்சகோதரி. யோகா scjm வவுனியா. –*

புதிய காலை புதுப்பொழிவுடன் கதிரவனைக் காண மனுக்குலத்திற்காக மனிதனாகி புனிதனான இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிழ்வைக் கொண்டாட உயிர்த்த ஞாயிறு காலைவேளை (21.04.2019) விசுவாசிகள் தயாரானார்கள். நாற்பது நாட்கள் தாம் மேற்கொண்டிருந்த உபவாசத்தினை முடித்துக் கொண்டு உயிர்ப்பின் பெருவிழாவினைக் கொண்டாட பாஸ்கா பலியினில் இணைந்து உயிருடன் இயேசு எழுப்பப்பட்டார் என்ற மகிழ்வில் அவருடைய திருவிருந்தில் பங்கேற்ற அடுத்த தருணமே உயிர்த்த ஆண்டவருக்குள் மறைசாட்சிகளாக சங்கமித்துக்கொண்டனர். எமது சகோதர கத்தோலிக்கர். ஆம் ஈஸ்ரர் சிவந்தது, விசுவாசிகள் புதிய மறைசாட்சிகளாக விண்ணகம் சென்றனர்.

கடந்த உயிர்த்த ஞாயிறன்று திருப்பலியில் பங்கேற்று இறைவார்த்தையை தமது வாழ்விற்கு வழியாக ஏற்றுக் கொண்ட மனநிலையில் ஆன்ம உணவான திருவிருந்தில் பங்கேற்ற பின்பு எமது கத்தோலிக்க விசுவாசிகள் குறிப்பாக கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், நீர்கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயத்திலும் இயேசுவின் உயிர்ப்பில் மகிழ்ந்தோரின் இரத்தத்தால் இந்த வருட ஈஸ்ரர் சிவந்துபோக விசுவாசிகள் மறைசாட்சிகளானார்கள். மேற்கண்ட ஆலயங்களிலும், ஏனைய இடங்களிலும் கொடூரமான குண்டுவெடிப்பினால் இறந்தவர்களின் இறப்பு அநியாயமானது. இவர்கள் அப்பாவிகள், இது ஒரு தேவையற்ற மரணம், இக்கொடூரத்திற்கு யார் காரணம்? என்ற வாதங்களுக்கு அப்பால் நாம் சற்று சிந்தித்தால் இவர்களது மரணம் எமக்கு இன்று கூறுவது என்ன?

இந்த அருவருக்கத்தக்க செயற்பாடானது எமக்கு அரசியல் ரீதியான பல கேள்விகளை எம்மனதில் தோற்றுவிக்கின்ற அதேவேளை ஆன்மீக வழியில் ஒரு முக்கிய விடயத்தை உணர்த்தி நிற்கின்றது. ஈஸ்ரர் தினத்தில் உயிர்த்த ஆண்டவருடன் சங்கமமான கத்தோலிக்க விசுவாசிகள் விபூதிப் புதனன்று திருப்பலியில் பங்கேற்று தமது நெற்றிகளில் சாம்பலிட்டு, மண்ணால் படைக்கப்பட்ட நாம் மண்ணுக்குத் திரும்புவது உறுதி என்பதை உணர்ந்ததனால் இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தியை நம்பி மனந்திருந்தி வாழ முற்பட்ட பலரில் இவர்களும் உள்ளடங்குவர். கத்தோலிக்கர் என்ற வகையில் தவக்காலத்தின் நாற்பது நாட்களிலும் உண்ணா நோன்பிருந்து பல செப, தப, தியாகங்களைச் செய்து, தமது மனித பாவ இயல்புகளுக்குத் தம்மை மரணித்து இயேசுவோடு உயிர்த்தெழ ஆவலுடன் இருந்திருப்பர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதனால்தான் உயிர்த்த ஞாயிறு அன்று காலையிலேயே இறைவனுக்கு நன்றி கூறவும் அவர் புகழ்பாடவும் ஆலயம் நோக்கி சென்றனர். அன்புறவை வளர்க்கும் ஆண்டவரின் திருப்பலியில் அர்த்தமுடன் பங்கேற்றனர்.

ஆண்டவரின் பாஸ்கா மறைபொருளை எடுத்தியம்பும் திருப்பலியில் ஆர்வமுடன் பங்குபற்றினர். ஆண்டவரின் உயிர்ப்பு அவர்களுக்கு புதிய வாழ்விற்கான விண்ணகக் கதவுகளை திறந்துவிட்டது. தீயவனின் கொடூரம் கண்டிக்கத்தக்கது. அவனது வன்முறையும் நெஞ்சத்தின் ஆழத்திலிருக்கும் வன்மமும் எடுத்துரைக்க வார்த்தைகளற்றது. இருப்பினும், இந்த கொடுமையின் மத்தியிலும் 'இன்றே நீ என்னோடு வான்வீட்டிலிருப்பாய்' என்ற இயேசுவின் வார்த்தைகள் இங்கு எமது உறவுகளின் காதுகளில் சங்கீதமாக எதிரொலித்திருக்கும். அத்தனை உயிர்களையும் இறைவன் தன்னுடன் விண்ணகத்தில் இணைந்திருப்பார். இந்த உறவுகளின் இரத்தத்தால் 2019ஆம் ஆண்டு ஈஸ்ரர் தினம் சிவந்து போனது என்னவோ கசப்பான உண்மை. ஆனாலும் இவர்கள் அனைவரும் தமது விசுவாசத்தினை வாழ்வாக்க திருப்பலியில் கலந்து கொண்டவர்கள். ஆதலினாலேதான் இவர்கள் அனைவரும் புதிய மறைசாட்சிகளாகின்றனர். இவர்களது விசுவாச வாழ்க்கை மெச்சத்தக்கது. இவர்களது பாவங்கள் அந்த இடத்திலேயே கழுவப்பட்டு ஆண்டவரின் உயிர்ப்பில் பங்குதாரராயினர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இவர்களது இழப்பானது மனிதர்கள் யாராலும் ஈடுசெய்ய முடியாததொன்று என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை. இவர்களால் எமது திருச்சபையில் ஏற்பட்ட வெற்றிடம் வேறொருவராலும் நிரப்பப்பட முடியாததொன்று. இவர்கள் தமது விசுவாச வாழ்வால் சான்று பகர்ந்த அத்தனை செயற்பாடுகளும் எமக்கு இழப்புக்களே. இருந்தாலும், புனித பவுலடிகளார் கூறுவார், கிறிஸ்துவின் அன்பிலிருந்து எம்மைப் பிரிப்பது எதுவுமில்லை. 'வேதனையோ, நெருக்கடியோ, இன்னல், பட்டினி, ஆடையின்மை, இடர், சாவு' (உரோ 8:35) எதுவுமே எம்மை ஆண்டவரிடமிருந்து பிரிப்பதில்லை. மாறாக ஆண்டவருக்குள் நாம் இன்னும் ஆழமாக தஞ்சமடைய அவருக்குள் முடிவில்லா வாழ்வைக் காண எமக்கு வேண்டிய மன வலிமையும், நம்பிக்கையும் கிடைக்கின்றது. அன்னியரின் ஆதிக்கமும் அடக்கு முறையும், கீழ்த்தரமான அரசியல் சூழ்சிகளும், வன்மமும் வஞ்சகத் தன்மையும், குண்டு வெடிப்புக்களும் குதர்க்கங்களும் சாவினின்று உயிரோடு எழுப்பப்பட்ட எமது ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து தரும் வல்லமையால் தூசு போல துடைக்கப்பட்டுவிடும். இவை எவையுமே எம்மை இயேசுவினின்று பிரித்துவிடுவதில்லை.

குண்டுத் தாக்குதலால் எமது உறவுகள் வெறுமனே உதிர்ந்து போகவில்லை. மாறாக, விசுவாச வித்துக்களாக விதைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் விசுவாச உதிரம் உயிரோடு இருக்கும் எம்மை உரமூட்டுகின்றது. இயேசுவே ஆண்டவர், அவருக்காகவே வாழ்கின்றோம், அவருக்காகவே எமது வாழ்வை அர்ப்பணிக்கின்றோம், அவரது அன்பின் படிப்பினைகளையே நாம் தவறாமல் எம் வாழ்வாக்கிக்கொள்வோம் எனும் மன உறுதியை எமது புதிய ஈஸ்ரர் மறைசாட்சிகளும் உணர்த்தி நிற்கின்றனர்.

ஆதித்திருச்சபையிலும், இயேசுவில் விசுவாசம் கொண்ட மக்களை 10 பேரரசர்கள் தமது ஆட்சிக் காலத்தில் கொடூர வாளுக்கு இரையாக்கி விலங்குகளால் கிழிக்கப்பட்டு, கந்தகம் பூசப்பட்டு தீப்பந்தங்களாகவும் எரிக்கப்பட்டனர். தொடர்ந்தும் காலத்திற்குக் காலம் பல நாடுகளில் கிறிஸ்தவர்கள் ஏனைய மதவாதிகளால் கொல்லப்படுகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு முறையும் கிறிஸ்தவர்கள் வதைக்கப்பட்டபோதும், பல்லாயிரக்கணக்கானோர் கிறிஸ்தவத்தைத் தழுவிக்கொண்டனர். ஏனெனில் உயிர்த்த ஆண்டவரை அவர்கள் தம் வாழ்வில் அனுபவித்தனர். ஆண்டவரும் அவர்களுடன் அனுதினமும் பிரசன்னமாயிருந்தார். ஆதலால், பனிபோல் மறையும் இவ்வுலக வாழ்வுக்குள் எம்மைத் தொலைத்துவிடாமல் நித்தியத்திற்கும் இறைவனுக்குள் வாழும் மறுவுலக வாழ்விற்கு நாளாந்தம் எம்மைத் தயாரிக்கும் நாம் இறையுணர்வு மிக்கவர்களாக துன்புறும் உறவுகளுக்கு ஆறுதலாக இருப்போம். அவர்களுக்கு அருகிலிருக்க முடியாமற் போனாலும் அவர்களுக்காக தொடர்ந்தும் செபிப்போம். ஈஸ்ரர் என்பது இயேசுவின் துன்பகரமான பாடுகள் மரணத்தைத் தொடர்ந்து வந்தது.

→ 13

மேதின சிறப்புக்கட்டுரை

# மேதினம் - வரலாற்றுப் பின்னணி

நாம் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பின் விழாவை மே 01ஆம் திகதி கொண்டாடி மகிழ்கின்றோம். இவ்விழாவானது 1955ஆம் ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி திருத்தந்தை பனிரெண்டாம் பத்திநாதரால் தொடங்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் காரணமாக தொழிலாளர்களின் உழைப்பு அதிகமாக சுரண்டப்பட்டது. இதனால் அவர்கள் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்படித் தோன்றியதுதான் தொழிலாளர்களின் தினமாகிய மே 1ஆம் திகதி ஆகும். திருச்சபையும் தன்னுடைய பங்கிற்கு சமூகப் போதனைகள் வழியாக (Social Teachings of the Church) தொழிலார்களின் நலன்மீது அக்கறை காட்டத் தொடங்கியது. அப்படி வந்ததுதான் இந்த விழாவாகும். இதனைத் தொடங்கி வைத்துப் பேசும்போது திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதர் இவ்வாறு சொன்னார், "தொழிலாளர்களாகிய உங்களுக்கென ஒரு பாதுகாவலர் உண்டு. அவர் வேறு யாருமல்ல, புனித யோசேப்பே. அவரிடத்தில் நீங்கள் பரிந்துபேசினால் உங்கள் மன்றாட்டு கேட்கப்படும்"

விவிலியத்திலிருந்து புனித யோசேப்பைக் குறித்து நாம் அறிந்து கொள்ளக்கூடிய செய்திகள் மிகவும் சொற்பமாகும். அவர் நேர்மையாளர் (மத் 1:19), அவர் தன்னுடைய குடும்பத்தை தச்சுவேலை செய்துதான் காப்பாற்றி வந்தார் (மத் 13:55) என்று அவரைக் குறித்துப் படிக்கின்றோம். அதைவிட விவிலியத்தில் நாம் வாசிப்பதற்கு வேறு ஒன்றுமில்லை. இருந்தாலும் தாவீதின் வம்சாவழியில் பிறந்த புனித யோசேப்பு வேலை செய்வதை அதிலும் குறிப்பாகத் தச்சு வேலை செய்வதை இழிவாகப் பார்க்காமல் செய்தார் என்பதுதான் நமது சிந்தனைக்கு உரியதாக இருக்கின்றது. ஆகவே, அவருடைய வாழ்வும், நாம் கொண்டாடும் தொழிலாளர் தினமும் நமக்கு என்ன செய்தியைத் தருகின்றது என்று சிந்தித்துப் பார்ப்போம்.

### கற்றுக்கொள்ளவேண்டிய பாடம்

தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பின் விழாவைக் ஒவ்வொரு வருடமும் கொண்டாடும் நமக்கு இவ்விழா உணர்த்தும் செய்தி என்ன என்று சிந்திப்போம்.

#### 1. எந்த உழைப்பும் இழிவானது அல்ல

இன்றைக்கு மனிதர்களிடம் இருக்கும் மிகவும் தவறான கருத்துக்களில் ஒன்று உடல் உழைப்பு என்பது மிகவும் இழிவானது. உழைக்காமல் எல்லோர்மீதும் ஆதிக்கம் செலுத்துவதுதான் உயர்ந்தது என்பதாகும். இத்தகைய எண்ணத்தை நம்முடைய வாழ்விலிருந்து அகற்ற வேண்டும். தொடக்கநூலில், ஆண்டவராகிய கடவுள் ஆறுநாட்கள் வேலை செய்துவிட்டு, ஏழாம் நாள்



ஓய்ந்திருந்தார் என்று படிக்கின்றோம். (தொநூ 2:2) அப்படியானால் கடவுளே ஓர் உழைப்பாளி, தொழிலாளி என்று நாம் புரிந்து கொள்ளலாம். தமதிருத்துவத்தில் இரண்டாம் ஆளாகிய இயேசுக் கிறிஸ்து மக்களால் "இவர் தச்சருடைய மகன்" என அழைக்கப்படுகின்றார். (மத் 13:55) இயேசுவும் தன்னுடைய வளர்ப்புத் தந்தை யோசேப்பு செய்த தச்சுத் தொழிலையே செய்திருப்பார் என இங்கே நாம் புரிந்துகொள்ள வேண்டும். புறவினத்தாரின் திருத்தூதர் என அன்போடு அழைக்கப்படும் புனித பவுல், "நீங்கள் செய்கின்ற அனைத்து வேலைகளையும் மனிதருக்காக அல்ல, ஆண்டவருக்காகவே செய்கின்றீர்கள் என உணர்ந்து உளமாரச் செய்யுங்கள். அதற்குக் கைமாறாக ஆண்டவர் உங்களுக்கு உரிமைப்பேறு அருள்வார்" என்பார். (கொலோ 3:23-24) இங்கே பவுல் உழைப்பை உளமாரச் செய்ய வேண்டும் என்று சொல்லி உழைப்பை உயர்வாகப் பேசுகின்றார்.

ஆகவே நாம் செய்வது எந்த வேலையாக இருந்தாலும் அது சரித்திரம் எழுதுவதிலிருந்து சாக்கடை அள்ளுவது வரை உழைப்பை உயர்வாகப் பார்க்கக்கூடிய மனநிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் உழைப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு பாராட்டுவதை நம்முடைய வாழ்விலிருந்து தவிர்க்க வேண்டும்.

#### 2. வேலைக்கேற்ற கூலி கிடைக்கச் செய்ய வேண்டும்

நற்செய்தியில் ஆண்டவர் இயேசு "வேலையாள் தம் உணவுக்கு உரிமை உடையவரே" என்பார். (மத் 10:10) உழைக்கின்ற ஒவ்வொருவரும் அதற்கேற்ற ஊதியம் பெறவேண்டும் என்பதுதான் இயேசுவின் ஆழமான போதனையாக இருக்கின்றது. ஆனால் இன்றைக்கு நிறைய இடங்களில் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இல்லை. "சூரியனை நாள்தோறும் முதுகில் சுமந்தோம். வியர்வையால் பூமியை நனைத்தோம். ஆனால் எங்களுக்கு மிஞ்சியது என்னவோ ஓர் உழக்கு நெல்தான்" என்று சாதாரண விவசாயிகள் படும் வேதனையைச் சுட்டிக்காட்டுவார் கவிஞர் இன்குலாப். இத்தகைய நிலை விவசாயத்துறையில் மட்டுமல்ல மாறாக எல்லா நிலைகளிலும் இருக்கின்றன. ஆகவே இத்தகைய நிலை மாறவேண்டும். வேலை செய்கின்ற அனைவரிற்கும் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்க வேண்டும்.

உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவேண்டும் என்று சொல்லும் விவிலியம், உழைக்காமல் சோம்பித் திரியும் நிலையையும் வன்மையாகக் கண்டிக்கின்றது. புனித பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய திருமுகத்தில் "உழைக்க மனமில்லாதவர் உண்ணலாகாது" என்பார் (2தெச 3:8). ஆகவே நம்முடைய வாழ்வில் இந்த இரண்டு நிலைகளையும் உணர்ந்து வாழவேண்டும்.

#### 3. உழைப்பால் உயர்வு

இந்த விழா நமக்கு உணர்த்தும் மிக முக்கியமான பாடம் உழைப்பால் உயர்வு என்பதாகும். இன்றைக்கு சமுதாயத்தில் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் எல்லாரும் திடீரென்று அந்த நிலையை அடைந்துவிடவில்லை. தங்களுடைய கடின உழைப்பால்தான் அத்தகைய நிலையை அடைந்திருப்பார்கள். ஆண்டவர் இயேசு சொல்லும் தாலந்து உவமை இதற்கு மிகச் சிறந்த உதாரணம். ஆகவே நாம் நம்முடைய வாழ்க்கையில் உழைப்பால் உண்டாகும் மகத்துவத்தை நாம் உணர்ந்துகொண்டு, அதற்கேற்ப வாழவேண்டும்.

ஆகவே தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பின் விழாவை ஒவ்வொரு வருடமும் கொண்டாடும் நாம் அவரிடம் விளங்கிய நற்பண்புகளை நமதாக்குவோம். உழைப்பை உயர்வாகப் பார்ப்போம். எம் சமூகத்தில் எம்மோடு வாழுகின்றவர்கள் எப்படியான வேலைகளைச் செய்தாலும் அவர்களை ஏற்று மதிப்போம். ஏனென்றால் அனைவரும் உழைப்பாளிகள் உழைப்பால் உயர்வு பெறுவோம். இறைவனின் மீட்புத்திட்டத்தில் பங்கெடுப்போம்.●

**புதிய அலுவலக விலாசம்:**

மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202,
தலைமன்னார் வீதி,
மன்னார்.



# புனித யோசேப்பின் வியாகுலங்கள்

- இ. அனட் சயந்தினி, திருச்சிலுவைக் கன்னியர்மடம், வேப்பங்குளம், வவுனியா. -

திருவிவிலியத்தின் அடிப்படையில் நோக்குகையில் பல மனிதர்கள் தங்களின் வாழ்நாட்களில் வெவ்வேறுபட்ட துன்பங்களையும், பல வியாகுலங்களையும் அனுபவித்து இருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. அதனடிப்படையில் நோக்குகையில் புனித யோசேப்பும் அவருடைய வாழ்நாட்களில் பல வியாகுலங்கள் நிறைந்த சந்தர்ப்பங்களை அனுபவித்திருப்பதை எம்மால் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

### மரியாள் கருவுற்று இருந்த சந்தர்ப்பம்

"அவருடைய தாய் மரியாவுக்கும், யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடிவாழும்முன் மரியா கருவுற்று இருந்தது தெரிய வந்தது." அவர் நேர்மையாளராய் இருந்தனாலும், மரியாவுக்குக் கிடைக்கப்போகும் தண்டனை பற்றி அறிந்திருந்ததாலும் அவர் மிகுந்த வேதனையுற்றிருந்தார் என அறியக்கூடியதாய் உள்ளது. இச் சந்தர்ப்பமானது யோசேப்பு அனுபவித்த வியாகுலத்தின் முதல் தருணமாகக் காணப்படுகின்றது.

### மரியாவின் பேறுகால வேதனையின் போது

"தாவீதின் வழிமரபினரான யோசேப்பும் தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு பெயரைப்பதிவு செய்ய கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றனர். மரியா கருவுற்று இருந்தார். அவர்கள் அங்கு இருந்த பொழுது மரியாவுக்கு பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினர்" பெண்கள் தமது முதல் பிரசவத்திற்கு தாம் பிறந்த வீட்டிற்குச் செல்வது இயல்பு. ஒரு பெண்ணின் பேறுகால வேதனை அவளின் மறுபிறப்புப் போன்றது என்பார்கள். இப்படிப்பட்ட துன்பமான சூழ்நிலையில் ஒரு விடுதியைக்கூட பெற்றுக்கொடுக்க முடியவில்லை என எண்ணியும், தீவனத்தொட்டியே பிள்ளையின் தொட்டிலாய் அமைந்திருப்பதைப் பார்த்தும் யோசேப்பு இரண்டாம் முறையாக வியாகுலங்களை அனுபவித்திருக்கின்றார் என்பது எமது கண்களுக்குப் புலனாகின்றது.

### ஏரோது குழந்தையைக் கொல்லத் தேடுதல்

"குழந்தையை ஏரோது கொல்வதற்காக தேடப்போகின்றான்" என கனவில் எச்சரிக்கப்பட்டபோது குழந்தைக்குப் பொறுப்புள்ள தந்தையாகவும், அதன் தாய்க்குத் தகுந்த துணைவராகவும் இருந்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை எவ்வாறேனும் நிறைவேற்ற



வேண்டும் என எண்ணி மூன்றாம் முறையாகவும் வேதனையை அனுபவிக்கின்றார்.

### எகிப்திற்குத் தப்பி ஓடிச் செல்லுதல்

"ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்கு கனவில் தோன்றி, நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குத் தப்பியோடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும் வரை அங்கேயே இரும். யோசேப்பு எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார்." குழந்தைக்கு நேர்ந்த இன்னல்களையும், பனியின் கொடுமையையும், மரியாவின் மென்மையையும் கண்டு மனம் நொந்து நான்காம் முறையாகவும் வியாகுலங்களை ஏற்கின்றார்.

### எகிப்தில் இருந்து திரும்பி வருதல்

"நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரயேல் நாட்டிற்குச் செல்லும். ஏனெனில் குழந்தையின் உயிரைப் பறிக்கத் தேடியவர்கள் இறந்து போனார்கள் என்றார்." குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு வருகின்றபோது அர்க்கெலாவின் ஆட்சிக்கு அஞ்சுகின்றார். குழந்தைக்கும் அதன் தாய்க்கும் தகுந்த பாதுகாப்பு அழிக்க வேண்டும் என எண்ணி ஐந்தாவது முறையாகவும் துன்பங்களை அனுபவிக்கின்றார்.

### குழந்தைக்கு விருத்தசேதனம் செய்தல்

மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்கு கொண்டு சென்றார்கள். குழந்தையைக் குறித்துக் கூறியவை பற்றி அதன் தாயும் தந்தையும் வியப்புற்றனர். இக் குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். எமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும் என்றார்." இயேசு அனுபவிக்கப் போகும் பாடுகளை எண்ணியும் குழந்தையை கருவில் தாங்கியதில் இருந்து மரியாள் அனுபவிக்கும் வார்த்தைகளில்லா வேதனையைக் கண்டும் மனம் வருந்தி ஆறாவது தடவையும் தன்னுள்ளே வியாகுலங்களை அனுபவிக்கின்றார்.

### இயேசு காணாமல் போதல்

"அவருடைய பெற்றோர் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். அப்பொழுது அவருடைய தாய் அவரை நோக்கி, 'மகனே ஏன் இப்படிச் செய்தாய்?' இதோ பார் உன் தந்தையும் நானும் மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோம்" என்றார். இயேசுவை உறவினரிடையேயும், அறிமுகமானவரிடையேயும் மிகுந்த வேதனையுடன் தேடிச்சென்றபோது தனது பொறுப்பில் கவனம் அற்று இருந்துவிட்டேன் என மீண்டும் ஏழாவது முறையாக வேதனைகளை அனுபவிக்கின்றார்.

ஒவ்வொருவரின் வாழ்விலும் துன்பங்களும், வேதனைகளும் வந்து செல்வது இயல்பானதே. ஆனால் துன்பத்தில் துவண்டு விடாது எழுந்து நடைபோடுவதே கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு. புனித யோசேப்பு எவ்வாறு வியாகுலங்களை அனுபவித்து எதிர்நோக்கி இருந்த கடவுளின் திட்டம் நிறைவேற்ற செயற்பட்டாரோ அதே போல் நாமும் அன்றாட வாழ்வில் வரும் வியாகுலங்களை இறைவல்லமையால் ஏற்று இறைவனின் பிள்ளைகளாய் மாறிடுவோம். "எதிர் நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள், துன்பத்தில் தளரா மனதுடன் இருங்கள், இறை வேண்டலில் நிலைத்திருங்கள்". (உரோ 12-12)●

**மன்னா வாசகர்களே,**


மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

அன்னை மரியாளின் வணக்கமாதக் கட்டுரைகள்

# செபமாலை நற்செய்தியின் சாரம்

## முன்னுரை

செபமாலை பக்தி முயற்சி. இது கத்தோலிக்கர்களின் வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றது. கத்தோலிக்கத் திருஅவையின் தனிப்பெரும் அடையாளமாகவும் இது உள்ளது. "கடவுளை விட்டு செபமாலையில் மரியாவைப் புகழ்ந்து கொண்டிருப்பது கடவுளை மறக்கடிக்கும் செயல் அல்லவா? சொன்னதையே திரும்பத் திரும்பச் செபிப்பதில் என்ன பயன்? "செபமாலை தேவையற்றது" என்று சொல்லி, செபமாலையைக் குறைப்படுத்துகின்ற மனநிலை கொண்டவர்கள் உண்டு. செபமாலையின் உண்மை அர்த்தம் என்ன? செபமாலை ஆன்ம வளர்ச்சிக்குச் செய்யும் பங்களிப்பு என்ன? இவைகளை அறிய முயலுவோம்.



## கத்தோலிக்கத்தின் அடையாளம் செபமாலை:-

செபமாலை கத்தோலிக்கத் திருஅவையின் சொத்து. பாமரன் முதல் படித்தவன் வரை எல்லோரும் வைத்திருப்பர். செபிக்கும் பக்தி முயற்சியின் வெளிப்பாடே இந்த செபமாலை. நீண்ட பாரம்பரிய மரபு கொண்ட இந்தச் செபமாலை இன்றும் மக்கள் மனதில் இடம் பிடித்த ஒரு செபத் தொகுப்பாகும். கத்தோலிக்கர்களின் இன்றியமையாத அடையாளம் என்றாலும் மறுப்பதற்கில்லை. நமது நம்பிக்கை வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள இந்தச் செபமாலையின் இரகசியங்களின் பொருளை அறிவது காலத்தின் கட்டாயமாகும். பிரிவினைச் சகோதரர்களின் தூண்டுதலும், அன்னைக்கு எதிரான வாதங்களும், தவறான போதனைகளும் மிகுந்துள்ள இக்காலகட்டத்தில் திருச் செபமாலையின் அர்த்தத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

## செபமாலையின் அமைப்பும் அடக்கமும்:-

முழுமையான செபமாலை என்பது 200 'அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க...' என்ற செபத்தைப் பத்துப், பத்தாகப் பிரித்து ஒவ்வொரு பத்து மணிக்கும் மீட்பின் மறையுண்மையும், ஒவ்வொரு பத்து மணிக்கும் ஒரு "விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே" என்ற செபத்தையும் (20முறை). தொடக்கத்தில் (மூவொரு இறைவனின்) தமதிரித்துவ புகழ்ச்சியோடு விசுவாச அறிக்கையைச் செபித்து அடுத்த மணியில் "விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே..." என்ற செபத்தையும், அதைத் தொடர்ந்து 3 மணியில் "அருள்மிகப் பெற்ற மரியே வாழ்க" என்ற செபத்தையும் செபித்துத் தொடர்ந்து மேற்சொன்னது போல 20 மறையுண்மைகளையும் ஒவ்வொன்றாகச் செபிக்கும் முறை தான் செபமாலை. அதற்கேற்றாற்போல் பெரிய மணியில் "விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே..." என்ற செபத்தையும், சிறிய மணியில் "அருள் மிகப் பெற்ற மரியே..." என்ற செபத்தையும், விசுவாசப் பிரமாணத்தையும் செபிக்கின்றோம். ஒவ்வொரு பத்து மணியும் முடியும் போதும் தமத்திருத்துவப் புகழை தந்தைக்கும், மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக. என்ற செபத்தைச் செபிக்கின்றோம். சுருக்கமாகச் சொல்வதென்றால் செபமாலை செபிப்பது என்றால் 20 மறையுண்மைகளையும் செபிக்கும் வழக்கமாகும். இந்த மறையுண்மைகளில் இயேசுவின் வாழ்வியல் கூறுகள் தியானப் பொருளாய் தரப்பட்டுள்ளன.

## நற்செய்தியின் சாரம் செபமாலை:-

செபமாலையில் மீட்பு வரலாற்றின் முன்னைய நிகழ்வுகளைக் கூறுகளாக கடவுளின் குறுக்கீட்டை, வரலாற்று ஈடுபாட்டை, அவரின் வெளிப்பாடுகளை மறையுண்மைகளில் மிகுந்த நன்றியோடு நினைவு கூறுகின்றோம். இயேசுக் கிறிஸ்துவின் மறையுண்மையைச் சிந்திக்க வைக்கும் சிறந்த கருவி இந்தச் செபமாலை. செபமாலை மீட்பு வரலாற்றின் சுருக்கம்: நற்செய்தியின் சாரம் என்றால் அது மிகையாகாது.

திருப்பலியில் விசுவாசத்தின் மறைபொருளை (இயேசுவின் பிறப்பு, செய்தி, பாடுகள், மரணம், உயிர்ப்பு) ஆகியவற்றைக் கொண்டாடி மகிழ்கின்றோம். நான்கு நற்செய்திகளில் இயேசுவின் வாழ்வு, செய்தி, தியாகம், சிலுவையின் அன்பு, உயிர்ப்பு இன்றைய இருப்பு என்று நற்செய்தியின் சாரத்தைச் செபமாலையில் அந்த 20 மறையுண்மைகளில் சிந்தித்து இறையனுபவம் பெறுவதற்குச் செபமாலை உதவுகின்றது.

➡ 13

# செபமாலை

"செபமாலை சொல்லும் படையணி ஒன்றை எனக்குக் கொடுங்கள் இந்த உலகத்தையே வெல்லுவேன்" 9ஆம் பத்திநாதர்.

செபம் + மாலை = செபங்கள் நிறைந்த மணிமாலை, முத்து மாலை, ரோஜா மாலை, இந்தச் செபமாலை கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் உயிர்நாடி, விண்ணகத்தின் ஈடேற்றம், குடும்பத்தின் ஒற்றுமை, தீய சக்திகளிலிருந்து விடுதலை. கிறிஸ்துவை அறிந்து அன்பு செய்யவும் அவரது பாஸ்கா மறைபொருளில் பங்குபெறுவதும் நம் ஒவ்வொருவரின் கடமை. இந்தப் பாஸ்கா மறைபொருளினைத் தன்னிலே உள்ளடக்கி நம் விசுவாச வாழ்வுக்கு ஒளியூட்டுவதே இந்தச் செபமாலை. இது செபிக்கும் மனுக்குலத்தின் முன்னோடியும், மாதிரியுமான கன்னி மரியாளின் செபம். இறைவனின் ஆசீர்வாதத்தை அபரிமிதமாக அன்னையின் பரிந்துரையிலே திருச்சபை கெஞ்சிக் கேட்கும் செபம். இந்தச் செபமாலை தட்டுத் தடுமாறித் தவிக்கும் தனி மனிதனைக் கரைசேர்க்கும் கலங்கரை விளக்கு. உடைந்து போன உள்ளங்களுக்கு உருக்கொடுப்பதும், சிதறிய குடும்பங்களை ஒன்று சேர்ப்பதற்கும் வல்லமை கொண்ட செபம் இந்தச் செபமாலை.

நம்மைப் பெற்றெடுத்த ஒவ்வொரு தாயும் கடவுளின் உருவம். ஒரு நாளைக்கு ஆயிரம் முறைகள் 'அம்மா' என்று அழைத்தாலும் சலிப்படையாது ஒவ்வொரு முறையும் ஓடிவந்து நம்மை அரவணைக்கும் மண்ணின் தெய்வம். "என் வாழ்வின் பெரிய பாடங்களையெல்லாம் என்னுடைய தாயின் காலடியில்தான் கற்றேன்" என்கின்றார் ஆபிரகாம் லிங்கன்.

இதைப்போல ஒவ்வொரு முறையும், 'அருள் நிறைந்த மரியே வாழ்க' என்று, தொடர்ந்து அன்னை மரியாளை வாழ்த்தும்போது நாமும் அருள் நிறைந்தவர்களாக மாறுகின்றோம். மீட்புக்கான பாடங்களை அன்னையிடம் கற்கின்றோம். இறைவனுடன் மிக நெருக்கமாக இருந்த கடவுளாயிருந்து மனித அவதாரம் எடுத்தவரின் தாயாகிய கன்னி மரியாளின் இருதயத்தைக் கொண்டு நாம் இறைவனைத் தியானிக்கின்றோம். நாம் எதைப்பற்றித் தியானிக்கின்றோமோ அதுவாகவே மாறுகின்றோம். நம் அன்னையின் ஆன்மீக அழகைத் தியானிக்கத் தியானிக்க நமது ஆன்மாவும் அழகுருகின்றது. கன்னி மரியாளின் வழியாக நம்மை இறைவனுடன் பிணைக்கும் அன்புச் சங்கிலிதான் இந்தச் செபமாலை●

# தேவதாயின் மாதம்! இதுவல்லவோ!




மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம் மே மாதம். அவரது அன்பையும், அரவணைப்பையும், ஆற்றலையும், பொறுமையையும், தியாகத்தையும் அவரது தெய்வீகப் பெருமைகளையும் போற்றிப் பாடும் மாதம் வைகாசி மாதம். வையகத்தின் அரசியை நம் அன்னையைப் புகழும் மாதம். குடும்பமாகவோ, குழுக்களாகவோ, இல்லங்களிலும், ஆலயங்களிலும் ஒன்றுகூடி செபிக்கும் மாதம். செபமாலை சொல்லி ஜெயத்தினை அடையும் மாதம்.

இத்தகைய செபவழிபாட்டு முறையை அநேக திருத்தந்தையர்கள் முக்கியமாக பன்னிரெண்டாம் பயஸ் போன்றோர் ஊக்குவித்துள்ளார்கள். அன்னை மரியாளின் திருச்சுரூபத்திற்கு முன்பாக அனைவரும் அமர்ந்து செபமாலை சொல்வதைப் பார்ப்பதே இனிமையான காட்சியாக இருக்கும். தங்களுடைய அன்றாட வேலைப் பளுவினின்று விடுபட்டு வீட்டிற்கு வந்ததும் குடும்பத்தார் அனைவரும் விரும்பத்தக்க முறையில் இதயத்தால் இணைந்து செபிப்பது, இறைவனையும், அன்னையையும் மகிழ்ச்சிப் படுத்தக்கூடிய ஒரு பக்தி முயற்சியாகும்.

இனிய அன்பினால் குடும்பத்தார் அனைவரையும் இணைக்கும் கயிறாக செபமாலை விளங்குகின்றது. மரித்தவர்கள் அனைவருக்காகவும் செபிக்கும்போது அனைவரையும் இணைக்கும் ஒரு பாலமாக இப்பக்தி முயற்சி விளங்குகின்றது. மாதாவின் பீடத்தைச் சுற்றி நாம் அனைவரும் அமரும்போது, அன்னை மரியாளும் நம்மோடு வந்து அமர்கின்றார். அன்னையுடன் அவர் மகன் இயேசுவும் உடன் வருகின்றார். மகனோடு பிதாவும் தூய ஆவியானவரும் அங்கு பிரசன்னம் ஆகின்றார். இவர்களோடு சேர்ந்து விண்ணகத்தில் இருக்கும் அனைத்துப் புனிதர்களும், தேவ தூதர்களும் ஒன்றுசேர விண்ணகமே திரண்டு நம் இல்லத்தில் அமர்ந்திருக்கும் அந்தக் காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள். எத்துணை பேரின்பம். அவ்வேளையில் நாம் செபத்தில் வேண்டிக் கேட்கும் காரியங்களை அள்ளி வழங்குகின்றது இந்த விண்ணகப் பேரணி. எனவே அன்னை மரியாளின் அன்பையும், அருளையும் பெற குடும்பமாய் அவர் பாதம் அமர்வோம். கூடியமர்ந்து செபிப்போம். திருச்செபமாலை சொல்லுவோம். புகழ்பாக்களைப் பாடி அவரைப் போற்றுவோம். அன்னையின் அருளை நிறைவாகப் பெறுவோம். கூடிச் செபிக்கும் குடும்பம் கோடி நன்மை பெறும்.●

# அன்னையர் தினமும்!
## அன்னை மரியாள் தினமும்!!



மே மாதம் மேன்மைமிகு மாதம். ஏனெனில் இது மாதாவின் மாதம். தினமும் ஆலயத்தில் மாதா வணக்கம் செலுத்தி அன்னையை மகிமைப்படுத்தி அவர் அருள் பெறும் காலம். இம்மாதத்தில் நாம் இன்னொரு நாளையும் சிறப்பிக்கின்றோம். அதுதான் நம்மை பெற்றெடுத்த அன்னையர்களைச் சிறப்பிக்கும் மாதம். நம் உற்ற தாயை மட்டுமல்ல பெற்ற தாயையும் நினைத்துப் போற்றும் மாதம் இம் மே மாதத்தில் அன்னையர் தினம் என்று ஒருநாளை நியமித்து அன்றைக்காவது நம் அன்னையரை நினைத்துப் பெருமைப்படுத்த வேண்டும் என்பதை உணர்த்த வேண்டும் என்கின்ற நிலைக்கு மனித மனங்கள் மரத்துப்போய் விட்டன.

வைகாசி மாதம் முழுவதும் மாதாவிற்கு வணக்கம் செலுத்தி, மாதாவுக்கு மலர் சூடும் எத்தனையோ மனிதர்களின் அன்னையர்கள் முதியோர் இல்லங்களில் தனிமையில் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தன் உதிரத்தையே பாலாக மாற்றி ஊட்டி வளர்த்த தாய். வெள்ளித் தட்டில் பால் சோற்றைப் பிசைந்து ஊட்டிய தாய் இதோ முதியோர் இல்லத்தில் வரிசையில் நின்று தட்டு ஏந்தி சோற்றுக்கு நிற்கிறாளே! இவர்களைப் பற்றி இன்றாவது நினைத்துப்பார் என நினைவூட்டும் நாள் தான் அன்னையர் தினம். ஆண்டவர் இயேசு தம் தாயை நம் அனைவருக்கும் தாயாகத் தந்ததால் அந்நேரம் முதல் மரியா நம் அனைவரையும் சொந்தப் பிள்ளைகளாக ஏற்று நம்மை அனைத்து துயரங்களிலிருந்தும் காத்து நல்வழிப்படுத்துகின்றாள்.

நம் துன்ப துயரங்களை, சோதனைகளை, மனக் குறைகளை ஏற்று தம் திருமகனிடம் பரிந்துபேசி நமக்கு உதவி பெற்றுத்தருகின்றார். ஆகவே அன்னையர்கள் இருவருமே போற்றுதலுக்குரியவர்கள். நம்வாழ்வில் நம் அன்னையும், மரியன்னையும் முக்கியமானவர்கள். அன்னை மரியாளை மகிமைப்படுத்திக் கொண்டு பெற்ற தாயை அலட்சியம் செய்வதில் பொருளில்லை.

அன்னை இல்லாத குடும்பம் முதுகு எலும்பில்லாத குடும்பம் போன்றது. அன்னை மரியாள் இல்லாத குடும்பம் உயிரற்ற, சதையற்ற, எலும்புக்கூடு போன்றது. ஆணிவேர் அறுந்த மரம் சாய்ந்து, காய்ந்து, வீழ்ந்து போகும். அன்னையும் அன்னை மரியாளும் இல்லாத குடும்பமும் அழிந்து போகும். சில குடும்பங்களில் தாயற்ற பிள்ளை தறுதலையாகிப் போவதை உலகில் காண்கின்றோம். ஆகவே அன்னை மரியாளுக்கு வணக்கம் செலுத்தும் இவ் வைகாசி மாதத்தில் எம்மைப் பெற்றெடுத்த தாயையும் மதித்துப் போற்ற வேண்டும் என்பதை உணர்வோம்.●

# மரியே வாழ்க



வாழ்க மரியே வாழ்க தாயே
வாழ்க வாழியவே - அன்னை மரியே
வானோர் போற்றிட வாழ்த்துக்கள் பாடியே
வணக்க மாதமாம் வைகாசி மாதத்தில்
புகழ்மாலையாம் செபமாலையை
சூட்டுகின்றோம்.

அருள் மழையாய் பொழிந்திட இறையருளை
அள்ளித் தருவாயே
உன்பதம் வருபவர்களுக்கு
பூமாலை கட்டி போட்டால் வாடிடுமே
புகழ்மாலையாம் செபமாலை அணிகின்றோம்
அது வாடாதம்மா உமக்கு

வேளாங்கண்ணியில்
காட்சி தந்த கன்னிகையே
வேண்டும் வரத்தினைப் பெற்றுத்தருவாயே
பாத்திமாவில் காட்சிதந்த மாதரசியே
பாமரமக்களுக்கு என்றும் துணை நிற்பாயே
லூர்த்து பதியில் காட்சி தந்த
லூர்து மாதாவே
பரமன் பதம் காண அழைத்திட்டாயே

தாயைத் தேடி வரும் கன்றுபோல
தரணியிலுள்ள மாந்தர் அனைவருக்கும்
தயை நீ செய்வீரம்மா - மாசில்லா கன்னியே
தாழ்ச்சி, பொறுமை, கற்பு, இறைபக்தி
விழுமியங்களை தந்தே எம்மை காப்பீரே... ●



ஆக்கம்: திருமதி. அன்னம்மா சகாயம்.
ஆசிரியை

# உயிர்ப்பு ஞாயிறு தாக்குதல் குறித்த பதிவுகள்

## திருத்தந்தை பிரான்சிஸ்

### வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில்

கொடூரமான குண்டுத்தாக்குதலின் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் கிறீஸ்தவ சமூகத்திற்கு எனது ஆழ்ந்த கவலையையும், அனுதாபங்களையும் தெரிவிக்கின்றேன்.



## பேராயர் பிலிப்நேரி பெரோ

### இந்திய ஆயர் பேரவையின் தலைவர்

இக் கொடூரத் தொடர் குண்டு வெடிப்புக்களிலே இறந்துபோனவர்களுக்கு ஆன்ம இளைப்பாற்றி கிடைக்கவும் காயமடைந்தவர்கள் விரைவில் சுகம் பெறவும் மன்றாடுவதுடன் இத்துன்ப வேளையில் எம் தோழமையையும், உடனிருப்பையும் வெளிப்படுத்துகின்றோம்.



## மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ

### மன்னார் மறைமாவட்ட ஆயர்

இது மிலேச்சத்தனமான செயல். செய்தவர்கள் நீதியின்முன் நிறுத்தப்பட வேண்டும். இதில் இறந்தவர்கள் அமைதியடைய செபிப்போம். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.



## பேராயர் மல்கம் றஞ்சித்

### இறந்தவர்களுக்கான இறுதி வழிபாட்டில்

இந் நாட்டின் மண்ணை இரத்தத்தினால் நனைக்கவேண்டாம், இறைவனின் பெயரால் மனித கொலைகள் செய்வதை நிறுத்துங்கள்.

**கொழும்பு பேராயர் இல்லத்தில் நடைபெற்ற திருப்பலியில்**

இவ்வுலகில் மனித வாழ்வை விட பெறுமதியானது எதுவுமில்லை.

**ஊடகவியலாளர் சந்திப்பில்**

நாட்டில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து உறுதியாகச் செயற்படுங்கள்.



## பேராயர் மார்க் கொளரி டச்

### அவுஸ்ரேலிய கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர்

இத்துன்பகரமான வேளையில் உங்கள் அனைவருக்கும் அன்புகலந்த தோழமையை தெரிவிக்கின்றோம். அமைதியின் ஆண்டவர் உங்களோடும், எல்லா இலங்கை வாழ் ஆயர்கள், குருக்கள், இறைமக்களோடும் உடனிருப்பாராக.

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

எமது இறைமக்கள் புத்திசாலித் தனமாகவும், சாதூர்யமாகவும் செயலாற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன். கட்சி வேறுபாடு இன்றி நீதியான விசாரணைகளை நடத்தி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் கொடூரமான வன்முறை நடத்தியவர்களின் வாழ்வு மனமாற்றத்திற்காகச் செபிப்போம்.





## கனேடிய பிரதமர் ஜஸ்ரின் குடேயு

தொடர் குண்டுத்தாக்குதல்கள் குறித்து எனது ஆழ்ந்த கண்டனத்தையும், கவலையையும் தெரிவிக்கின்றேன்.

## ஞான ஒளி பதிப்பாசிரியர் தலைப்பு

சமயத்தின் பெயரால் மக்களை அழிக்காதீர்கள்.

## மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்

### யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்

இது போன்ற துன்ப, அனுபவம் எமக்கு வேண்டவே வேண்டாம்.



## அருட்பணி. செபமாலை அன்புராசா

உயிர்த்த ஞாயிறு என்பது இலங்கையில் மானிடம் மரித்த ஞாயிறா?





## யாழ்ப்பாண தமிழ்ச்சங்கம்

இனம், மதம், மொழி கடந்து ஒன்றிணைந்து, வன்முறைக் கலாச்சாரத்தை ஒழிப்போம்.

# கண்ணீரோடு கரைந்த 10ஆம் ஆண்டு நினைவுகள்



## மீண்டும் வந்தோம் எப்படி...?

### - அ. மேரி கொன்செப்ரா, மடுக்கோவில் -

ஓ மானிடா!
கருவறையிலிருந்து கல்லறை வரைக்கும் தானே
உன் வாழ்க்கைச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது.
வண்டியிலிருந்து அச்சாணி ஒன்று பிசகியதால்
இடை வழியில் அது திண்டாடி
வண்டி கவிழ்ந்த கதையோ...?

ஒப்பந்தங்கள் எல்லாம் தப்பாகிப் போனதால்
நிர்ப்பந்தத்தின் கீழ் நிராயுத பாணிகளாக்கப்பட்டோம்.
காரணமின்றிய கைதுகள் - காலவரையறையற்ற
கதவடைப்புக்கள் - என்று ஏலத்தில் விடப்பட்டோம்.

பல வந்தங்களுக்குப் பயந்து - எத்தனை நாட்கள்
நில அறைக்குள் காலம் தள்ளினோம்...?
மூவேளை உணவு ஒரு வேளைக் கஞ்சியாக மாற
பலவேளை பட்டினியாய்க் கிடந்ததை - நம்
வயிறுகள் வாய்விட்டுச் சொல்லியழுமே.

அரிசி, பருப்புக்காய் அவதியுற்று - அலைமோதி
அதைப் பெற்று அவசரமாய் திரும்புகையில்
ஆழ ஊடுருவும் அணியின் அனர்த்தத்தில் - சிக்கி
அந்தரித்து ஆகுதியாகிய ஆன்மாக்கள் தான் எத்தனை?

ஆப்பிட்ட இடத்திலெல்லாம் நின்று அம்பிட்ட தெய்வங்களை
கூப்பிட்டு நாங்கள் கும்பிட்டுப் பார்த்தோம் - எம்
குடும்பங்களை கலைக்காமல் கூடவிருந்து காப்பாற்றென்று
இறையேதும் கண்டானோ இறைவன்...? எங்கள்
குரலொலியெல்லாம் குருதியாகவே எதிரொலித்தது.

கொத்துக் குண்டில் குலையாகத்தானே - எம்
குஞ்சுகளைப் பறிகொடுத்தோம் - அதற்குள் மீதமிருந்த
குருவிகளையும் குழறக் குழறப் பறித்தெடுத்தார்கள்.
"ஓ" எனும் அழுகைக்கு ஒரு நாளும்
குறைவில்லை நம் மண்ணில்.

வல்லரசுகளின் வான வல்லூறுகள் - எங்கள்
வாழ்க்கையை எப்படிச் சிதைத்ததென்று - "வலைஞர்மடம்"
வடலிகள் வாயிருந்தால் கதை சொல்லுமே.

பாதி நாட்கள் காட்டோரம்
மீதி நாட்கள் றோட்டோரம் - என்ற
வேடிக்கையான நிகழ்வு - எம் வாழ்வில்
வாடிக்கையாகி விட்டது
ஓடி ஓடிக் களைத்த பின்பும்
தேடித் தேடித்துரத்தும் துன்பம் தான் தொடர்கதையானது.



ஊரிழந்து, உடமையிழந்து, உறவிழந்து
இழப்பதற்கு இனி எதுவுமில்லை எனும் போதுதான்
"உயிர்" எனும் பிச்சை கேட்டு "உரியவர்களிடம்"
கையேந்தி நின்றோம்.
இத்தனையும் அரங்கேறி முடிந்த பின்னர்
மீண்டும் ஓர் ஒளி தேடி புறப்பட்ட
பாதையில் தான் எத்தனை கோரக் காட்சிகள்?

உயிரற்ற உடலங்களாகவும்
உயிர் போகத்துடிக்கின்ற ஜீவன்களாகவும்
நாதியற்று நாறிக் கிடந்தனர் நம்மவர்கள்.
இத்தனையும் கடந்து விட்டோம். - இனி என்ன
ஆகப் போகிறதோ...? - என்று இமைமூடி
இளைப்பாறுகையில் - முகமூடி அடையாள
அணி வகுப்பில் அடி உதையின் வலிகள்
பஞ்சடைந்த கண்களிலிருந்து - கண்ணீர் கூட
விட முடியாது - உடலில் தண்ணீர் இல்லாத நிலமை.

வந்த வழிகளெல்லாம் வலிகளையும், பழிகளையும்
சுமந்த எமக்கு - வாழ்வினில் வசந்தம் வீசும்
என்ற நம்பிக்கை வறண்ட நிலத்தினில்
வளைந்த கூடாரத்தினுள் வலுவிழந்து போகின்றது.
"மானிடமே விழித்தெழு! இது வரலாறு தந்த பாடம்,
உன் வாழ்வைக் கட்டியெழுப்பப் புறப்படு முயன்றிடு.
எனும் ஏதேதோ எண்ண ஓட்டங்களுடன் - ஆரம்பித்த
பேருந்துப் பயணம் எமக்கான திறந்த வெளிச் சிறைச்சாலையில்
தன் வேகத்தைக் குறைத்துக் கொள்கின்றது.●

## ஏற்க மறுக்கின்றது எம் இதயம்

### ஜெ. ஷமிலா, பள்ளிமுனைப்பங்கு



மூபத்தாண்டுகளின் போருக்கு முடிவுகட்ட
சல்லடையாக்கப்பட்ட எம் உறவுகளின்
மரண ஓல செங்குருதியில் எழுதப்பட்ட
வைகாசி பதினெட்டை
ஏற்க மறுக்கின்றது எம் இதயம்

ஈரைந்து ஆண்டுகள் ஆகியும்
ஏற்கவில்லை எம் இதயம் இழந்த
எம் வைகாசிப் பூக்களை எண்ணி
சித்தம் கலங்கி பித்தர்களானோம்
செந்தனல்களை ஆடையாக்கி
சிதைவேள்வியில் தம்முயிர் அர்ப்பணித்த
கார்த்திகைப் பூக்களை எண்ணி

காணாத உறவுகளை காணமாட்டோமா
என்று கதிகலங்கி நிற்கின்றோம்.
கண்ணிமைக்கும் நொடியில்
நிஜமே கனவாகி விட்டது - பலியான
எம் சித்திரைப் பூக்களை எண்ணி

கண்ணீருடன் விடை தந்தோம் உம் யாவர்க்கும்
மீளாத்துயரில் மீதமிருக்கும் யாமனைவரும்
மனிதம் இம் மண்ணிருக்கும் வரை
ஏற்க மறுக்கும் எம் இதயம் - உம் இழப்புக்களை
விண்ணிருக்கும் தாரகை போல்
என்றுமிருப்பீர் வெளிச்சமாய்

இறந்த எம் உறவுகள் யாவருக்கும் எம் இதய அஞ்சலி.●

## அகதிகள்



அழுதழுது கண்ணீரும் தீர்ந்துவிட்டது.
இனிக் கண்ணைப் பிழிந்தாலும்
இரத்தம் வருமே தவிர கண்ணீர் வராது
கண்களைப் படைத்து
கண்ணுக்கு பார்வையும் கொடுத்த இறைவன்
ஏன் எம் கண்ணீரை துடைக்க மறுக்கின்றான்.

Mdej;j kha;t hoej; vki; k mbi kgLj;j p
mfj; pshf;f pMdej; k;nfhz;l hLk;
Mz;t k;g; l;j; kdp; rKj; haj; j; vdd mrat; J?
Mz;l; t d;Vd;vki; k kl Lk;mfj; pMf;f; plhd;
fhi y cz Tmuej; plhy;gf y;vdd cz ;Z t J?
gf y;cz l;hy;, unt dd cz gJ?
nkhj;Lj;j; p;cz i; kNa c wf;gNghd gdDk;
cz l vdd Nlz bf ;f pbf f pdw?
Ngh;i t ap;c wf;hky;c i wAk;kdpj;hek;...!

இறந்த பின்பு மரணத்தின் அனுபவத்தை
எவனும் / எவளும் திரும்பி வந்து கூறுவதில்லை.
ஆனால் அகதிகள் நாம் அதை அனுபவிக்கின்றோம்.
எங்கள் உடலை கொசுக்களும், எறும்புகளும்,
கறையான்களும், தவளைகளும்
பதம் பார்த்து மகிழ்கின்றன.

மழை, வெயில், குளிர் காற்று,
பனி, பசி, வருத்தம் இவைகளை உணராது
சிப்பிகள் ஆக்கப்பட்டோம், ஆக்கப்படுகிறோம்.

சிறகு உடைந்த நிலையில் பறவை பறக்குமோ,
சிப்பியின்றி சிலை உருவாகுமோ?
உண்மையின்றி சிம்மாசனம் கிடைக்குமோ?
உண்மையின் இறைவா நீ எங்கே!
எம் அழுகுரல்கள் உனக்குக் கேட்கின்றதா? ●

## கந்தகப்புகையும், வெந்தணல் வாடையும் சூழ கடைசிவரை நிகழ்ந்தது என்னவெனத் தெரியாமலே கணப்பொழுதில் காற்றோடு காற்றாய்க் கலந்த கண்மணிகளின் கதறல் ஒலி கடவுளுக்கோர் கடிதம்

### - லிஷா கொண்ஸ்ரன்ரயின், மடுக்கோவில் -




இரவின் மடியில் நிலவின் ஒளியில்
மேகம் வழியே - எங்கள் தேகம் தேடி
தேசம் கடக்கின்றோம்.
சிரித்துப் பூத்திருந்த சின்ன விண்மீன்களாய்
சித்திரக் கோலம் போட்டபடி - நாங்கள்
மரித்துப்போன 'அந்த மண்ணை'
மறுபடியும் ஒருதரம் காண்பதற்காய்.

கனவுகாணும் கதவைத்திறக்க
நினைவு நிழலாய் சிறகு விரிக்க - நாங்கள்
நிஜமாய் வாழ்ந்த வீடுகளையும் - எங்கள்
நிழல்கள் நின்றாடிய வீதிகளையும்
நின்று ஒருமுறை நிமிர்ந்து பார்க்கின்றோம்.
தொலைதூரம் போகும் அந்தக் காற்றோடு
தொலைந்துபோன எங்கள் சுவாசத்தின் வாசமும்
தொடர்ந்தே கலந்து கரைகின்றதே.

சிறிய கூட்டினுள் பெரிய கனவுகளை
சுமந்து சென்ற எங்களை - சிலர்
சிதைத்துப் புதைத்தனர்.
வெண்ணிற ஆடையும், வெற்றிச்சிரிப்பும் மறைய
செந்நிற குருதியில் தோய்ந்து
சிதறித்தானே கிடந்தோம் - சின்னாபின்னமாய்
சிவப்பு ஓவியங்கள் நாங்கள்

உதிரம் உறைந்து உயிர்போகும் வலியைக் கூட - எம்
உடலினால் உணரமுடியவில்லை - எங்கள்
உருவம் தேடிய உறவுகளின் கண்ணீர் கதறல் கூட - எம்
காதினில் கேட்டதாக நினைவிலில்லை.
நிமிடம் ஒன்றில் அத்தனையும் நிகழ்ந்து நிறைவேறிற்று
நாளைய விடியல் நமக்கு இனி நிஜமில்லை - என்று
நினைக்கும் போதுதான் - நீர்துளிகள்
நிசப்தமாய் நீர் மலர்களை நிறைக்கின்றது.

ஏடு சுமந்து நாங்கள் - காடுகடந்து சென்று - கல்வி
தேடும் - பாடும் பறவைகளாய் - வீடு திரும்பும்போது தானே
கேடு நினைப்பவர்கள் - எம்மை மூடும் கரும்புகையினுள்
மூழ்கடித்து முற்றாக நிறுத்தினார்கள் எங்கள் மூச்சினை.

உறவுகளே! எங்கள் உயிரின் கதறல் ஒலி
உங்களுக்கு கேட்கின்றதா? - ஆனால் உங்கள்
உள்ளக்குமுறல் எம்மை உலுக்குகின்றது.
உருவமற்று உலவும் எங்கள் உணர்வுகளில்
உங்கள் நினைவுகள் ஊசலாடுகின்றன.
பாராளும் எங்களை போர்மூட்டத்தில் பொசுக்கி
வேரோடு சாய்த்துவிட்டனர். - நீர் நிரம்பும்
விழிகளுக்கு ஆறுதல் - யார்வந்து சொன்னாலும் தீராது

உங்களின் கரம்பிடித்து நடக்க - எங்களின்
கைகளை நீட்டிப் பார்க்கின்றோம் - எங்கள்
தொடுகையை தொட்டுணர்கிறீர்களா? - கண்ணீர்
கோடிடும் கன்னங்களை காற்றாக வந்து தழுவுகின்றோம்.
கண்டுணர்கிறீர்களா? ..... அந்தக்கணங்களை.
உண்மையில் இப்பாவம் யாரைத்தான் சேரும்? உன்னதரே!
உரைப்பீர் எம்மவர்க்கு உள்ளம் உறைக்க

அன்னை மடியென்று ஆடிப்பாடி மகிழ்ந்தெம்மை - அமலியவள்
தன் காலடியிலேயே கவனமாய்ப் - பேண
நினைத்திட்டாள் போலும்
இறைவா! உம்மிடம் இறைஞ்சியே கேட்கின்றோம் -
இனியொரு தேசம்
மலருமென்றால் அது இரத்தவாடையும் இனமத பேதமும்
இன்னல்கள் எதுவுமற்ற - இளகிய மனம் கொண்டவர் வாழும்
அழகிய உலகமாய் உருவாகட்டும். - அப்போது நாம்
வருவோம் பழகிய பாசங்களைத் தேடி - மீண்டும்
"பச்சிளம் பாலகராய்".●


## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள்.

தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*



# மாணவர் மன்னா



## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 10 [திருத்துதர் பணி 1 – 10 வரை]

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.07.2019ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
9. “விவிலிய வினாவிடைப் போட்டி - 10”, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### விவிலிய வினாக்கள்

01. பேதுரு ஒருநாள் எழுந்து நின்று பேசிய போது அதில் இருந்த சகோதர சகோதரிகள் எத்தனை பேர்?

02. “இறுதி நாட்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்” என்று திருத்தூதர்பணிகள் எந்த அதிகாரம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

03. “வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்று விட்டீர்கள், ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார் இதற்கு நாங்கள் சாட்சிகள்” என்று திருத்தூதர்பணி எந்த அதிகாரம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

04. பேதுருவும் யோவானும் கல்வியறிவற்றவர்கள் என்பதை அறிந்திருந்த தரப்பினர் யார்?

05. சீடர்கள் அனைவரும் ஒருமனத்தவராய் எங்கே கூடியிருந்தனர்?

06. “ஆனால் அவரது ஞானத்தையும் தூய ஆவி வாயிலாக அவர் பேசிய வார்த்தைகளையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலவில்லை” இவை எந்த அதிகாரம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

07. தன்னை கொலை செய்தவர்களை ஸ்தேவான் ஆண்டவரிடம் எப்படி வேண்டிக் கொண்டார்?

08. “ஏனென்றால் நீ கசப்பு நிறைந்த உள்ளத்தினனாய் தீவினைக்கு அடிமையாயிருப்பதை நான் காண்கின்றேன்” என்று கூறினார் இவை கூறும் அதிகாரம் வசனம் எது?

09. புனித பவுல் எத்தனை நாட்கள் பார்வையற்றிருந்தார்?

10. கடவுள் ஆள் பார்த்து செயற்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கின்றேன் என்று கூறிய சீடர் யார்?

**புதிய அலுவலக விலாசம்:**
மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.



## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 09 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
அ. ஆன் அஜந்திக்கா,
கோயில்வீதி,
உயிலங்குளம் பங்கு

**இரண்டாம் பரிசு:**
போல்றாஜ் நனுஷன்,
6ம் வட்டாரம்,
விடத்தல்தீவு பங்கு

**மூன்றாம் பரிசு:**
தி. அயந்தினி,
காத்தான்குளம்,
கட்டைக்காடு பங்கு

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 70 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 52 பேர்.

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 09இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. A. டிவைன்சன் ஆன் அன்ரனி குருஸ், வங்காலைப்பங்கு.
02. மை. எரிக்ஷா, நானாட்டான் பங்கு.
03. வி. ஆன் றக்சனா, புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
04. ர. மதுஷிகா, பண்டாரவளைப் பங்கு.
05. S. அமிடா, பண்டாரவளைப் பங்கு.
06. எ.மேரி எமோறினா, அடம்பன் பங்கு.
07. ர. ஜயபிரியா, பண்டாரவளைப் பங்கு.
08. அ. டல்சிகா, அளவக்கைப் பங்கு.
09. அ. அகஸ்ரீன், பறப்பாங்கண்டல் பங்கு.
10. அ. அகஸ்ரீனா, பறப்பாங்கண்டல் பங்கு.
11. C. பற்றிக் கிஷாந், தாழ்வுபாடு, எழுத்தூர் பங்கு.
12. S. லினுக்ஷி, பதுளை வீதி, பதுளைப்பங்கு.
13. கி.அ. ஆன் மல்ஷிக்கா, உயிலங்குளம் பங்கு.
14. மை. எரிக்ஷன், நானாட்டான் பங்கு.
15. அன்ரனி ஜெபர்சன், புதுக்கமம், வஞ்சியன்குளப்பங்கு.
16. தி. தனுஜான், காத்தான்குளம், கட்டைக்காடு பங்கு.
17. இ. ஆன் குலோடியா, கட்டைக்காடு பங்கு.
18. அ. மேரி அனோலின், கட்டைக்காடு பங்கு.
19. இ. றெனிஸ் யஷோன், உயிலங்குளம் பங்கு.
20. றெ.சி. ஸ்ரெவின் றெவ்வல், வங்காலைப்பங்கு.
21. சோ. யூடிற் லெற்றிஷியா, கீரி, எழுத்தூர் பங்கு.
22. அ. ஆன் சோபிக்கா, வஞ்சியன்குளப்பங்கு.
23. அ. அன்ரனி ஷெரோன், வஞ்சியன்குளம் பங்கு.
24. ஜெ.பிறின்ஸ்ரன் ஜோ பீரிஸ், எமில் நகர், பேராலயப்பங்கு.
25. கு.ஆன் சினேகா, காத்தான்குளம், கட்டைக்காடு பங்கு.
26. றெ.சி.கிறிஸ்வோன் றெவ்வல், வங்காலைப்பங்கு.
27. ஜெ.ஆன் பிறித்திக்கா பீரிஸ், எமில் நகர், பேராலயப்பங்கு.
28. ஜெ. ஜெனுக்சா, பறப்பாங்கண்டல் பங்கு.
29. வி. சுடர்மாறன், பறப்பாங்கண்டல் பங்கு.
30. D. லீமா இஸ்பெல், அப்புத்தளைப் பங்கு.
31. எ. அன்ரனற் ஜெபர்சனா, வஞ்சியன்குளப்பங்கு.
32. கு. நியூஸ்ரெலா, முதலைகுத்தி, உயிலங்குளப்பங்கு.
33. சு. லெயூமி, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளப்பங்கு.
34. R. சர்மிலா, ஜோசவாஸ் நகர், தோட்டவெளிப்பங்கு.
35. கொ. அகுஸ்ரினா, முத்தரிப்புத்துறைப்பங்கு.
36. M. மைக்கல் பமஸ், தோட்டவெளிப்பங்கு.
37. வி. பென் நிக்சிகன், முதலைகுத்தி, உயிலங்குளப்பங்கு.
38. V. ஆன் துஷ்மிதா, உயிலங்குளப்பங்கு.
39. S.நெகோமியா, முதலைகுத்தி, உயிலங்குளம் பங்கு.
40. ச. டிலைக்ரா, அரிப்பு மேற்கு, முத்தரிப்புத்துறைப்பங்கு.
41. மேரி றொசேன் குருஸ், வங்காலைப் பங்கு.
42. D. ரெஷ்மிகா, பண்டாரவளை பங்கு.
43. G. குகலாஷினி, பண்டாரவளை பங்கு.
44. J. பியூரன், சின்னக்கரிசல், தோட்டவெளிப்பங்கு.
45. S. டெல்சினா, காத்தான்குளம், கட்டைக்காடு பங்கு.
46. சை.யேசுதாசன், காத்தான்குளம், கட்டைக்காடு பங்கு.
47. ம. ஆன் றொசாந்தி, சின்னக்கடை, பேராலயப்பங்கு.
48. க. இவோன்சிக்கா சிலாவத்துறைப்பங்கு.
49. ச. அன்ஸ்லின், கட்டைக்காடு பங்கு.
50. அ. றொசாணி, நானாட்டான் பங்கு.

## கலையருவியின் ஏற்பாட்டில் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள்

### நற்செய்தியாளர் விருது - 2019

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணிமையம் கலையருவி மன்னாப் பத்திரிகை ஊடாக நடத்திய விவிலிய வினாவிடைப் போட்டிகளில் பங்குபெற்றி “நற்செய்தியாளர் விருது” போட்டியில் கலந்துகொள்ள பலர் தகுதிபெற்றனர். கடந்த சித்திரை மாதம் 27ஆம் திகதி இறுதிப் போட்டியில் பங்குபெற்றி வெற்றிபெற்ற மாணவர்களை மறைமாவட்டம் சார்பாக பாராட்டுகின்றோம்.

#### விருது பெறுவோர்

| கீழ்ப்பிரிவு | மேற்ப்பிரிவு |
|---|---|
| **1ஆம் இடம்:** | **1ஆம் இடம்:** |
| ம. ஆன் மியூலிக்கா குலாஸ்<br>தலைமன்னார் பங்கு | பேடினன் வினுஜா,<br>தலைமன்னார் பங்கு |
| **2ஆம் இடம்:** | **2ஆம் இடம்:** |
| அ. ஆன் சோபிக்கா<br>வஞ்சியன்குளம் பங்கு | சை. யேசுதாசன்<br>கட்டைக்காடு பங்கு |
| **3ஆம் இடம்:** | **3ஆம் இடம்:** |
| S. டெல்சினா<br>கட்டைக்காடு பங்கு | அ. மேரி அனோலின்<br>கட்டைக்காடு பங்கு |
| **4ஆம் இடம்:** | **4ஆம் இடம்:** |
| இ. ஆன் குளோடியா<br>கட்டைக்காடு பங்கு | யோ. அபிஷா<br>உயிலங்குளம் பங்கு |
| **5ஆம் இடம்:** | **5ஆம் இடம்:** |
| ம. டெரீனா.<br>வேப்பங்குளம் பங்கு | தி. அயந்தினி<br>கட்டைக்காடு பங்கு |

#### சான்றிதழ் பெறுவோர்

**கீழ்ப்பிரிவு**

1. அ. ஆன் மிதுஷிக்கா, வஞ்சியன்குளப்பங்கு

**மேற்ப்பிரிவு**

1. கு. ஆன் சினேகா, கட்டைக்காடு பங்கு
2. ச. மேரி டிஷா, வஞ்சியன்குளப்பங்கு
3. சே. நெகோமியா, உயிலங்குளப்பங்கு
4. A. டிலோஜினி, பள்ளிமுனைப்பங்கு
5. த. பென்சியன், தலைமன்னார்ப்பங்கு
6. ம. திருசாளினி, வேப்பங்குளப்பங்கு
7. றெ. லெயூமி, உயிலங்குளப்பங்கு
8. செ. பிபியானா குரூஸ், முத்தரிப்புத்துறைப்பங்கு
9. ம. டிஷாமினி, வேப்பங்குளப்பங்கு
10. யோ. ஜெரோஷா பெரிய பண்டிவிரிச்சான்பங்கு
11. அ. அன்ரனி ஷெரோன், வஞ்சியன்குளப்பங்கு.

### வியாகுலப்பிரசங்கம் - 2019

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணிமையம் கலையருவியினால் மாணவர் மற்றும் வளர்ந்தோர் மத்தியில் கடந்த பங்குனி மாதம் 24ஆம் திகதி தவக்கால பாரம்பரிய கலைவடிவமாகிய வியாகுலப்பிரசங்கம் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் பங்குபெற்றி வெற்றியீட்டியவர்களை மறைமாவட்டம் சார்பாக வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

#### விருது பெறுவோர்

**சிறுவர் குழு**

**1ஆம் இடம்:**
T. றெரன்சியா - யோசவ்வாஸ் நகர் பங்கு

**2ஆம் இடம்:**
M. நிவேதிகா - முருங்கன் பங்கு

**3ஆம் இடம்:**
M. ஆன்ஸ் லயா - யோசவ்வாஸ் நகர் பங்கு

**வளர்ந்தோர் குழு – ஆண்கள்**

**1ஆம் இடம்:**
A. அல்வின் அருள்றாஜ் - உயிலங்குளம் பங்கு

**2ஆம் இடம்:**
ஜெனிவீ பாஸ்கரன் குரூஸ் - பேசாலைப் பங்கு

**3ஆம் இடம்:**
P. மரியதாஸ் பீரிஸ் - முத்தரிப்புத்துறைப் பங்கு

**வளர்ந்தோர் குழு – பெண்கள்**

**1ஆம் இடம்:**
இ. விதுஷா - யோசவ்வாஸ் நகர் பங்கு

**2ஆம் இடம்:**
செ. ஆன் ஜென்சி - வங்காலைப் பங்கு

**3ஆம் இடம்:**
ம. சிராணி - யோசவ்வாஸ் நகர் பங்கு

**இவர்களுக்கான விருதுகளும், சான்றிதழ்களும் மறைமாவட்ட சமூகத் தொடர்பு தின கலைவிழாவில் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள்.**

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்:**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002 9782



# இளையோர் மன்னா



## விடைகாணா வினாக்கள்

பள்ளிக்குச் சென்ற பிள்ளை பட்டம்பல பெற்று
பாரிலே உயர்வான் என்று
பாதையில் காத்திருக்க - அவன்
வீதியில் கிடந்தான் பரிதாபப் பிணமாய்…!



வெளிநாடு சென்ற பிள்ளை - வாழ்வில்
ஒளியேற்றி விடுவான் என்று
வழிமேலே விழிவைக்க - அவன்
இல்லிடம் தெரியவில்லை….!
உயிருண்டா புரியவில்லை…!

காலமெலாம் கடலிலே வலைவீசி
காசுபணம் தேடித் தந்த கடைசி மகன்
கடன் தொல்லை தீர்ப்பானென்று காத்திருக்க - அவன்
கயவரின் சூழ்ச்சியால் உடலோடு கலந்து விட்டான்…!
கடவுளை நேசித்து கண்ணியமாய் வாழ்ந்து
கவலைகள் நீக்கி கடினமாய் பாடுபட்டு
கண்ணயர நேரமின்றி கடும்பணி புரிந்தவர்
கண் நொடிப் பொழுதிலே காணாமலாக்கப்பட்டார்…!
நாட்டுக்காய் உழைத்த நல்லபல உள்ளங்கள்
வீட்டையும் மறந்து ஏட்டையும் துறந்து
துடியாட்டமாய் ஓடிய ஓட்டங்களுக்கெல்லாம்
இடிபோல வந்தது விடியாத பொழுதுகள்…!



பகைவர் செய்த பயங்கரவாதத்தால்
பரிதாபமாய் மடிந்த பல நூறு மாந்தரின்
பாசங்கள் இல்லாமல் மோசமாய்ப் போன - பல
பரிதாப உள்ளங்கள் பாதையில் பைத்தியமாய்…!
அடிமன ஆழத்தில் அழுத்தும் இக்கேள்விக்கு
ஆறாத ரணங்களால் நாம் படும் பாட்டிற்கு
இடிபோல தாக்கி எம் மாறாத மனங்களில்
பசுமரத்தாணி போல் விடைகாணா வினாக்களாய்….! ●

*- அ. ஜஸ்மின் ஷரோன் ஆவணம் நானாட்டான் -*

## இலட்சியம்? இளையோரின் சிந்தனைக்கு

இளைஞர்கள் காண விளைவது புதுமையான உலகம் என்பதை நாம் அறிவோம். எவரும் எண்ணிப் பார்க்க இயலாத எண்ணில்லாப் புதுமைகளின் பரிமாணங்களைக் கொண்டதே திருவிவிலியம். 33 வருடங்கள் இளமையாக வாழ்ந்த இயேசு தம் இறைத்தந்தையின் இறையரசிற்கான திருவுளத்தை நிறைவேற்ற இளமைத்துடிப்போடு செயற்பட்டார்.

இளைஞனான இயேசு இளமையின் இலக்கை சரியாகத் தெரிவு செய்தார். அவர் தம் இலக்கை அடைய இவ்வுலகில் வாழ்ந்த 33 வருடங்களில் குறுகிய காலமாகிய மூன்று வருடங்களில் சற்றும் தம் இறைத்தந்தையின் திருவுளத்திலிருந்து விலகாமல் பயணம் செய்து இலக்கை அடைந்தார். கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்ற இன்றைய இளையோர் தமது வாழ்க்கை, கல்வி, வேலை, எதிர்காலம் குறித்து எப்படியான மனப்பக்குவத்தைக் கொண்டிருக்கின்றார்கள்? அவர்களது ஆற்றல்கள், திறமைகள், கொடைகள், குடும்பம், கிறிஸ்தவப்பின்னணி இவற்றோடு இவர்கள் கொண்டிருக்கின்ற எதிர்கால இலக்கு சரியான பாதையை நோக்கி செல்லுகின்றதா? இளைஞனே இயேசுவைப் பின்செல், நீ வெற்றி பெறுவாய்.●

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்
# கிறிஸ்தவத் துறவற வாழ்வு

**அருட்தந்தை யா. ரமேஸ் அ.ம.தி**

### 1. துறவற வாழ்வின் தோற்றம்

3ஆம், 4ஆம் நூற்றாண்டிலே பேரரசில் வேத கலாபனைகள், தப்பறையான போதனைகள், தெய்வ வழிபாடு, சிலை வழிபாடு, ஐரோப்பியப் பழங்குடி மக்களின் படையெடுப்புக்கள், ஒழுக்க வாழ்வில் ஏற்பட்ட சீர்கேடுகள் நிறைந்த குழப்பமான சூழல் நிலவியது. இச்சூழலில் கிறிஸ்தவத்தைச் சாட்சியத்தன்மையுடன் வாழ்ந்து தூய்மைப்படுத்தும் தேவை உணரப்பட்டது. இலௌகீகத்திற்கு முதலிடம் கொடுத்து வாழும் சூழலில் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வு பெலவீனம் அடைந்தது. அத்தகைய சூழலில் தங்கள் குடும்பங்களுடன் இருந்து கொண்டு கிறிஸ்தவத் தூய்மையைப் பிரமாணிக்கமாய் வாழ்தல் கடினம் என உணரப்பட்டது. இந்நிலையில் உலகத்தாரிடமிருந்து பிரிந்து, இலௌகீக காரியங்களில் ஈடுபடுவதை மட்டுப்படுத்தி, இயேசுவுடன் நெருங்கிய உறவு கொண்டு, செபத்திலும், தியானத்திலும், அன்புப் பணியிலும் ஈடுபட்டு கிறிஸ்துவின் போதனைகளைச் செயற்படுத்தி அவற்றை நிறைவாகக் கடைப்பிடித்து வாழும் நோக்குடன் துறவற வாழ்வு தோற்றம் பெற்றது.

### 2. துறவற வாழ்வின் வளர்ச்சியிலே காணப்பட்ட பல்வேறு படிமுறைகள்

**தபோதனர்** (Ascetics)

கிறிஸ்து பரிசுத்த தனத்தைப்பற்றிப் போதித்ததையும், வாழ்ந்து காட்டியதையும், கிறிஸ்தவ உத்தம தனத்தைப்பற்றி திருத்தூதர்கள் கற்றுக்கொடுத்ததையும் திருச்சபை ஆரம்பகாலம் முதல் எக்காலத்திலும் அனுசரித்து வந்திருக்கின்றது. கிறிஸ்துவின் படிப்பினைக்கு ஏற்ப ஆரம்பத்தில் அநேக கிறிஸ்தவர்கள், ஆண் பெண் இரு பாலாரும் கிறிஸ்துவை நெருக்கமாகப் பின்பற்றிப் போவதாகவும், பரிசுத்த தனத்தை நிறைவாக வாழப்போவதாகவும் வாக்களித்து, தத்தம் குடும்பங்களில், வீடுகளில் இருந்து கொண்டே திருமண வாழ்வைத் துறந்து விரத்துவத்தை அனுசரித்து பலவிதமான ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். ஏழ்மையிலும், செபத்திலும், தபத்திலும், ஒறுத்தலிலும் தம் வாழ்நாட்களைச் செலவழித்து நோயாளிகளைத் தரிசித்தல், அனாதைகளைக் கண்காணித்தல், ஏழைகளைப் பராமரித்தல், சிறைக் கைதிகளைத் தரிசித்தல் போன்ற பல பிறநலப் பணிகளில் தம்மை அர்ப்பணித்தார்கள். சில இளம் பெண்கள் தங்கள் கற்பை இறைவனுக்கு அர்ப்பணித்து, தூய வாழ்வு வாழ்ந்தார்கள். இவ்வாறு தங்கள் குடும்பங்களிலிருந்து கொண்டே கிறிஸ்தவ உத்தமதனத்தை வாழ்ந்தவர்கள் **'தபோதனர்'** (Ascetics) என அழைக்கப்பட்டனர். இவர்களின் பிரம்மச்சாரிய வாழ்வுக்கு இறைவாக்கினர் எலியாஸ், திருமுழுக்கு யோவான், கிறிஸ்து, பவுல் ஆகியோரின் வாழ்க்கைகள் முன்னுதாரணங்களாகத் திகழ்ந்தன.

### ஏகாந்திகள் அல்லது பாலைவனத்துப் பிதாக்கள்

3ஆம் நூற்றாண்டு முதல் எகிப்தில், சிரியாவில் கிறிஸ்தவ உத்தம தப வாழ்வை விரும்பியவர்கள் காலப்போக்கில் வனத்துத் தந்தையென அழைக்கப்பட்டனர். அக்காலத்தில் பேரரசில் வேதகலாபனைகள், பேதகங்கள், துர்மார்க்கம், சிலை வழிபாடு, மிலேச்சரின் படையெடுப்புக்கள், பதற்றங்கள் போன்ற நெருக்கடிகள் நிறைந்த குழப்பமான சூழல் நிலவியது. இந்நிலையில் இவர்கள் கிறிஸ்துவின் வாழ்க்கை முன்மாதிரிகைகளைப் பின்பற்றித் தம்ஆன்மீக வாழ்வைச் செபத்திலும், தியானத்திலும் வலுப்படுத்திக் கொள்ள பாலைநிலங்கள் போன்ற தனிமையான இடங்களைத் தெரிந்து கொண்டனர். கிறிஸ்துவைப்போல் நோன்பிருந்து ஏகாந்த வாழ்வு வாழ்ந்தனர் (மத்3:14). இறைவார்த்தையை ஆழ்ந்து தியானித்து தம் சுய ஆசைகள், சொத்துக்கள் உறவுகளைத் துறந்து, திருமணம் செய்யாமல் தவவாழ்வு வாழ்ந்தனர். தொடர்ந்து வந்த காலத்தில் துறவிகள் ஒரே இல்லத்தில் குழும வாழ்வு வாழவும், வேலைத்திட்டங்களில் ஈடுபடவும், உடல் உழைப்பைப் பயன்படுத்தவும் ஒழுங்கமைப்புப் பெற்ற வாழ்க்கை முறை உருவாகியது. இவர்களுள் முக்கியமானோர் தேபஸ் சின்னப்பர், வனத்து அந்தோனியார், பக்கோ, மியாஸ், புனித பசில் ஆவர்.

**துறவிகள்**

தேபஸ் சின்னப்பரின் சீடராகக் கருதப்படும் எகிப்து அந்தோனியார் துறவிகளின் பிதாப்பிதாவென்றும், கிறிஸ்தவ துறவற வாழ்வின் ஸ்தாபகரென்றும் கருதப்படுகின்றார். ஒவ்வொரு துறவியும் தன் விருப்பத்தின்படி தமது குடிசைகளில் ஏகாந்தத்தில் செப வாழ்வை நடத்தினர். ஆனால் குறிப்பிட்ட நாட்களில் சிறப்பாக சனி, ஞாயிறுகளில் அவர்கள் மற்றவர்களோடு ஒன்றுகூடி பொதுவாக செபிக்க, தியானம் செய்ய, திருவிவிலியத்தைப் படிக்க, வழிபாடு நடத்த சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இது துறவறப் பொது வாழ்வுக்கு, ஆதீனத் துறவற வாழ்க்கைக்கு வித்திட்டது. இவர்கள் பொதுச் செபம், தியானம், ஞானவாசனை போன்றவற்றில் பங்கெடுத்தாலும் தனித்தனியே அல்லது இருவரிருவராகத் தங்கள் குடிசைகளிலேயே ஏகாந்திகளாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கென்று ஒரு மடாதிபரோ, அல்லது ஒழுங்கு விதிகளோ இருக்கவில்லை.

### 3. வனத்துப் பிதாக்கள்

**தேபஸ் சின்னப்பர்:**

திருச்சபையின் பாரம்பரியத்தின்படி தேபஸ் சின்னப்பர் முதல் துறவியாகக் கருதப்படுகின்றார். எகிப்திலுள்ள தேபஸ் என்னும் இடத்தில் 229ஆம் ஆண்டில் பிறந்த சின்னப்பர் பதினைந்து வயதில் தம் பெற்றோரை இழந்து அனாதையானார். சிறந்த கல்விமானும், செல்வருமான அவர் அக்காலத்தில் நடைபெற்ற கலாபனையால் பாதிக்கப்பட்டு தன்னுடைய உடமைகளையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து விட்டு இறைபராமரிப்பில் நம்பிக்கையுடன் செங்கடலுக்கு அருகிலிருந்த ஒரு வனாந்தரத்திற்குச் சென்று இறக்குமட்டும் அதாவது 90வருடங்கள் ஒரு குகையில் வாழ்ந்தார். அவர் தன்னுடைய எஞ்சிய காலத்தைச் செபத்திலும், தியானத்திலும், தபத்திலும் செலவிட்டார். அவருடைய பக்தியையும், புண்ணியங்களையும் அறியவந்த எகிப்து அந்தோனியார் அவரிடமிருந்து தாழ்மையைக் கற்றுக்கொள்ள சென்றதாக அறிய முடிகின்றது. தனது 113வது வயதில் இறந்தார்.

**எகிப்திய அந்தோனியார்:**

தேபஸ் சின்னப்பரின் சீடரான எகிப்து அந்தோனியார் கிறிஸ்தவத் துறவற வாழ்வின் நிறுவுனராகக் கருதப்படுகின்றார். பதினெட்டு வயதில் பெற்றோரை இழந்து அனாதையானார். துறவறத்தால் கவரப்பட்டு தன் சொத்துக்களையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து 269ஆம் ஆண்டு பாழடைந்த கல்லறைக்குச் சென்று கடும் தபத்திலும், வேதாகம வாசிப்பிலும், கைவேலையிலும் ஈடுபட்டு வாழ்ந்தார். இயேசுவை நெருங்கிய முறையில் பின்பற்றி வாழவேண்டுமென்ற ஒரே நோக்குடன் வனாந்திரம் சென்றது குறிப்பிடத்தக்கது. வனாந்திரத்தில் கொடிய மிருக வடிவில் வந்த சாத்தானால் கொடூரமாகச் சோதிக்கப்பட்ட வனத்து அந்தோனியார் பாணும் தண்ணீரும் மட்டுமே உண்டார்.

305ஆம் ஆண்டு தன் குடிசையைவிட்டு வெளியே வந்த அந்தோனியார் அத் துறவிகளை ஒரு துறவறச் சமூகமாக அமைத்து தினமும் குறிப்பிட்ட நேரங்களில் அவர்களுக்கு ஞானவாசனை, செபம், தியானம், வேதாகமப் படிப்பு போன்ற பொது ஆன்மீக முயற்சிகளை ஒழுங்கு செய்தார். ஏகாந்திகளின் ஆன்மீக வாழ்வை ஒழுங்கமைத்து அவர்கள் பொது வாழ்வில் ஐந்து வருடங்களாக உதவி செய்து 105 வயதில் இறந்தார்.

**துறவற குழு வாழ்வு** (Cenobites)

இன்று நாம் காண்பதுபோன்ற துறவறக் குழு வாழ்வின் ஸ்தாபகர் புனித பக்கோமியுஸ் ஆவார். துறவிகள் தனித்தனியே அல்ல மாறாக ஒரே கூரையின் கீழ் ஒரு குடும்பமாக வாழ்ந்ததோடு ஒரு பொதுச் சட்டத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களது வாழ்க்கை நுணுக்கமான விதிகளுக்குக் கட்டுப்பட்டிருந்தது. ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு மடாதிபர் நியமிக்கப்பட்டார். வழிபாடுகளும், செபமும், உணவும் பொதுவில் இடம்பெற்றன. வேலை முக்கிய இடம் பெற்றது. வெவ்வேறு வேலைகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வெவ்வேறு துறவிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டன.

துறவற மடத்து வளவைச் சுற்றி மதில்கள் கட்டப்பட்டு வெளியுலகிலிருந்து அவர்கள் பிரிந்து வாழ்ந்தனர். புனித பக்கோமியுஸ்தான் முதல் துறவற சபையையும் ஸ்தாபித்தவர். தன் சகோதரியின் வேண்டுகோளுக்கு இணங்க பெண்களுக்கும் ஒரு மடத்தை அமைத்துக் கொடுத்தார்.

**மேலைத்தேய நாடுகளில் துறவறம்**

புனித அத்தனாசியுஸ், புனித பெனடிக், இங்கிலாந்தில் கன்ரபறி எனும் இடத்தை சேர்ந்த அகுஸ்தினார், கசியன் போன்றோர் மேலைத்தேய நாடுகளில் துறவறச்சபை பரவுவதற்கு காரணமாக இருந்தார்கள்.

**புனித பெனடிற்:**

புனித பெனடிற் 480இல் இத்தாலியிலுள்ள நர்சியா பட்டணத்தில் ஒரு உரோமைப் பிரபு குடும்பத்தில் பிறந்தவர். உரோமையில் இருபது வயதுவரை கல்வி பயின்றார். உரோமையின் பாடசாலைகளில் நிலவிய ஒழுக்கமற்ற சீர்குலைந்த போக்குகளைக் கண்ட அவர் தனது படிப்பை இடை நிறுத்திவிட்டு உரோமையிலிருந்து தொலைவிலுள்ள எடின்பிறே என்ற இடத்திற்குச் சென்று அங்கிருந்த ஒரு குகையில் வனவாசம் செய்து "செபமும் வேலையும்" என்பது அவர்களின் விருது வாக்கு. செபத்தையும், வேலையையும் இணைத்து வாழ்வது அவர்களின் வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்தது.

பெனடிற் எழுதிய துறவற வாழ்க்கைக்குரிய சட்ட ஒழுங்குகள் மிகக் கடுமையான செப தப ஒறுத்தல் முயற்சிகளைத் தவிர்த்து, அளவானவையாக, நடுநிலையானவையாக, மனித இயல்புக்கு ஏற்றவையாக, ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடியவையாக, யாவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக அமைந்தன. புனித பெனடிற் மேற்கத்தேய துறவற வாழ்க்கையின் ஸ்தாபகராகவும், துறவிகளின் குழுவாழ்வுக்குரிய ஒழுங்குகளை அளித்தவராகவும் போற்றப்படுகின்றார்.

**புனித அத்தநாசியுஸ்:**

இவர் எகிப்தில் உள்ள அலெக்சாந்திரியாவில் கி.பி 296இல் பிறந்தார். அலெக்சாந்திரிய ஆயரான அலெக்சாந்திரின் கீழ் முதலில் திருத்தொண்டராகவும் பின்பு செயலாளராகவும் கடமையாற்றினார். அவர் ஒரு திருத்தொண்டராக இருந்த காலத்திலே ஆரியப் பேதகத்திற்கு எதிராக முழுமூச்சாகப் போராடித் திருச்சபையின் மரபுப் போதனையை நிலைநாட்டினார். கி.பி 325இல் இடம் பெற்ற நிசேயா பொதுச்சங்கத்தில் தம் ஆயருடன் சென்று பங்கெடுத்தார்.

அங்கு அவர் இன்னும் ஒரு திருத்தொண்டராக இருந்த போதிலும் நிசேயா சங்கத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற இறை வல்லுனராகத் திகழ்ந்தார். அவர் திருச்சபையின் விசுவாசத்தின் தூணாகவும் கிறிஸ்தவ வாழ்வின் மையமாகவும், கிறிஸ்தவ உண்மைகளின் கலங்கரை விளக்காகவும் திகழ்ந்தார். இவ்வாறு கிறிஸ்தவ துறவற வாழ்வு கீழைத்தேயத்திலும், மேலைத்தேயத்திலும் தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டது. ●

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*

# மன இறுக்கம் ஏன் வருகின்றது?



மன இறுக்கம், மனப் புழுக்கம் அல்லது மன உளைச்சல் என்பது (Mental Stress) நம்மில் பலருக்கு வருகின்றது. தூக்கமின்மை முதல் மாரடைப்பு வரை பல நோய்களுக்கு இது காரணம் என்பது மருத்துவ உண்மை. மன உளைச்சல் ஏன் வருகின்றது? சமுதாயத்திடமிருந்து நாம் தேடும் சில தவறான எதிர்பார்ப்புக்கள் தான் இதற்குக் காரணம். இவற்றைப் பட்டியலிட்டே சொல்லலாம்.

- ♦ நான் மிகவும் முக்கியமானவன். மற்றவர்கள் எனக்குக் கீழ்ப்படிந்து என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டியது அவர்கள் எல்லோருடையவும் கடமை.
- ♦ மற்றவர்கள் எல்லாரும் என்னிடம் மிகவும் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்.
- ♦ மற்றவர்களிடம் நான் என்ன எதிர்பார்க்கின்றேன் என்பதை அவர்களாகவே புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.
- ♦ நான் எப்படி நடந்துகொண்டாலும் மற்றவர்கள் என்னிடம் நன்றியுடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.
- ♦ நான் குற்றமே அற்றவன், மற்றவர்கள் என்மேல் குற்றம் கண்டுபிடிக்கவே கூடாது.
- ♦ நான் நினைத்ததெல்லாம் நினைத்தபடியே நடக்க வேண்டும். மற்றவர்கள் அதற்குத் துணை நிற்க வேண்டும்.
- ♦ இது எப்படி நடக்கும்? ஏமாற்றமும் மன உளைச்சலும் நோயும் நம்மைத் தாக்காமல் என்ன செய்யும்?

**“நாம் நினைத்ததே நடக்க வேண்டும். நம் விருப்பம்போல் எல்லோரும் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது தான் மன இறுக்கம் சார்ந்த நோய்களுக்குக் காரணம்.”**

## மன இறுக்கத்தைக் குறைக்க

மற்றவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கும் நம்மைப்போல் எதிர்பார்ப்புக்கள் உண்டு. எல்லோருடைய எதிர்பார்ப்புக்களையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றிவிட முடியாது. மற்றவர்களுக்கும் நம்மைப் போன்ற விருப்பங்கள்தான் இருக்கும் என்ற அடிப்படைப் பார்வையை வளர்த்துக் கொண்டால் மன உளைச்சலை நாம் பெருமளவு தவிர்க்கலாம்.

- ♦ மற்றவர்களின் சொல்லை நான் கேட்டால் அவர்களும் என் சொல்லைக் கேட்பார்கள்.
- ♦ மற்றவர்களை மகிழ்விக்க நான் முயன்றால் அவர்களும் என்னை மகிழ்விக்க முயல்வார்கள்.
- ♦ நான் மற்றவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ள முயன்றால் அவர்கள் என்னிடம் மரியாதையாக நடந்து கொள்வார்கள்.
- ♦ மற்றவர்கள் எதிர்பார்ப்பதை நான் செய்தால், நான் எதிர்பார்ப்பதை அவர்கள் எனக்குச் செய்வார்கள்.
- ♦ மனிதர்கள் எல்லோரும் எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்பதில்லை.
- ♦ மற்றவர்களுக்கு உதவும்போது அவர்கள் எல்லோரும் நன்றி காட்டுவர் என்று எதிர்பார்க்க முடியாது.
- ♦ மற்றவர்கள் என் குறைகளைச் சுட்டிக்காட்டினால் நான் அதைக் கோபப்படாமல் கேட்பேன். தவறு இருந்தால் திருத்திப் பயனடைவேன்.
- ♦ நம் முயற்சிகள் எல்லாம் உடனே நிறைவேற வேண்டிய தில்லை. நிறைய முயற்சிகள் செய்வோம். ஒருசில முயற்சிகள் அவ்வப்போது வெற்றி பெற்றால் போதும்.
- ♦ இந்த மனநிலையை வளர்த்துக்கொண்டால் மன உளைச்சலுக்கு வேலையே இல்லை.

# மைசூர் பாக்



| | |
|---|---|
| கடலை மாவு | - 1 கப் |
| சீனி | - 2 கப், |
| நெய் | - 3கப் |
| சமையல் சோடா | - 1 சிட்டிகை |
| தண்ணீர் | - 1கப் |
| பால் | - 1 மேசை கரண்டி |

**செய்முறை:**

கடலைமாவோடு சிறிது நெய்விட்டு வாசம் வரும்வரை வறுக்கவும். பின் ஆறவிடவும். ஒரு அடுப்பில் நெய்யை சிறிய தீயில் காய்ச்சவும், அடுத்த அடுப்பில் கனமான பாத்திரத்தில் சீனி மூழ்கும் வரை தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். கொதித்து வந்தவுடன் பாலை ஊற்றவும். சீனியில் உள்ள அழுக்கு வரும் பொழுது அதைத் தனியாக கரண்டியால் நீக்கவும், பதமாக வரும்வரை காய்ச்சவும், பதம் வந்தவுடன் சிறிது, சிறிதாக மாவை சேர்க்கவும், கட்டி வராமல் சேர்க்கவும், பின்பு பதமாக வந்ததை இறுகவிடாமல் கிளறி வரவேண்டும், சிறிது நேரத்தில் நெய் பொங்கிவரும், அதுதான் சரியான பதம், சிறிது சமையல் சோடா சேர்த்து கிளறி, ஒரு நெய் தடவிய தட்டில் கொட்டி சிறிது நேரத்தில் வெட்டவும்.

# அப்பிளின் மருத்துவக் குறிப்புக்கள்



### கொலஸ்ட்ரோலைக் குறைக்க.

எளிதில் கரையக் கூடிய பெக்டின் என்னும் நார்ச்சத்து அப்பிளில் உள்ளது. இது உடலிலுள்ள மோசமான கொலஸ்ட்ரோல்களை வெகுவாகக் குறைக்கின்றது. இதனால் பலவிதமான இதய நோய்களும் குறைகின்றன.

### நீரிழிவை விரட்ட.

அதிகம் பழங்கள் சாப்பிட்டால் நீரிழிவு வந்து விடுமோ என்று பயப்படத் தேவையில்லை. ஆனால் தினமும் அப்பிள் சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது.

### நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க

அப்பிளில் உள்ள விற்றமின்-C, நமக்குத் தேவையான நோயெதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்துகின்றது.

### சீரான சுவாசத்திற்கு.

அப்பிளில் உள்ள பைட்டோகெமிக்கல்கள், ஆஸ்த்மா மற்றும் அலர்ஜி பிரச்சனைகளை அடியோடு விரட்டுகின்றன. மூக்கில் ஏற்படும் அடைப்புக்களை நீக்கி, சீரான சுவாசத்திற்கு இது வழி வகுக்கின்றது.

### எடை குறைப்பதற்கு


அப்பிளை அப்படியே சாப்பிடுவதாலும், ஜூஸாக்கி சாப்பிடுவதாலும் உடல் எடை குறைகின்றது. அப்பிளில் உள்ள பாலிபீனால் மற்றும் பெக்டின் ஆகியவை செய்யும் மாயம்தான் இது!

### புற்றுநோயை விரட்டுவதற்கு.

அப்பிள் பழத்தில் உள்ள குவெர்செட்டின் மற்றும் ட்ரைடெர்பினாய்டுகள் ஆகியவை, நுரையீரல் மற்றும் மார்பகப் புற்றுநோய்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன.

### எலும்பு பாதுகாப்பிற்கு.

அப்பிளில் உள்ள சில ஊட்டச்சத்துக்கள் நம் உடலில் உள்ள எலும்புகளைப் பாதுகாப்பதில் சிறந்தது. எலும்புகளின் அடர்த்தியையும் அதிகரிக்கின்றன.



**அப்பா** :- மகன், கோபுரத்து உச்சியில என்னடா செய்யிறாய்?
**மகன்** :- நீங்கதானே அப்பா சொன்னிங்க நம்மட பெயர் உயரத்தில இருக்கணுமென்று. அதுதான் எழுதுறன்.

* * * * *

**ஆசிரியர்** :- ‘தயாபரன் மரத்தில் இருந்து விழுந்தான்’ இது என்ன காலம்?
**மாணவன்** :- அவன் கஸ்ரகாலம்

* * * * *

**நண்பன் 1** :- தரகர்கிட்ட குடும்பப் பெண்ணைப் பாருங்க என்று சொன்னது தப்பாப் போச்சு.
**நண்பன் 2** :- ஏன் என்னாச்சு?
**நண்பன் 1**:- குடும்பம் நடத்திக்கொண்டு இருந்த ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்திட்டார்.

* * * * *

**டாக்டர்** :- உங்க மனைவிக்கு இரும்புச் சத்து டொனிக் கொடுத்தேன். இப்போ எப்படி?
**ஒருவர்** :- துருப்பிடித்துப் போய்விட்டது டாக்டர்.

* * * * *

**சிறுவன்** :- நற்காரியங்களில் ஏன் வாசலுக்கு முன் வாழை மரம் கட்டுகின்றார்கள்?
**அறிவாளி** :- கீழே விழாமல் இருப்பதற்கு.

**ஒருவர்** :- என்னைய்யா இது? ஸ்பெஷல் சாப்பாடு என்று சொன்னாய். அதிலேயும் இந்தக் கல்தான் கிடக்குது?
**மற்றவர்** :- அதுக்காக வைரக்கல்லா போடமுடியும்...?

* * * * *

முட்டைக் கபீர் என்ற ஒருவரும் குப்புசாமி என்ற ஒருவரும் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது குப்புசாமி, “நான் எனது மனைவிக்கு தையல் மெசின் வாங்கிக் கொடுத்தது நல்லதாகி விட்டது” என்றார். அதைக்கேட்ட முட்டைக் கபீர், “ஏன் அப்படிக் கேட்கின்றீர்கள்?” என்றார். “கிழிந்த தோசையையும் அவள் தைத்து விடுகின்றாள்” என்றார் குப்புசாமி!

* * * * *

பக்கத்து வீட்டுக்காரன் காய்ச்சல்ல இருக்கான்னு பாக்கப் போனேன்......
என்னையா.... உடம்பு இப்படி கொதிக்குது???? ன்னு கேட்டா
“நெருப்புடா......”
“கபாலிடா....” ங்குறான்.
“சாவுடா....”ன்னு
சொல்லிட்டு வந்துட்டன்.

# அழகுக் குறிப்புக்கள்



♦ எண்ணைத் தன்மை கொண்ட சருமத்தை உடையவர்கள் வெள்ளரிக்காய் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தக்காளிச்சாறு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து சிறிதளவு தேனும் சேர்த்து உடலில் பூசலாம்.

♦ கோடையில் ஏற்படும் உடல் சூட்டைத் தவிர்க்கவும், வெயிலில் சருமம் கறுக்காமல் இருக்கவும், பொலிவைக் கொடுக்கவும் 1தேக்கரண்டி முட்டை கோஸ் சாறு, 1தேக்கரண்டி ஈஸ்ட் மற்றும் 1 தேக்கரண்டி தேன் ஆகியவற்றைக் கலந்து முகம், காது பகுதிகளில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவினால் தோல் வறட்சி நீங்கும்.

♦ பேக்கிங் சோடாவை சிறிது எடுத்து, அத்துடன் சிறிது எலுமிச்சை சாறு மற்றும் தண்ணீர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 5-10 நிமிடம் கழித்துக் கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு 2 முறை செய்து வந்தால், முகத்தில் இருக்கும் பிம்பிள் நீங்குவதோடு, எண்ணெய் பசையும் கட்டுப்படுத்தப்படும்.

♦ தினமும் பப்பாளியை சிறிது அரைத்து, முகத்தில் தடவி 10-15 நிமிடம் ஊற வைத்து கழுவிவர, முகத்தில் எண்ணெய் வழிவது தடுக்கப்பட்டு, முகம் பிரகாசமாக இருக்கும்.

♦ 3ரீ ஸ்பூன் கற்றாழை ஜெல்லுடன், 1 ரீ ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ச்சியான நீரில் கழுவ வேண்டும்.

♦ 4ரீ ஸ்பூன் தக்காளி சாற்றினை எடுத்துக்கொண்டு, அத்துடன் 1 ரீ ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊறவைத்து, பின் நீரில் கழுவ வேண்டும். இதனை தினமும் செய்து வந்தால் மிகவும் நல்லது. விரைவில் சருமத்தின் எண்ணெய் பசையை கட்டுப்படுத்தி சருமத்தை பொலிவாக்கும்.

♦ ஆரஞ்சு பழத்தோலை நன்கு உலர வைத்து, பொடி செய்து, அத்துடன் பால் சேர்த்து பேஸ்ட் செய்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி உலர்ந்ததும் கழுவ, முகத்தில் உள்ள கருமை படிப்படியாக அகலும்.

# மன்னா விளம்பரப் பலகை

“ஒருமுறை நீ ஏதாவது ஒரு இலக்கை இதய பூர்வமாக தீர்மானித்து விட்டால், இந்தப் பிரபஞ்சமே திட்டமிட்டு அந்த இலக்கை அடைய துணை புரியும்”

“அழகிய குறிஞ்சி மலர் ஆண்டுக்கொருமுறை பூப்பதில்லை. அருமையான சந்தர்ப்பம் அடிக்கடி கிடைப்பதில்லை ”

......................

“மண் கோட்டை கட்டினால் மண்ணாவது மிஞ்சும். ஆனால் மனக் கோட்டை கட்டினால் நாம்தான் மண்ணுக்கே போகவேண்டும்.”

......................

“வாழ்க்கை என்பது இயற்கை அழிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்”

“தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகின்றது”

“மனதில் வெறுப்பு ஏற்பட ஆரம்பித்துவிட்டால் சிறிய சம்பவங்களும் மிகவும் மன்னிக்க முடியாத பெரும் தவறுகளாகத் தோன்றிவிடும்”

......................

“கொடுக்கக் கடினமானவற்றைக் கொடுத்தல், செய்யக் கடினமானவற்றை செய்தல், பொறுக்க கடினமானவற்றைப் பொறுத்தல் இவை மூன்றும் உள்ளதே நட்பாகும்.”

......................

“நீங்கள் ஆசைப்பட்டு செய்யும் காரியத்திற்காக அதிக நேரத்தை ஒதுக்குங்கள். அது உங்களை மேலே உயர்த்தும்”

“பிரச்சனை வரும்போது அதைத் தீர்க்கும் வழியை நாடு. இல்லையெனில் அப்பிரச்சனையே உன்னைப் போர்வையாகப் போர்த்திவிடும்.”

# கிறிஸ்துவின் உயிர்ப்பும் கிறிஸ்தவ மறுவாழ்வும்

திருச்சபையின் ஆரம்பகாலப் போதனையில் உயிர்ப்பு மிக முக்கியத்துவம் பெற்றதாய் அமைந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” (1கொரி 15:14) என்பதிலிருந்து உயிர்ப்பின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம். எவ்வாறு இறந்த இயேசு உயிருடன் எழுப்பப்பட்டு என்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றாரோ அதுபோல நீதிமான்களும் தங்களின் ஊனுடல் இறப்பிற்குப்பின் உயிர்த்த கிறிஸ்துவுடன் எக்காலமும் வாழ்ந்திடுவர் என்றும் கடைசி நாளில் இயேசு அவர்களை உயிர்த்தெழச் செய்வார் என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. (யோவா 6:39-40). இயேசுவை இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழச் செய்த ஆவி நம்முள் வாழ்ந்தால் அதே ஆவி நம்முடைய உடல்களுக்குள்ளும் உயிரை வழங்கி நம்மை உயிர்த்தெழச் செய்வார் என்கின்ற நம்பிக்கையை நாம் பெற்றுள்ளோம். (1கொரி 6:14) (1கொரி 15:12-13) கிறிஸ்துவே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார், ஆகவே அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பது உறுதி என்று பவுல் ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார். (1கொரி 15:20)



## இயேசுவின் உயிர்ப்பின் இரகசியம்

இயேசு இறந்துபோன மூன்று பேருக்கு உயிர் வழங்கினார். 1. யாயிரின் மகள் (மத் 9:18-26), 2. நயீன் ஊர்க் கைம்பெண்ணின் ஒரே மகன் (லூக் 7:11-15), 3. அவரது நண்பர் இலாசர் இறந்து நான்காம் நாளில் (யோவா 11:1-44) இந்த நிகழ்வுகளுக்கும், இயேசுவின் உயிர்ப்பிற்குமிடையே வேறுபாடு இருக்கின்றது. யாயிரின் மகள், நயீன் ஊர் இளைஞன், இலாசர் ஆகியோர் பெற்றுக்கொண்டது நிரந்தர வாழ்வு அல்லது சாகா நிலை அல்ல. மாறாக இயேசு சாதித்தது சாகா நிலை. மரணத்தை அறியாத ஆன்மா மகிமைப்படுத்தப்பட்ட உடலோடு மீண்டும் எழுப்பப்படப்போவதை இயேசுவின் உயிர்ப்பு அறிவிக்கின்றது. இயேசுவின் உயிர்ப்பானது உடல் உயிர்ப்பு (Bodily resurrection) என்றழைக்கப்படுகின்றது. ஆனால் இயேசு உயிர் கொடுத்த மூன்று பேரும் அனுபவித்தது ஊனுடல் உயிர்ப்பு. (Physical resurrection) ஊனுடல் உயிர்ப்பு நிரந்தர வாழ்வல்ல. உயிர்ப்பை அனுபவித்தபின் மீண்டும் ஒருமுறை ஊனுடல் சாவை அனுபவிக்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால் இயேசு பெற்ற உடலின் உயிர்ப்பு நிரந்தர வாழ்வை உணர்த்துகின்றது. மீண்டும் ஒருமுறை ஊனுடல் சாவு கிடையாது. இயேசு உயிர்த்தெழுந்தபின் அவரைச் சார்ந்தவர்களால் அவரை முழுமையாக அடையாளம் காணமுடியவில்லை. மகதலா மரியா அவரைத் தோட்டக்காரரர் என்றும், (யோவா 20:14-15). எம்மாவுக்குப் பயணமான சீடர்கள் அவரை யாரோ ஒரு வழிப்போக்கர் என்றும் (லூக் 24:13-30) நினைத்தனர். இயேசு மாற்றுரு பெற்றார். ஆகவே அவரை அடையாளம் காண்பதில் தடுமாற்றம் ஏற்பட்டது.

## நம் உடலின் உயிர்ப்பு

இயேசுவைப்போல் ஒவ்வொரு மனிதரும் உடல் உயிர்ப்பைப் பெறுவர் (உரோ 6:1-11). உயிருடன் எழுப்பப்படுகின்றவர் மாற்றுரு பெறுகின்றார். (1கொரி 15:51-52). உயிர்ப்பின் மூலம் மானிட இனம் முழு மாற்றத்தை உணரும். சாவு அச்சம் கொடுக்கும் நிகழ்வு அல்ல, மாறாக ஒரு பெரிய மாற்றத்தின் வாயில். ஒருவர் அடக்கம் செய்யப்படுவது நிலத்தில் விதை விதைப்பது போன்றது. (1கொரி 3:35-38) விதை முளைத்து செடியாக வளரும்போது அதன் தொடர்ச்சியையும் அது அடையும் மாற்றத்தையும் பார்க்கின்றோம். அதைப் போலவே உயிருடன் இருப்பவரின் உடலும், அவர் இறந்தபின் உயிரோடு எழுப்பப்படும்போது இருக்கும் உடலும் பார்க்கப்படவேண்டும். உயிருடன் எழுப்பப்பட்ட உடல் மண்ணக உடலின் தொடர்ச்சியாகவும், முழுவதும் மாற்றுரு பெற்ற உடலாகவும் அறியப்படுகின்றது. மண்ணிலே வாழும் ஒருவர் இறந்த அவரது உடல் அழிந்த பிறகு கடவுள் அவருக்குப் புதிய உடலைத் தருகின்றார். இக்கருத்து 2கொரி 5:1-4 இல் வலியுறுத்தப்படுகின்றது. நம் உடல் மனித இயல்பு கொண்டது. உயிர்த்தெழுந்தபின் அவ்வுடல் ஆவிக்குரிய உடலாக மாறுகின்றது. (1கொரி 15:44) அழிவுக்குரிய உடல் அழியாமையை அடைகின்றது. உயிர்ப்பில் புதுவாழ்வு வருகின்றது. ஆதாமின் உருவிலும், சாயலிலும் இருக்கும் மனிதன் உடல் உயிர்ப்பின் மூலம் கிறிஸ்துவின் சாயலைப் பெறுகின்றான். (காண்க. 1கொரி 15:45-49) உடல் உயிர்ப்பு என்பது நமது எதிர்கால நம்பிக்கை. இயேசுவே முதலில் எழுப்பப்பட்டார். அவர் கடைசி நாளில் உலகிற்குத் தீர்ப்பிட வரும்போது யாவரும் உயிர்த்தெழுவர். அதாவது உலகம் தொடங்கியதிலிருந்து இந்நாள்வரை வாழ்ந்து இறந்து போனவர்களும், உலகில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் ஒரே நாளில் உயிர்ப்பை அனுபவிப்பர். அப்போது இறுதித் தீர்ப்பு வழங்கப்படும்.

## முடிவற்ற வாழ்வு

இவ்வுலக ஊனுடல் அழிகின்றது ஆனால் ஆன்மா அழியாமல் பாதுகாக்கப்பட்டு இறுதி நாளில் யாவரும் உயிர்த்தெழும்போது எல்லா ஆன்மாக்களும் உடலோடு உயிர்த்தெழுகின்றன என்பது நம் திண்ணமான நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நமக்கு வழங்குவது இயேசுவின் உயிர்ப்பு. அவரவரின் செயலுக்கேற்ப மோட்சம், நரகம், உத்தரிக்கின்ற நிலை என்று மூன்று நிலைகளில் ஆன்மாவின் வாழ்வு தொடர்கின்றது.

இறுதித் தீர்ப்பின்போது அனைவரும் உயிர்த்தெழும்போது இரண்டு நிலைகள் இருப்பதாகவே புதிய ஏற்பாடு நமக்கு உணர்த்துகின்றது. (மத் 25:34, 41, 46). மோட்சம் என்றால் எப்பொழுதும் கடவுளின் உடனிருப்பை உணர்ந்து கொண்டிருக்கும் நிலை என்று பொருள். மோட்ச வாழ்வுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்கள் கிறிஸ்துவில் வாழ்கின்றனர். (பிலி 1:23, காண்க. யோவா 14:23, 1தெ 4:17) நரகம் என்றால் கடவுளின் உடனிருப்பை எக்காலத்திற்கும் உணர முடியாத நிலையென்றும் எப்பொழுதும் ஏங்கிக்கொண்டிருக்கும் நிலையென்றும் அறிந்துகொள்கின்றோம். அதாவது கிறிஸ்துவிடம் இருந்து முற்றிலும் விலகி நிற்கும் நிலை (மத் 25:41). கடவுளின் நட்பிலும், அருளிலும் இறந்து போகின்றவர்களில் சிலர் முழுமையாகத் தூய்மையாக்கப்படாத நிலையில் இன்னும் சில காலம் தங்களின் மீட்புக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. அவர்கள் உத்தரிக்கின்ற நிலையில் இருந்து தங்களின் பாவங்களுக்காக வேதனையுற வேண்டும் (காண்க. 1கொரி 3:15, 1பேது 1:7) பின் அவர்கள் மோட்சம் சேர்வர். அவர்களுக்காக மண்ணில் வாழ்வோர் கடவுளிடம் செபிக்க வேண்டியுள்ளது. (2மக் 12:38-45) “புதிய விண்ணுலகும், புதிய மண்ணுலகும் வரும் என நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.” என்று புதிய ஏற்பாடு சொல்கின்றது. (2பேது 3:13 காண்க. திவெ 21:1). கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்க கடவுள் திட்டம் தீட்டியுள்ளார் என்று பவுல் குறிப்பிடுகின்றார். (எபே 1:10) புதிய உலகம் தோன்றும்போது கடவுள் மக்கள் மத்தியில் குடியிருப்பார். என்றும் (திவெ 21:3), அவர்களின் கண்ணீரைத் துடைத்து சாவை அகற்றி விடுவார் என்றும் (திவெ 21:4) அறிகின்றோம். கடவுள் யாவற்றையும் நிறைவாக்கி நமக்கு முடிவற்ற வாழ்வு தருவார் என்கின்ற நம்பிக்கையில் திருச்சபையின் மக்களாகிய நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ●

## சிவந்த ஈஸ்ரரும்....

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

இந்த பாஸ்கா மறைபொருளின் அடிப்படையிலேயே குறிப்பாக புனித மாற்கு தனது நற்செய்தியை எழுதியுள்ளார். தொடக்க கால கிறிஸ்தவர்கள் உரோமைய நீரோ அரசனினால் துன்புறுத்தப்பட்டபோது துன்பத்தினூடாகவே வாழ்வு (உயிர்ப்பு) உண்டென்பதை உணர்த்துவதாக தனது நற்செய்தியில் கோடிட்டுக் காட்டியிருப்பது வரலாற்றில் பொய்த்துவிடவில்லை.

பாடுகளின் பாதையிலே பரமன் இயேசு தன்னைப் பார்த்து கண்ணீர் விட்ட எருசலேம் நகரப் பெண்களுக்கு, ‘எனக்காக அழவேண்டாம், மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்…’ (லூக் 23:28) என்று கூறினார். இன்றும் அதே வார்த்தைகளை இயேசுவும் எமது உயிர்த்த ஞாயிறன்று தமது விசுவாசத்தை வெளிப்படுத்திய வேளை உயிர் நீத்த ஈஸ்ரர் மறைசாட்சிகளான எமது உறவுகளும் கூறுகின்றனர். இன்று எமக்கும் எமது வருங்கால சந்ததிக்கும் வரப்போகின்ற இன்னல்கள் துன்ப துயரங்களிலிருந்து எம்மைப் பாதுகாக்க இறைவனை நோக்கி அழவேண்டியவர்களாக இருக்கின்றோம். நாசகார சதிகாரரிடமிருந்து எம்மையும் எமது சந்ததியினரையும் காத்துக்கொள்ள வழிதேடவேண்டிய முக்கிய பொறுப்பில் நாம் ஒவ்வொருவரும் உள்ளோம்.

ஆகவே நவநாகரீகம் வளர்ந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில், மனிதம் மரத்துப்போக இறைவனின் இரக்கத்தை புறம் தள்ளிய மனிதர்கள் நம்மில் எத்தனைபேர்! அன்பு, மன்னிப்பு, பொறுமை, இரக்கம், பகிர்வு, நீதி, நேர்மை, வாய்மை, சமத்துவம் என்ற விண்ணக விழுமியங்களை இழந்து அடிப்படை மனிதப் பண்புகளையும் மறந்து பொய், களவு, சூது, காமவெறி, போட்டி, பொறாமை, பிறர் நற்பெயரைக் கெடுத்தல், வீண் சந்தேகம், பிரமாணிக்கமின்மை, குடி, போதைபொருள் பாவனை, கொலை, கொள்ளை, சிறுவர் பெண்கள் துஷ்பிரயோகம், விபச்சாரம், சண்டை, சச்சரவுகள், பிணக்குகள், இலஞ்ச ஊழல்கள் என சமூக அநீதிகள் மலிந்துபோன சமூகமாக மாறிவிட்ட இந்த மண்ணில் இறைவனின் இரக்கம் இன்னும் தீர்ந்து போகவில்லை. அதை நிறைவாகப் பெற்றுக்கொள்ள அனுபவிக்க இறைவன் உயிருடன் இருக்கும் எமக்குத் தரும் கால அவகாசமும், சந்தர்ப்பமுமே இது.

ஆகவே, மனந்திரும்பிய வாழ்வை வாழ நாம் அனைவரும் அழைக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்து வாழ்வோம். எமது கத்தோலிக்கரின் இரத்தத்தால் சிவந்து போன ஈஸ்ரரின் புதிய மறைசாட்சிகளின் ஆன்ம சாந்திக்காகப் பிராத்திக்கும் அதே வேளை இயேசுவிற்குள் நித்திய வாழ்வை வாழ தகுதியுடையவர்களாக வாழ மாற முயற்சி செய்வோம். எமது விசுவாச வாழ்விற்கு பிரமாணிக்கமாக வாழும் கிறிஸ்தவர்களாக வாழ்வோம். உயிர்த்த இயேசுக் கிறிஸ்துவுக்குள் மன நிம்மதியடைவோம். ●

## செபமாலை நற்செய்தியின்...

07ஆம் பக்கத் தொடர்ச்சி.

### மீட்புச் செயலின் சுருக்கம் செபமாலை:-

செபமாலை ஒரு வெகுசன பக்தி முயற்சி. நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து மற்றும் மரியாளின் வாழ்வில் நடந்தேறிய மீட்புச் செயலின் இரகசியங்களைத் தியானித்தபடி கர்த்தர் கற்பித்த செபத்தையும், மங்கள வார்த்தை செபத்தையும், தமத்திருத்துவப் புகழையும் மீண்டும், மீண்டும் செபிக்கின்ற செபங்களின் தொகுப்புத்தான் செபமாலை பக்தி முயற்சியாகும். கடவுள் மனிதர்களை மீட்க அவர் எடுத்த முயற்சி. இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, இந்த மீட்புத் திட்டத்தில் அன்னையின் பங்களிப்பு என்று மனிதர்க்காய் இறைவன் செய்த நாம் மீட்கப் பெற்ற இரகசியத்தை, மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து ஆண்டவரைப் போற்றிப் புகழுங்கள் என்று உணரவைக்கும் உன்னத பக்தி முயற்சிதான் செபமாலைப் பக்தி முயற்சி. மீட்புச் செயலின் சுருக்கம்தான் செபமாலை என்றால் அது பொருத்தமானதாக இருக்கும். “எனது மறைபோதகத்தின் வழியாக மனந்திரும்பிய ஆன்மாக்களை விட செபமாலை மூலமே ஏராளமானவர்களை மனந்திரும்பியுள்ளேன்” என்கின்றார் புனித பெர்னார்டு. ●

## சாம்பலில்..

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

மத்தியகாலத் திருஅவையில் புனித பிரான்சிஸ் அசிசி வால்டெஸ் John Wyclif, Jan Hus போன்றோர் 1517ஆம் ஆண்டுக்கு முந்தைய நூற்றாண்டுகளில் திருஅவையின் வாழ்வில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகள் எடுத்தனர். மிகவும் மனிதநல வல்லுனராகிய ரோட்டர்டாமின் எராஸ்முஸ் அவர்கள் திருஅவையில் நிலவிய மூடநம்பிக்கைகளைத் தாக்கினார். கத்தோலிக்கத் திருஅவையில் சீர்திருத்தம் கொண்டுவர முயற்சித்தார். ஆயினும் 1517ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி அனைத்துப் புனிதர்கள் விழாவுக்கு முந்திய நாளில் அகுஸ்தீன் துறவு சபையின் இறையியல் பேராசிரியர் மார்ட்டின் லூத்தர் அவர்கள் ஜேர்மனியின் விட்டன்பர்க் அரண்மனை ஆலயக் கதவில் 95 சீர்திருத்தக் கருத்துக்களை ஒட்டும் வரை திருஅவையின் வாழ்வைச் சீர்படுத்த எடுத்த நடவடிக்கைகள் வெற்றிபெறவில்லை. ●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## இலங்கை.....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

மூன்று தேவாலயங்கள் மற்றும் அப்பாவிக் குடிமக்களை இலக்காகக் கொண்டு சில இடங்களில் நடாத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதலில் 200இற்கும் அதிகமானவர்கள் பலியாகியும், பல நூற்றுக் கணக்கானோர் கடும் காயங்களுக்கும் உள்ளாகியுமுள்ளனர். ஈஸ்ரர் பண்டிகையான புனித நாள் ஒன்றில் இறைமக்கள் வழிபாடு செய்து கொண்டிருந்தபோது தேவாலயங்களின் மீது தாக்குதல் நடந்தமை என்பது உண்மையில் மிகவும் கொடூரமான செயலாகும்.

இவ் இக்கட்டான காலத்தில் இறைமக்கள் அமைதியாகவும், விவேகத்தோடும், அக்கறையோடும் செயற்படுமாறு நாம் வேண்டி நிற்கின்றோம். அரசாங்கம் உடனடியாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டு எம் நாட்டில் வாழும் எல்லா இன மக்களினதும் பாதுகாப்பான வாழ்வை உறுதிசெய்ய வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இவ் அனர்த்தத்தில் ஆழ்துயர் கொண்டுள்ள அனைத்து குடும்பங்களுடனும் ஆன்மீக ரீதியாக உடனிருக்கின்றோம். மற்றும் உயிர் இழந்த ஆன்மாக்கள் இறைவனில் இளைப்பாற இறைவனை இறைஞ்சுகின்றோம். காயமுற்ற அனைவரும் விரைவில் குணமடைய வேண்டுமென அக்கறையுடன் செபித்து வருகின்றோம். அப்பாவி மக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்து விடுபவர்களின் கடின இதயங்களை மாற்றுமாறு இறைவனிடம் வேண்ட வேண்டிய கடப்பாடும் நமக்கு உண்டு. பிறர் துன்பத்தை ஏற்று முழுமனித மீட்புக்காகத் தம்மை அர்ப்பணித்த இயேசுக் கிறிஸ்துவின் போதனைகள் மற்றும் வாழ்வின் முன்மாதிரிகளைப் பின் பற்றுவதன் மூலம் நாம் இரக்கமுள்ள இதயத்தைப் பெறவும், செபத்தில் நீதியுடனான மனித நேயத்தைத் தேடவும் வரம்வேண்டுவோம். ●

| | |
|---|---|
| மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS. தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை | மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ், பிரதம செயலாளர் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை |

**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம் *- மன்னா நிர்வாகம் -*

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.202

## எஸ்தர் (அதிகாரம் 1 முதல் 10 முடிய)

உங்கள் விடைகளை யூலை மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | | ✡ | | | 04 | |
| | | | | 05 | | | | | | |
| | ✡ | | | | | 06 | | | | |
| | | | | | 07 | ✡ | | 08 | | 09 |
| | 10 | | | | | | 11 | | | |
| | | | | | 12 | | | | | |
| 13 | | 14 | | | | | | | 15 | |
| | 16 | | | ✡ | | | | | | |
| | ✡ | | 17 | | | 18 | | | ✡ | 19 |
| | 20 | | | | 21 | | | | 22 | ✡ |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(✡ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. எனவே அவர் காலங்கள் பற்றிய ...................... டைய ஞானிகளிடம் கலந்துரையாடினார்.
3. இவ்வார்த்தை அரசர் மற்றும் தலைவர்களின்................ நலமெனத் தோன்றியது.
5. மொர்தக்காய் அவ்வாறே சென்று எஸ்தரின் வாக்கின்படியே அனைத்தையும் ..................... (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
10. உன் வேண்டுகோள் ............. அது உனக்குக் கொடுக்கப்படும்.
13. இவ்வார்த்தை ஆமானுக்கு நலமெனப்பட்டதால் அவன் ........................ ஒன்று செய்வித்தான்.
16. நீ ...................... வற்றில் எதையும் விட்டுவிடாதே.
17. மன்னருக்கு உண்டாகும் இழப்பிற்கு எதிரியால் ................ செய்ய முடியாது.
20. இதுவே அரசர் தாம் மரியாதை செய்ய ........................ மனிதருக்குச் செய்யும் சிறப்பாகும். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. அரச வாயிலுள் சாக்கு உடை அணிந்து எவரும் ..................... என்பதால் அவர் வாயில்வரை சென்றார்.
2. ......................... தோற்றமும், வடிவழகும் கொண்ட இளம்பெண்.
4. அனைத்து யூதருள்ளும் அரச மாளிகையில் உள்ள நீ மட்டும் காப்பாற்றப் .................... என உனக்குள் கற்பனை செய்ய வேண்டாம். (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
8. அவர்தம் ...................... மற்றெல்லா மக்களின் நியமங்களிலும் மாறுபட்டவை.
11. மன்னர் அணிகின்ற ஆடைகளும், அமர்கின்ற .................... தலையில் சூடும் மகுடமும் கொண்டுவரப்பட வேண்டும்.
13. அன்றிரவு மன்னருக்குத் ................... வரவில்லை.
14. எனவே அவர்தம் ஆட்சியின் ....................கள் அடங்கிய ஏட்டைத் தம்மிடம் கொண்டுவந்து வாசிக்குமாறு பணித்தார்.
15. சூசான் அரண்மனையில் ஐநூறு .................... யூதர்கள் கொன்றொழித்தனர்.

### வலமிருந்து இடம்

2. அவ்வாணை பாரசீக, மேதியச் சட்டங்களில் நிலையாய் இருக்கும்படி ....................ல் வேண்டும்.
5. மன்னர் தம் கைகளிலிருந்து பொற் .................... எஸ்தரிடம் நீட்ட, எஸ்தர் அருகில் சென்று செங்கோலின் நுனியைத் தொட்டார்.
6. ஆனால் நீயும் உன் தந்தையின் ........................ அழிவீர்.
7. எஸ்தரின் அழைப்பிற்கிணங்கி மன்னர் ஆமானை விரைந்து வருமாறு .............................
9. எஸ்தரை முன்னிட்டுக் ......................... மன்னர்களுக்கும் தம் அலுவலர் அனைவருக்கும் பெரிய விருந்து வைத்தார்.
11. சட்டத்திற்குப் ...................... எனினும் நான் மன்னரிடம் செல்வேன்.
12. எனக்காக ................... மூன்றுநாள் இரவு பகல் உண்ணாமலும், குடியாமலும் இருப்பீராக.
22. யூதருக்கு ...................க் கைநீட்டிய ஆமான் தூக்கிலிடப்பட்டான்.

### கீழிருந்து மேல்

7. இது மன்னருக்கு நலமெனப் ...................... அவரும் அவ்வாறே செய்தார். (3வது எழுத்து இறுதியாக உள்ளது)
8. இவ்வேலையைச் செய்வோருக்குக் கொடுக்குமாறு நானூறு 'டன்' வெள்ளியை .................. மன்னரின் கருவூலத்தில் சேர்ப்பேன்.
11. உடனே அக்காரியம் .................... செய்யப்பட உண்மை வெளிப்பட்டது.
15. அவர் முன்னிலையில் தம் மக்களுக்காகப் பரிந்து .................. வேண்டினார்.
18. இதற்காக மொர்த்க்காய்க்கு என்ன மரியாதையும் ............... செய்யப்பட்டன. (2வது எழுத்து இறுதி எழுத்துக்கு மேலே உள்ளது)
19. மன்னரும், ஆமானும் அரசி எஸ்தர் வைத்த .............ச் சென்றனர்.
21. நீ வேண்டுவது என் அரசின் .................. ஆனாலும் அது உனக்குக் கொடுக்கப்படும்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 200 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
M. நிமல்றாஜ்,
கர்த்தர்கோவில் 1ம் வீதி,
கீரி, மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
வ. றொணி,
சூரியகட்டைக்காடு,
நானாட்டான்.

**மூன்றாம் பரிசு:**
P. அனற் செறோண்,
பாப்பாமோட்டை,
மாந்தை.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 84 பேர். சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 200ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
2. ஞா. வினோ சர்மி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
3. எ. ஜெனோலின், புத்திரர்கண்டான், முருங்கன்.
4. ச. அபிசேக், எழுத்தூர், மன்னார்.
5. க. யுட்மன் யுரோபியோ, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
6. அ. குணசிங்கம் சில்வா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
7. கு. பரமேஸ்வரி, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
8. R. தர்சினி சில்வா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
9. R. ஆன் சுஜோதினி, மடுறோட்.
10. டினோறாஜ் டினேஸ், பிரான்ஸ்.
11. டொறினா தினேஸ், பிரான்ஸ்.
12. நிறோஜன் செல்வநாதன், பிறான்ஸ்.
13. E. சஜீவன், பிரான்ஸ்.
14. S. டென்சியா பெரேரா, 8ஆம் வட்டாரம், பேசாலை.
15. ச. மரிய கொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை.
16. யே. மலர்விழி, தேவன்பிட்டி.
17. ஸ். ஜெனற் தீபிக்கா குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
18. ஜீன் போன் லக்மினி குரூஸ், வங்காலை.
19. P. நிலாளன், இத்திக்கண்டல், அடம்பன்.
20. செ. தனுஜினி, கன்னாட்டி, அடம்பன்.
21. பி. தபிசன், ஆட்காட்டிவெளி.
22. ர. ஆன் பேபிசா, சாளம்பன், ஆட்காட்டிவெளி.
23. வெலின்ரன் லொலிற்றா பருனாந்து, பேசாலை.
24. D. எமி ஷாணிக்கா, யோசவ்வாஸ்நகர், தோட்டவெளி.
25. A. கெலன் கிறிஸ்ரா, யோசவ்வாஸ்நகர், தோட்டவெளி.
26. செல்வி. வயலட் யோண், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
27. பி. பிறின்சி லியோன், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
28. V. டிவைனா குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
29. S. வரதன் குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு.
30. J. சுவேதா, சவேரியார்புரம், சிலாவத்துறை.
31. J. பிரவின், சவேரியார்புரம், சிலாவத்துறை.
32. N. றியன்சி, சவேரியார்புரம், சிலாவத்துறை.
33. அ. றாஜிலி, பெற்றா, மன்னார்.
34. பா. நிசாந்தினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
35. நி. நியோவின் பறுனாந்து, முத்தரிப்புத்துறை.
36. அ. கிரியோன் சோசை, சுகந்தபுரி, வங்காலை.
37. அ. விபுஷிகன், சுகந்தபுரி, வங்காலை.
38. திருமதி. சுகந்தி, நெளுக்குளம், பம்பைமடு, வவுனியா.
39. R. கெயில் குலாஸ், கெபிவீதி, 8ம் வட்டாரம், பேசாலை.
40. யோசப் பிரசாத் றோஜ், பள்ளிமுனை, மன்னார்.
41. P. அனற்லீன், பாப்பாமோட்டை, மாந்தை
42. E. நிறொக்ஷன், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
43. P. அனற் ஜீவிதா, பாப்பாமோட்டை, மாந்தை
44. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
45. S. பிரியங்கா லெம்பேட், ஆனாள்நகர், வங்காலை.
46. பி. லக்சனா, அச்சங்குளம், நானாட்டான்.
47. T. அபிநயா, நறுவிலிக்குளம், மாதிரிகிராமம்.
48. D. அன்ரனி ஐய்டன் குரூஸ், தலைமன்னார் கிராமம்.
49. S. யுனிஸ்ரா லெம்பேட், ஆனாள்நகர், வங்காலை.
50. அ. றொஷாணி, எழுவைதீவு, யாழ்ப்பாணம்.

## விவிலியம்....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

### உயிருள்ள இறைவார்த்தை

"விவிலியமும் வாழ்வும்" என்ற இக்கருத்தரங்கின் கருப்பொருளை மையப்படுத்தி உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைவார்த்தை உயிருள்ளது, வாழ்வை வழங்குவது, நம்மையும் கடந்து மற்றவரிடம் செல்வதற்கு அழைப்பு விடுப்பது, இறவாதது, வயதுகூட இல்லாதது மற்றும் என்றென்றும் நிலைத்திருப்பது என்று கூறினார். இறைவார்த்தை மறைநூல் வழியாக பணியாற்ற விரும்பும் வாழ்வை வழங்கும் தூய ஆவியார் என்றும் அது கடவுளின் உயிர்மூச்சை உலகுக்குள் கொணர்கின்றது என்றும் உரைத்த திருத்தந்தை, அது ஆண்டவரின் தூண்டுதலோடு இதயத்தில் புகுகின்றது என்றும் கூறினார்.

### இறைவார்த்தை விதைக்கப்பட வேண்டியது

விவிலியம் படிப்பதற்காக அழகாகச் சேகரிக்கப்பட்ட புனித நூல்களில் ஒன்று அல்ல மாறாக அது விதைக்கப்பட வேண்டிய வாழ்வின் இறைவார்த்தை எனவும், திருஅவையின் வாழ்வில் வேறு எதனாலும் ஈடுசெய்யமுடியாத சக்தி எனவும், இதனாலேயே மறையுரைகள் அடிப்படையாக அமைகின்றன எனவும் திருத்தந்தை கூறினார். மறையுரைகள் ஞானமுள்ள மனிதக் கருத்துக்களின் தொகுப்பு அல்ல மாறாக இறைவார்த்தையை தூய ஆவியாரைப் பகிர்ந்துகொள்வதாகும் என்றும் கூறியத் திருத்தந்தை இறைவார்த்தைக்குச் செவிமடுப்பதன் வழியாக வாழ்கின்ற திருஅவை தனது பாதுகாப்போடு ஒருபோதும் திருப்தியடைவதில்லை தூய ஆவியாருக்குப் பணிந்து நடக்கின்றது என்றும் உரைத்தார்.

இறைவார்த்தை திருஅவையின் ஒவ்வொரு நடவடிக்கையின் மையமாக மாறினால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்றுரைத்த திருத்தந்தை இறைவார்த்தை உயிருள்ளது அது நம்மை மௌனமாக இருக்கவிடாது என்றும் தெரிவித்தார். "இறைவார்த்தையும், வாழ்வும், திருவிவிலியமும் திருஅவையின் மேய்ப்புப்பணிக்கும், மறைப்பணிக்கும் தூண்டுதல் அனுபவமும் சவாலும்" என்ற தலைப்பில் உரோம் நகரில் நடைபெற்ற இந்த பன்னாட்டு கருத்தரங்கு கடந்த வெள்ளியன்று முடிவடைந்தது.●

## அனைவரையும்...

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

அனைவரையும் உள்ளடக்கியதாக திருஅவை விளங்கவேண்டும் என்ற உண்மையை வலியுறுத்திக் கூற செவித்திறன் குறையுடையோர் சக்தி மிகுந்த அடையாளமாக விளங்குகின்றனர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையின் இறுதியில் குறிப்பிட்டார். மேலும் உயிர்ப்பு ஞாயிறைத் தொடர்ந்துவரும் எண் கிழமைகளில் உயிர்ப்பின் பல்வேறு பரிமாணங்களை வலியுறுத்தும் டுவிட்டர் செய்திகளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ளார். "கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் அவருடன் படைப்பாற்றல் மிக்க நமது நம்பிக்கை இக்காலத்தின் பிரச்சனைகளைச் சந்திக்க எழுகின்றது. ஏனெனில் நாம் தனியே இல்லை என்பதை உணர்கின்றோம்" என்ற சொற்கள் ஏப்ரல் 25ஆம் திகதி திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் பதிவாகியிருந்தன.●

## உரிய நடவடிக்கை....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஏனைய கட்சித் தலைவர்கள் ஒன்றாகக் கூடி இவ்விடயம் தொடர்பாக ஆராய வேண்டும். பாதுகாப்புத் தொடர்பாக அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கலந்தாலோசிக்க வேண்டும். விசேடமாக இந்த விடயத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நாட்டின் தற்போதைய பாதுகாப்புத் தொடர்பாக எம்மால் திருப்தியடைய முடியாது. இந்த நாசகாரச் செயலுக்குப் பின்னால் யார் உள்ளார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

சிலரை சந்தேகத்தின்பேரில் கைது செய்து, அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதையடுத்து பாதுகாப்புத் தரப்பினர் விடுவித்து விடுகின்றார்கள். இவ்வாறானவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பித்துச்செல்லும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. எமக்கு இவ் விடயத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதாவது இதன் பின்னணியில் இருக்கும் முக்கியஸ்தர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பித்து இருப்பார்களோ என்னும் சந்தேகம் எழுந்துள்ளது.

அத்தோடு இன்னும் கண்டுபிடிக்கப்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன. தீவிரவாதிகளுக்கான பொருட்கள் எவ்வாறு கிடைத்தன, இதற்கு உதவி செய்த அதிகாரிகள் யார் என அனைத்தையும் விசாரிக்க வேண்டும். இந்த விடயத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்துள்ளதாக எமக்குத் தெரியவந்துள்ளது. ஆனால் அந்த ஆணைக்குழு கூடி இது தொடர்பாக ஆராய்ந்ததா? அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டதா? என்பது தொடர்பாக எமக்குத் தெரியாது. இந்த ஆணைக்குழுவும், பழைய ஆணைக்குழுக்கள் போன்று இருக்குமா என சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனை அரசாங்கம் உரிய முறையில் கையாள வேண்டும். இவற்றை மேற்கொள்ளத் தவறினால், எமக்கும் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே நாம் சட்டத்தை கையில் எடுக்காதவகையில் அரசாங்கம் செயற்பட வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும். முடிந்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அனைவரும் ஒரு அரசாங்கமாக ஒருங்கிணைந்தால் கூட சிறப்பாகத்தான் இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.●

## மனித மாண்பை.....

04ஆம் பத்தக் தொடர்ச்சி

ஜெனீவாவிலுள்ள ஐ.நா. அலுவலகங்கள் மற்றும் பன்னாட்டு அமைப்புக்களில் திருப்பீடத்தின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பணியாற்றும் பேராயர் இவான் யுர்கோவிச் அவர்கள் "வளர்ச்சியடைவதற்கு உரிமை" என்ற தலைப்பில் நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தில் உரையாற்றியவேளை மனித உரிமையாக வளர்ச்சியடைவதற்குரிய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று கூறினார். வளர்ச்சிக்குரிய திட்டங்களில் மனிதர் மையப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஒருங்கிணைந்த மனித முன்னேற்றம் ஒரு சிலருக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் கிடைப்பதற்கு வழியமைக்கப்பட வேண்டும் என்றும் உரையாற்றிய பேராயர் யுர்கோவிச் அவர்கள் வளர்ச்சியடைவது தனது கடமை என ஒவ்வொரு மனிதரும் பொறுப்பேற்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

மனித மாண்பை மதிப்பது நீடித்த மற்றும் நிலையான ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்கு மற்ற எல்லாவற்றையும்விட அவசியமானதாகும் என்று வலியுறுத்திய பேராயர் யுர்கோவிச் அவர்கள் 2030ஆம் ஆண்டின் வளர்ச்சித்திட்ட இலக்கை எட்டுவதற்கு நாம் விரும்பினால் இப்பூமி மற்றும் ஏழைகளின் அழுகுரலுக்குச் செவிமடுக்க அதிகமதிகமாக உலகினர் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.●

# நீங்காத நினைவுகள்

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 08 1939



உதிர்வு 11 05 2017

### திரு. மிக்கேல் சந்தான்

(பிச்சகுளம், முருங்கன்)

அன்பு கொண்ட உங்கள் முகம் - மறைந்து
ஈராண்டுகள் ஆனாலும்
உம் நினைவுகள் எம் மனதை விட்டு
மறையாதப்பா ஓர்நாளும்
அன்பிலும், பண்பிலும் எம்மை வளர்த்து
மண்ணில் வாழ்ந்த காலம் போதுமென்று
விண்ணகம் காணச் சென்றீரே
என்றும் உம் ஆன்மா சாந்தி பெற
இறைவனிடம் இறைஞ்சுகின்றோம் நாம்.

**பிரிவால் நினைந்துருகும்:** மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 16ஆம் ஆண்டு, 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி





### திருச்செல்வம் தாவீது தாவீது ஜீவராணி

(முருங்கன்கமம், முருங்கன்)

மலர்வு : 10 - 02 - 1946
உதிர்வு : 06 - 02 - 2003

மலர்வு : 21 - 12 - 1942
உதிர்வு : 13 - 05 - 2018

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**

அன்பான எம் தெய்வங்களே!
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும்
எம்மைவிட்டு விலகாது உம் நினைவு
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

***உம் பிரிவால் துயருறும்:***
*பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*

## 06ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 07 1942



உதிர்வு 22 05 2013

### திரு. செபமாலை வேதநாயகம்

(ஆவணம், நானாட்டான்)

அன்போடும், பண்போடும் அகிலத்தில் வாழ்ந்தீரையா!
இன்பமாய் இறைபணிதனை இகமதில் ஆற்றினீரே!
ஆண்டவர் அடிசென்று ஆண்டுகள் ஆறானதே!
ஆறுமா எம்மனம் தேடுதே உம் முகம்!
fhyqfs;fi uej;jhYk;ck;fhy;jlk;gwpe;eh
fhynkyyhk;thoe;jpLNthk;-eP
tssyhk;,iwtdhd;tyJGwk;mkue;jp
gsp;sfs;ehk;ckf;fhfg;gpuhu;jid nra;fpNwhk;!

**பிரிவால் நினைந்துருகும்:**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 11 1972



உதிர்வு 24 03 2014

### திரு. தே. அமலநாதன்

(குமநாயன்குளம்)

**"படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது" (தி.பா. 94:1)**

ஆண்டாண்டு காலம் உம் நினைவுகள் வந்தாலும்
புன்னகைத்த உம் வதனம் எம் கண்களில்
நிழலாய் வந்திடுமே! எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உம்மில் நாம் கொண்ட பாசம் மாறிடுமோ?
இன்பத்தில் துன்பத்தில் எம்மோடு இருந்தாய்
இணைந்து வாழ்ந்தோம் ஓர் உறவாய்
இறையவனின் அடியானாய்
இன்புற்று இருந்த உம் வாழ்வு இறைவனில்
இதைய சாந்தி பெற வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** குடும்பத்தினர்

## 09ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 11 1946



உதிர்வு 14 05 2010

### திருமதி. தே. றீற்றம்மா

(குமநாயன்குளம்)

தாயே என்று அழைத்தோம், நீரில்லையே
பாசத்திற்கு ஏங்குகின்றோம், நீரில்லையே
ஒன்பது வருடங்கள் கடந்தும் - உம்
நினைவுகள் மறையவில்லையே
உம் வாழ்வு ஆலம் விழுதுபோல்,
எம்முன் உறுதியானதே!
ஆயினும் உம் பிரிவு இன்னும் எம்
உள்ளங்களின் கண்ணீர் ஓடைதானே
இறைவனின் தாயே! எம் தாய்க்கு
உம் பாதத்தில் இடம் தாருமம்மா!

**பிரிவால் நினைந்துருகும்:**
குடும்பத்தினர்.

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 09 1945



உதிர்வு 31 05 2014

### திருமதி. றெஜினா நீக்கிலாப்பிள்ளை

(அச்சுவேலி, யாழ்ப்பாணம்)

**"உயிருள்ளவரை உம்மை நேசித்தோம், இறந்த பின்னும் உம்மை மறவோம்"**

புன்னகையானது உன் முகம் அம்மா
புண்படுத்தாதது உன் மனம் அம்மா
பாசமானது உன் கரங்கள் அம்மா
பாத்திருக்க பிரிந்து செய்றாயோ அம்மா
நேசமாகப் பழகுவாயே அம்மா
நினைத்துக் கொண்டிருக்கின்றோம் அம்மா
உம் நீங்காத நினைவுகளை
நித்திய இறைவனோடு சங்கமமாக - உமக்காக
செபிக்கின்றோம் எப்போதும்.

**பிரிவால் நினைந்துருகும்:** குடும்பத்தினர்.
தகவல்: அருட்சகோதரி. ம. அஜந்தா.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 21 - 03 - 1935
உதிர்வு : 04 - 06 - 2018

### திரு. பொன்ராசா அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியர் புனித கென்றியரசர் கல்லூரி, யாழ்ப்பாணம் இறம்பைக்குளம், வவுனியா)

அப்பா என்றொரு ஆலமரம்
இறம்பையூரின் இறைப்புதல்வன்.
இன்று உங்கள் அன்பின்றி
நாங்கள் அங்கலாய்க்கின்றோம்
அன்பின் இலக்கணமாய், அரவணைப்பின் உறைவிடமாய்
நீங்கள் வாழ்ந்த காலங்கள் பசுமையாய் எம் நெஞ்சில்
நிலையாய் இருக்குதப்பா! விண்ணாளும் தேவன் பாதம்
விருப்புடன் சென்ற புண்ணியனே ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம் நெஞ்சம், உயிருள்ள காலம் வரை
உம் நினைவுடனே வாழ்வோம் அப்பா.
நிகழ்வுகள் அனைத்தும் நினைவுகள் ஆகி நிரந்தரமாயிற்று
சிரித்தமுகம் எம்மை விட்டுப்பிரிந்து உம் பாசம்
ஒன்றே எம்மை விட்டுப் பிரியாது எம் வாழ்நாளெல்லாம்.

ஆண்டவரே நீரே என் புகலிடம் என உம்மிடம் சரண் அடைந்த அடியான் அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராஜாவிற்கு இரக்கம் காட்டி அரவணைத்து நித்திய பேரின்ப வீட்டில் இடம் அளித்தருள வேண்டுகின்றோம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலியில் பங்குகொண்டு செபிக்க வேண்டுகின்றோம் (03.06.2019ஆம் திகதி திங்கட்கிழமை, காலை 06.00 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயம், இறம்பைக்குளம், வவுனியா)

**பிரிவால் நினைந்துருகும்:**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு
## பொன்விழா வாழ்த்து!



**திரு. திருமதி. சூசைதாசன் லோகு**
**யோசப்பின் மலர் மஸ்கிறிஞ்ரு**
(03ஆம் வட்டாரம், பேசாலை)

**1969.05.17 - 2019.05.17**

அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும் இலக்கணம் தந்த சூசை மலர் தம்பதியினரே! இல்லறம் எனும் நல்லறத்தில் இணைந்து இனிய பிள்ளைச் செல்வம் பெற்று அதில் ஒன்றினை குரு பணிக்களித்து சீருடனும், சிறப்புடனும் அருமையாய் வாழ்ந்திட்டீரே பல்லாண்டு வாழ்ந்து இறையாசீர் நிறைந்து எமக்கும் இறையாசீராய்த் திகழ இன்புற்று வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்-** பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், நண்பர்கள்.





**Head Office:** #345, Galle Road, Colombo 04, Sri Lanka.
Tel: 011 2553440, 2553441

**Jaffna Branch:** #272/1, Stanley Road, Jaffna, Sri Lanka.
Tel : 021 2224647, 2219424

**Vavuniya Branch:** #45 B/1, 2nd Cross Street, Vavuniya, Sri Lanka.
Tel: 024 2226800, 2226801

**Trincomalee Branch:** #334, Court Road, Trincomalee, Sri Lanka.
Tel: 026 2227242, 2227244





# நீங்காத நினைவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சந்திபோகு சிறில்**
(தபால் ஊழியர் - நானாட்டான்)

மலர்வு : 25 - 04 - 1966
உதிர்வு : 30 - 05 - 2018

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**

கருவாக உருவாகி கல்வியிலே ஆளாகி
கலையையும் கைக் கொண்டு
கண்மணி போல் எமை வளர்த்த
கனிவான எங்கள் அப்பா!
மண்ணை விட்டு சென்று - நீங்கள்
விண்ணிலே அமர்ந்து இன்று
ஆகியது ஓர் வருடம் - என்றாலும்
என்றுமே அழியாத நிஜமான நினைவாக
நிலைப்பீர்கள் எங்கள் இதயங்களில்
எங்கள் உள்ளம் உருகுகின்றதே - அப்பா
உங்கள் உருவம் காணாது இன்று!
உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற
இரஞ்சுகின்றோம் எம் இறையை!

**பிரிவை நினைந்துருகும்,** பாசம் நிறைந்த மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## 27ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. விக்ரர் சலமோன் குரூஸ்**
**(மக்கள் வங்கி லிகிதர்,**
**சின்னக்கடை, மன்னார்)**

மலர்வு : 31 - 12 - 1948
உதிர்வு : 05 - 05 - 1992

***"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது."***

நிழல் போல் இருந்து நினைவான என் அப்பா!
காலமெல்லாம் எம்மைக் காத்திருப்பீர்கள் என்றிருக்க
கண் இமைக்கும் நேரத்தில் கண்ணீர் துளியாகினீர்கள்
இமைகள் நனைய, இதயம் நொருங்க,
எம்மை தவிக்க விட்டு
கடமை முடிந்ததென்று கடவுள் பாதம் அமர்ந்தீர்களோ.
நீங்கள் எங்களை விட தூரத்தில் இல்லை
நீங்கா நினைவுகளில் வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆன்மா சாந்திபெற உள்ளத்தால்
வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 25 † 12 † 1928



உதிர்வு: 12 † 05 † 2017

**திரு. செ. இம்மானுவேல் குரூஸ்**
**(வேதம் குரூஸ் - வங்காலை)**

ஆண்டுகள் இரண்டு கடந்து விட்டன
உம் பிரிவின் துயரோ எம்மில் மறையவில்லை.
எத்தனை யுகங்கள் கடந்தாலும்
உம் மீது வைத்த பாசம் என்றும் மாறாது ஐயா!
நீர் இவ்வுலகில் ஆற்றிய சேவைகள் எம்மை வியக்கவைத்தே நிற்கின்றீர். மறைந்தாலும் உம் ஞாபக சின்னங்கள் உம்மை மீண்டும் மீண்டும் ஞாபக மூட்டுகின்றன.
நீர் எமக்குக் காட்டிய வழிகள் என்றும் நினைவில் இருத்திக் காப்போம் நாம். உம் நற்செயல் கூர்ந்து இறைவன் அமைதியில் இளைப்பாறச் செய்வாராக. உம் ஆன்மா இறைவனில் அமைதி பெற உமக்காய் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** மனைவி, பிள்ளைகள், சகோதரர், மருமக்கள்கள், பேரப்பிள்ளைகள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 23 † 01 † 1957



உதிர்வு: 02 † 05 † 2017

**திரு. கிறிஸ்தோப்பர் அந்தோனி**
**(சிறுக்கண்டல், முருங்கன்)**

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான். 11:25)**

கனவில் கூட நினைக்கவில்லை ஐயா
மிக விரைவில் காலம் உம்மை பிரிக்குமென்று
உம் நேச உறவுகளை தவிக்கவிட்டு
எம்மவர்க்காய் பரிந்துரைக்க விரைந்திட்டீரோ
ஆண்டு தான் இரண்டு ஆனாலும்
உன்னுருவம் எம்மைவிட்டு அகலவில்லை
நீங்காத உம் நினைவுகளோடு - உன் ஆன்மா
இறையமைதி பெற வேண்டுகின்றோம் இறைவனையே

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், சகோதரர், உறவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 06 † 11 † 1934



உதிர்வு: 15 † 05 † 2018

**திரு. அந்தோனிப்பிள்ளை இராசதுரை**
**அன்னம்மா (பூமணி)**
**(முருங்கன்பிட்டி, முருங்கன்)**

வாழ்க்கை என்னும் பாதையில்
வழிகாட்டி, எம்மை நல்வழி நடத்திய - தாயே!
இன்று தடம் மாறி, திடம் இழந்து தவிக்கின்றோம் - நாம்
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் பசுமையான நினைவுகள்
இன்றும் எம்மைச் சுற்றுகின்றன.
நித்தம் உங்கள் துணை தேடி ஏங்குகின்றோம் நாம் அம்மா!
எம் வாழ்வில் இழந்துவிட்ட உங்கள் இடத்தை எவரால் நிரப்ப முடியும்? உங்கள் ஆன்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்